# அருளொளி

# අරුලොලි - ARULOLI



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

98
ளொ
PR

கார்த்திகை ௴ NOVEMBER

1967

NO WONDER! NO MIRACLE!!

Still you will be astonished to see

*Meihandan Purse Diaries &*

*Meihandan Plastic Diaries*

**of Various sizes**

and also

**TABLE (Appointments) CALENDARS**

competing with the best imported productions

## BUT, PRICED ONLY HALF

They are symbols of artistic beauty and typographic perfection. Designed by meticulously skilled hand as high class presentation novelties and low priced day to day utility products

**ASK FOR**

A Meihandan Diary or a Calendar and examine it yourself. Available from all reputed dealers.

**MEIHANDAN**

- **English purse Diary** (with Purse)
- **Gem Purse Diary** (with Purse)
- **Sinhalese purse Diary** (with Purse)
- **Tamil Purse Diary** (with Purse)
- **Desk Diary** (with Plastic Cover)
- **Official Diary** (with Wallet Cover)
- **Table** (Appointments) **Diary** (Plastic)
- **Lawyers' Diary** (with Plastic Cover)
- **Doctors' Diary** (with Plastic Cover)
- **Wallet Diary** (with Beautiful Wallet)
- **Business 'A' Diary** (with Plastic Cover)
- **Business 'B' Diary** (with Plastic Cover)
- **Sinhalese Calendar No. 1**
- **Thirukkural Calendar No. 1**
- **Table** (Appointments) **Calendar**

★ **PLASTIC GOODS:** Money Purses, Wallets, Ladies' Hand Bags, Document Cases, Book Covers, Diary Covers Etc., all out of quality plastics. Durable products in attractive designs manufactured by us.

★ **PROCESS BLOCKS:** Process Blocks (Half-tone, Line) and tri-colour blocks to produce multi-coloured effects, from the smallest size to the largest (16" × 20") size. We have the largest size up-to-date commercial block making plant in Ceylon. Best workmanship, Reasonable charges.

★ **CALENDARS:** Meihandan Thirukkural Calendars, Panchanga Calendars, Nanmoli Calendars, English Calendars, Sinhalese Calendars, Roll Calendars Etc. Best calendars suited for impressive business advertising at competitive prices.

★ **DIARIES:** Meihandan English Diaries, Desk Diaries, Official Diaries, Appointment Diaries, Lawyers'-Doctors' Diaries, Business 'A' Diaries, Business 'B' Diaries, Gem Diaries, Thirukkural Diaries and many other varieties of Purse diaries, containing funds of informations and designed for every individual's taste and requirement. Suitable for all kinds of business advertising and commercial compliments. These diaries excel the imported diaries in qualit y and standard.

★ **PICTURES:** We design, make blocks and print multi-coloured, fine art, Religious, Scenic and Fancy pictures for calendars and for advertising purposes

★ **PRINTING TYPES:** We manufacture Printing Types in English, Sinhalese and Tamil in various designs and in most modern faces. The types used in printing the leading Tamil Daily 'Virakesari' and the sinhalese types used in printing the famous Sinhalese 'Epa' Almanac are Cast & Supplied by us.

★ **PRINTING:** We are long standing printers for several reputed firms and local industries. Printing of any and every description undertaken and executed to the entire satisfaction of our customer. Neat Workmanship. Prompt delivery. Reasonable charges.

# THE MEIHANDAN PRESS Ltd.

**161, SEA STREET, COLOMBO.**

**Branch: JAFFNA.** **Phone: 79141.**

# அருளொளி

250.98
அருளொ.
SLPR

# අරුලොළි ARULOLI

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6



*

*EDITORS:*

**Anbur Boopathydasar & Karthigesu Swamygal**

*

4597

*PUBLISHED BY:*

**THE DIVINE LIGHT MOVEMENT**

ARULOLI NILAYAM

31/21, DAWSON STREET,

COLOMBO-2.

*

*PRINTED AT:*

**THE MEIHANDAN PRESS LIMITED**

161, SEA STREET,

COLOMBO-11.

FERROUS AND NON-FERROUS CASTINGS

MACHINERY REPAIRS AND MAINTENANCE

FACTORY CONSTRUCTION

TILE PRESS AND DIES

DESICCATED COCONUT MILLS

WATER SUPPLY AND DRAINAGE

FIBRE MACHINERY

FABRICATION AND ERECTION OF STEELWORK

HOUSE CONSTRUCTION

ESTATE SUPPLIES

SAMUEL SONS & CO LTD

371 Old Moor Street, Colombo 12.
Telephone: 2341

# ஒளியுள்

செப்புமுய ரிப்புவியிற் சித்திரமுத் தென்னவரு
நற்புகழ்சேர் சற்குருவை நாடினுல் — பொற்புயரும்
பத்திவரும் புத்திவரும் பாமரர்க்கும் ஞானநெறி
முத்திவருஞ் இத்தரையிற் றூன்.


1. அருட்தாளினிலே ... 1 A
2. அருளொளி விநாயகர் பாமாலை ... 1
2. சித்தி(ர)முத்து விநாயகர் சரணம் ... 2
3. அருளொளி வாழ்த்து ... 3
4. பதியைத்துதி ... 5
6. சற்குருசரணம் ... 7
7. அடிகளார் ஆசி ... 9
8. அருளொளி நற் பேரவை வாழி ... 13
9. ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள் ஆசி ... 15
10. மனிதப்பிறவிக்கு வேண்டிய புனிதத்தன்மைகள் ... 17
11. மகான்கள் சமாதியாகிய மகத்துவம் பெற்றஸ்தலங்கள் ... 19
12. மண் சினியாகமலர்ந்ததம்மா ... 20
13. மூலப் பொருளறி கால்லீ வெல்லலாம் ... 21
14. மனிதன் அன்றும் இன்றும் ... 23
15. அருளொளியைக் காணவாரீர் வாரீர் ... 24
16. யான் கண்ட அருட்செல்வர் ... 25
17. தன்னம்பிக்கையே சிறந்த செல்வம் ... 26
18. நலிவடை புன்னுடல் பொலிவடை பொன்னுகும் ... 27
19. யோகர் தந்த முத்தாரம் ... 29
20. இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி ... 30
21. அருள் ஒளி வழிபாடு ... 31
22. பிறந்ததின் பயன்தான் என்ன? ... 32
23. எப்படிச் சொல்லமுடியும்? ... 33
24. முருகா நீ வரவேண்டும் ... 24
25. அருட் பிரகாசர் கண்ட அருளொளி இன்பம் ... 35
26. பரிபூரணனந்தமே ... 36
27. கடமைகளாற்ற மடமைகளகற்று ... 37
28. நீ ... 38
29. அருணன் உதித்துவிட்டான் ... 39
30. நீ யார் ... 40
31. சும்மாயிரு ... 41
32. ஏன் அழுநீர் ஐயா? ... 44
33. உழுவோம் உளந்தனை ... 45
34. மனத்தது மாசாக மாண்டார் நீராடேல் ... 47
35. இளநலம் ஏமாப்புடைத்து ... 50
36. அருளொளியும் இஸ்லாமும் ... 53
37. தேவாலயத்துள் தெயவம் காண்மின் ... 55
38. அருளின் பெருமை அறியார் செறியார் ... 58
39. ශ්‍රී සත් චිත්‍රමුත්තු අඩිගල් ස්වාමිපාදයාණෝ 61
40. හොඳ මොඩයෙක් වෙන්න ... 65
41. **His Holiness Sri Sath Chithramuttu Adigal** ... 67
42. **Self Realization** ... 70
43. **The mystery that Surrounds death** ... 72


மூலன் வடலூரரார் முத்தனிவர் மூட்டுவித்த
சீல அருளொளியாம் தீபத்தை—ஞாலமிருள்
போக்கிடவே ஈந்தபெரும் புண்ணியம் செய்தாரரு
தேக்கிடவே கார்த்திகேசர் தேர்ந்து. [ளேத்

# அருட்தாளினிலே

"கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு."

—ஒளவைகுறள்.

தேமதுரத் தமிழ் படைத்து, தனிப் பெருந் தத்துவங் கண்ட தக்கோர், இம்மகிதலத்தார் தாமும் உணர அவற்றை ஏடுகளில் எழுதி வைத்தார்கள். காலத்தால் அழிந்தவை பல. ஞாலத்தில் இன்று நிலவுபவை மிகச் சில. இவற்றினும் மாந்தர்தம் அறிவின்மையால் புறக்கணிக்கப்பட்டு அழி நிலை பெறுபவை அதிகம். இந்நிலைக்குக் காரணம் கூறுகிறார் முத்தமிழ் வளர்த்த மூதாட்டி. பழுக்கக்காய்ந்த இரும்பானது நீரைக்கிரகிக்கும். அப்போது அது நீரையும் அழித்து—ஆவியாக்கி, தானும் தன் செம்மையை இழந்து கருமை கொள்கிறது. இதே போன்று மகிதல மக்கள் பலர் அதமர்களாக, தமிழ் மறையின் தத்துவத்தை உணராது, அதைப் பொய்மை யென்று கூறி இகழ்ந்து நாத்திகம் பேசி சற்றில் நாதியற்று மாழ்கிறார்கள்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த முன்னோரில், பொருளுணர்ந்தும் பொருளுணர்த்தியும் மறைகாத்தனர். அதே போன்று இன்றும் ஆதீனங்கள் அமைத்தும், சங்கங்கள் சமைத்தும் அறிவுத் தொண்டு ஆற்றுகிறார். இவர்களது சிறிய சேவையே இன்றும் இத்திருமறைகள் அழிந்தொழியாது காக்கப்பட்டுவருவதற்குக் காரணமாகும். இவர்கள் தாம் அறிந்தவரை வியாக்கியானஞ் செய்வதோடு முழு நூலையும் பாதுகாக்க முயல்கிறார். முழுவிளக்கம் பெறமுடிவதில்லை. இத்தகையோரை ஒளவையார், காய் பாலில் நெய் போன்றோர் என உவமித்துள்ளார். ஒரு பானை பாலில் ஒரு சிறிதே நெய்தோன்றும். அவர்கள் பேதமின்றி நெய்யையும் மோரையும் பயன்படுத்துகிறார்கள்.

உள்ளொளி பெற்று உருவெளியில் கலந்து பிரணவப் பொருளுணர்ந்த பெரியோர், மறைகூறும் தத்துவங்களை—உண்மைகளை-தம் மெய்களிற் கண்டு, பயின்று, அவற்றிகு உதாரணமாக விளங்கி, மறையைக் காக்கவேண்டுமென்ற கருத்தின்றி, தாமே அதுவாக—மறையாக-மறையில் மறைகின்றார்கள். இவர்களைப் போன்ற ஞானிகளைப் பற்றிக் கூறும் போது, கரும்பினின்றும் சாறு பிழிந்து, அச்சாற்றை காய்ச்சி கட்டியாக்கி பயனடைவதோடு சக்கையை யெறிந்து விடுபவர்கள் என்று கூறுகிறார்.

இத்தகையோர் மூவரிலுஞ் சிறந்தவரென-உத்தமரெனக் கூறப்படும் மெஞ்ஞானிகள் வரிசையில் வந்த மாதவமணி தவத்திரு ஸ்ரீ சத் சித்ரமுத்தடிகளார். மறை கூறும் தத்துவச் சாற்றைப் பிழிந்து தமது தவக்கனலில் காய்ச்சி கட்டியாக்கி அக்கட்டிகளை—கற்கண்டை- அன்பர்கள், தொண்டர்கள், பத்தர்கள், பக்குவிகள் முதலானவர்களுக்கு தகுதிக்கேற்ப அளித்து வருகின்றார். அவற்றை நாம் எல்லாருக்கும் பகிர்ந்தளிக்க முனைந்து, மத்திமர்கள் என்று வர்ணிக்கப்பட்ட சங்கம் வைத்து மறைகாக்கும் தொண்டருக்கும், அதமர் எனத் தோற்றும் நாத்திகவாதிகளுக்கும், கற்கண்டின் சுவையை உணர்த்த விரும்பி, அருளொளி என்னும் ஏட்டினை குருவருளால் தெரிந்து, முத்திங்கட் சுடராக, மறை கூறும் உட்கருத்துகளை விளக்கியும் பிறமதத் தத்துவங்களை ஆராய்ந்தும், மும்மொழியில் சகல இனமதத்தவர்க்கும் சமரச நெறிகாட்டவும் முன் வந்துள்ளோம்.

எமது இச் சேவைக்கு ஆத்மீகபலத்தை அளித்த அருட்தகையர் சற்குரு சித்ரமுத்தடிகளாரின் அருட்தாளினில் இம்மலரினைச் சாத்தி, அவர்தம்ஆசியை நாடுகின்றோம்.

இம்மலரை ஒளிபெறச் செய்ய விடயதானஞ் செய்த அன்பர்கள்—அறிஞர்களுக்கும், விளம்பரதானஞ் செய்த அனைவருக்கும், உரிய காலத்தில் வெளியிடச் சிறந்த முறையில் பணியாற்றி இம்மலரைப் பொலிவுறச் செய்த மெய்கண்டான் அச்சகத்தாருக்கும் குருபிரான் ஆசியும் இறையருளும் என்றும் கிட்டுவதாக!

—ஆசிரியர்—



வெற்றி

# ஆத்ம சாந்தி நிலையம்

அருளொளி ஓங்கித்
திருவருள் பெருகுக!

நலமுண்டாம்
குறையணுகாது!

---

தேதி: 23—8—1967.

மனித சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு, அறவுரைகள் நிரம்பிய பத்திரிகைகளும் தோன்றி நாட்டிற்கு நற்பணிகள் செய்து வருகின்றன. அதனூடு நமது ஈழ நாட்டிலிருந்து "அருளொளி" மகுடந் தாங்கி, ஒரு சஞ்சிகை உதயமாகி வெளிவருமானால், அது மக்கட்கு மகிழ்வையும், மனநிறைவையும் தரத்தக்கதே.

அருளொளி யென்பது, அகிலமெல்லாம் நிறைந்து நிற்கின்ற அழியாத சக்தி! அதை அறிவாலறிந்து, ஆனந்த மடைதற்கு மனிதப்பிறவி தான் தகுதியுடையது! அருளொளிதான், அனைத்துயிர்கட்கும் பொதுவானது. ஆகவே, அருளொளியுள் அடங்கிக்கிடக்கின்ற அற்புதமாகிய உட்பொருள்களைத் தேடியெடுத்துத்தேக்கிச் சேகரித்து வைத்துப் பத்தர்களாகிய நீங்கள் பயனடையுங்கள் என்று வாழ்த்துகின்றோம்! சுபம்.

இங்ஙனம்

உங்கள் — **சித்ரமுத்தன்**

# CEYLON'S PREMIER PEN

# "P P P\66"

MANUFACTURED BY :

K. G. INDUSTRIES
COLOMBO 10.



*With the Compliments of:*

## *"Free Lanka Industries"*

MANUFACTURERS OF:

PLASTIC GOODS
P. V. C. GOODS
RUBBER BALOONS
SEWING THREAD
TWINE
CONFECTIONERY
CAMPHOR

**MINUWANGODA.**

TELE: Phone: **815**
Grams: **Kankeyan**

*With Best Compliments*

*from:*

**T. NEETHIRAJAH** J. P., M. M. C.

89, NEW CHETTY STREET, COLOMBO-13.

## ஆவ்ரோ நீலம்

ஆடைகளை பிரகாசிக்கச்
செய்கிறது.




தலைமயிரைப் பாதுகாத்து நீண்டு
அடர்த்தியாக வளரச் செய்வது

## ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

தலைவலி, பீனிசம், கண்,
சிரசு சம்பந்தமான நோய்
களைக் கண்டிக்கிறது.



விலை ரூ. **3-50**

எவ்வித வியாதியானாலும்
டாக்டர் T. H. மதுரநாயகம்
வைத்திய ராஜ் அவர்களை கலந்து
ஆலோசியுங்கள்.

**ஞானசுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு.

**For your Building Materials, Estate Supplies**
**of Factory Requisites**

CONTACT

# *American Engineering Corporation*

HARDWARE MERCHANTS
**311, OLD MOOR STREET, COLOMBO-12.**

PHONE: **4430**

GRAMS: **"Tiltoy"**

# அருளொளி நற் பேரவை வாழி!

உருவினைக் கடந்தே ஒளிர்தரும் பொருளாய்
உலகுயிர்க் குள்ளூறும் உயிராய்
இருளினைப் போக்கும் தனிப்பெருஞ் சுடராய்
என்றுமங் காதபே ரொளியாய்த்
தெருள்தரும் ஒன்றைக் கடவுளை ஞானச்
சிறப்புறு சோதியாய்ப் பணியும்
அருள் ஒளி நெறியின் திறமெலாம் காட்டும்
அன்பர்கள் பேரவை வாழி!

சாதியும் குலமும் சமயமும் தம்முள்
சண்டைசெய் திடுமவர் உளத்துக்
காதியும் கடிந்தும் மோதியும் உறவே
கருத்தினில் நிற்றலைக் கண்டோம்
ஆதியோர் அந்தம் இல்லதாம் பொருளை
அனைத்துயிர் களுக்குநல் லுயிரைச்
சோதியாய் வணங்கும் அருளொளி யன்பர்
தோற்றிய நிலையங்கள் வாழி!

—கி. வா. ஜகந்நாதன்—

All kinds of

* Oil
* Hardware
* Building Materials
* Estate Requisites
* Desiccated Coconut Fibre and
* Rubber Mill Requisites

**The International Hardware Stores**

384 & 449, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Telephone: **3162**

Telegrams: **"Intersong"**

*With the Compliments of:*

**N. Vaitilingam & Co. Ltd.,**

*Colombo & Jaffna*

**ராமகிருஷ்ண மிஷன்**

கொழும்புக் கிளை

# ஸ்ரீமத் ஸ்ரீ ரங்கானந்த சுவாமிகளின் ஆசிமடல்

**அன்புடையீர் !**

ஆவணித் திங்களில், ''அருளொளி'' மலர் ஒன்று முத்திங்கள் வெளியீடாக முதல்மலர் வரப்போவது கேட்டு மிக மகிழ்கின்றோம். அச் சமய வெளியீடுகள் சமரச நெறியை மக்களிடையே பரப்பி உயர்ந்த கோட்பாடுகளை எடுத்துக்காட்டும் தொண்டு அவைகட்கு ஏற்பட்டுள்ளன. இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள தொண்டர்களுக்கு மங்களம் உண்டாவதாக !

மங்களம் என்பது சிவம் என்பதாம். மங்களம், நன்மை, அமைதி, அழகு என்ற சொற்கள் சிவத்தையே குறிக்கின்றன. ஆண்டவன் பொழிவது கருணை. அதுவேதான் அருள் எனப்படுவதும். சித்தம் பலவாறு சிதறிப் போனால் அதற்கு அமைதி இல்லை; சிவம் இல்லை! அமைதியை அடைய மனம் ஒருமைப் படல் வேண்டும். ஒருமைப் பட்ட மனத்தை ''ஏகாக்ர சித்தம்'' என்பர் ஆன்றோர்.

சித்தம் ஏகாக்ரம் அடைய வேண்டுமாகில் ஏகாந்தமான இடத்தில் அமர்ந்து உயர்ந்த எண்ணங்களையோ, அல்லது கடவுள் நினைவூட்டும் நாமம் அல்லது உருவத்தையோ, சிந்திக்கப் பழகவேண்டும். அதைத் தியானம் என்பர். நம்முடைய சிரத்தைக்குத் தக்கபடி பலன்கிடைக்கும். சிரத்தை, ஆர்வம், பணிவு இவையோடு தியானம் பழகுவது அமைதியை அடைய வழியாகும்.

அமைதி வளர வளர அழகும் பிரகாசிக்கத் தொடங்குகிறது. உள் உணர்வுக் கேற்ப புற அழகும் வியாபிக்கின்றது. பேச்சிலும் பண்பிலும் அமைதியும் அழகும் காணப்படும். சித்த விருத்தி நிரோதத்தால் பலம்—வலிமை—அதிகப்படும். இதுவே ஆத்மசாதனம். இதுவே யோகம்.

பக்தி, ஞானம், யோகம் ஆகிய வெல்லாம் இந்த அமைதி, அழகு, ஆனந்தம் ஆகிய மங்களத்தை அடைவதற்கான சாதனங்களாகும்.

ஆன்மீக சாதனத்திற்கு அடியார் உறவு அவசியமாகின்றது. சாரத்தை விட்டு சக்கையைப் பிழிவதால் பயன் கிட்டாது. எனவே, பகவத் பஜனை, தியானம், மௌனம் ஆகிய சாதனங்களை அடியார் குழு, படிப்படியாகக் கைக்கொண்டு உய்ய முயலவேண்டும், அதுவே நமது இலக்ஷியம் ஆகட்டும்.

கருணாமூர்த்தியான ஆண்டவன் திருவருளால் நம் நோக்கங்களும், சாதனங்களும் வெற்றி பெறுவதாக! சிவம் சாந்தம் சுந்தரம் அத்வைதம்! அடியார் அனைவர்க்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) **ஸ்ரீரங்கானந்த சுவாமி**

Space donated by:

Swamy's Disciple

Space donated by:

LEYDEN INDUSTRIES LTD.,

JAFFNA.

# மனிதப் பிறவிக்கு வேண்டிய புனிதத் தன்மைகள்

ஸ்ரீசத். சித்ரமுத்தடிகளார் இலங்கை வானொலியில் 10-12-1954 உதயத்தில் அருளிய உரைகளை இங்கே மீண்டும் பிரசுரிக்கின்றோம்

எமது மனமலர்களாகிய மக்களே!

நீங்களிப்புவியில் பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றிருக்கின்ற படியால் உங்கள் வாழ்க்கையின் பயனை, வழிதவறிய மதியால் சிதைவு செய்யாதபடி இல்லறதருமத்திலிருந்து ஒழுக்கங்காத்து, இணையற்ற ஆத்ம சக்தியைப் பெற்றுய்வீர்களாக!

தருமநெறியில் நிலைநிற்கத்தக்கதாக இத் தரணி அழகிய இயற்கையமைப்புடன் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றதென்பது இவ்வுலகறிந்த உண்மை. அத்தகைய சக்தி வாய்ந்த சிருஷ்டிக்குள்ளடங்கிய ஜீவராசிகளைனத்திலும் மனிதரினம் மட்டும் உயர்தியையாகக் கருதிப் புகழப்படுகின்றது. அம் மனித சமுதாய வாழ்க்கைப் படலமானது அன்பின் அடிப்படையிற்றொடங்கி, அறநெறியிலொழுகி முடிவையடைதல் முக்கியமென பல வேதாந்தங்களும் முறையிட்டெச்சரிக்கின்றன.

## நேர்மை கலையறிவு நெஞ்சூக்க மித்தகைய ஓர்மையுள்ள தொண்டனுயர்வு.

ஒப்பற்ற ஞானவீரரும், உண்மைக் குழைக்கின்ற தேசத் தொண்டர்களும் நம் நாட்டுப் பணியிலிறங்கி நல்லவை செய்யத் துணிந்து முன் வருவார்களாயின், அவ்வமயமே அன்பும் அறமும் தழைத்து ஒழுக்கநெறியும் ஒற்றுமையுமுயரும். அச்சமும் அகங்காரங்களுமகன்று அருள்குடி கொண்ட மக்கள் மிகுந்து நீதியை நிலைநாட்டுவர்.

## அடக்கம் பொறுமை அருளுறவு தெய்வீகத் திடத்திலிணைக்கும் தெளிவு.

இம்மாயப் பிரபஞ்ச மயக்கத்திற்ககப்படாத தெய்வீக மனிதர்கள் தனக்கென வாழாத தக்கோராவார். இல்லற தருமத்தை நடத்திக் காட்டுவார்கள். காமவெகுளிக்கு அகப்படார்கள். நாட்டுப் பணியை நற்றவமாகக் கருதியாற்றுவார்கள். காட்டிற்கு ஓடிவிடமாட்டார்கள். ஏழையாகவாழவும் சம்மதிப்பார்கள், ஆனாலவர்கள் கோழையாக மட்டிலும் உயிர் வாழார்கள். இத்தகைய சித்தந் தெளிந்த உத்தமர்கள் புனித மனிதர்களெனப் போற்றி தலைவணங்கவும் தகுதியுடையவராவார்கள்.

## சொற்றிறமையாளன் சுகந்தனக்கென் றெண்ணுதான் வெற்றிமிகக் காண விழைவன்.

மேடைப் பிரசங்கங்கள் மிகுந்த இவ்வாடம்பரவுலகில், சொல்லலங்காரங்களாக மட்டிலும் பேசிவிடாமல், செயலழகு தரத்தக்க வகையில் கடமையை நடைமுறையிலாற்றி வெற்றிகாண விழையும் வீரனெவனோ, அவனொருவனே சுயசுகம் வெறுத்த தொண்டன். சொல்லில் செல்வாக்குடையசுகிர்தன், சரித்திரப் பொன்னேடுகளில் பொறிக்கத் தகுந்த புத்திமான். இத்தகைய சுத்த வீரனை, மக்கள் துயரை மாற்றியமைக்கும் மாபெருந் தலைவனாகவும் கொண்டாடலாம்.

## உலகிற் குழைக்கின்ற உத்தமனின் சித்தமது கலங்கரை விளக்காகுங் காண்.

மேற்கண்ட பிரகாரம் உண்மை கண்டொழுகி, ''விழித்தெழுமனிதா'' வென்ற வேத வாக்கையும் மெய்ப்பித்து, பள்ளத்திற் பாய்கின்ற வெள்ளத்திற்கொப்ப, உள்ளத்துள்ளடங்கிய உணர்ச்சி வேகத்தை உச்ச நிலைக்குயர்த்தி, எத்தொண்டைச் செய்யினும், அத்தொண்டை அறத்தொண்டாகக் கண்டாற்றி அகமகிழ்வீர்களாயின், உங்களைச் சத்தியவந்தர்களென்றெண்ணிப் போற்றி செய்யலாம்.

**ஆர்வமிகுபண்பும் அறத்திடனு முண்டாகிப் பார்திகழச் செய்வீர் பணி.**

எமதிமையா விழிகளே!

இவ்வுலகமும் உலகைப் படைத்த இறைவனும், இரவுபகலற்ற நிலையில் இயங்காநிற்கின்ற சுகதுக்கமும், அனைவர்க்கும் பொதுவென்றுரராய்ந்துணர்ந்து, சீர்குலைந்த மக்களின் மனப்பண்பாட்டைச் செப்பனிட்டு, எதிர்கால மக்கட்கு நீங்கள் இணையற்ற வழிகாட்டிகளாகிப் பணியாற்றி கடவுளாகிய கர்த்தனைக் காணலாமெனத் திடங் கொள்ளுங்கள். அவ்வாறுயின் தெய்வநெறி தாண்டாத மனிதர்களாகவே மதிக்கப்படுவீர்கள்.

**ஆசாரந்தங்க அருளொளிரும் அவ்வமயம் கூசாமலோடுங் குறை.**

நல்லோர்கள் தொண்டு நாட்டில்பரவ ஆரம்பித்த பிறகுதான் அறியாமைமயிருளில் முடங்கிக்கிடந்த மக்கள், தங்களின் வாழ்க்கை அடிமைத் தளைக்குள் அகப்பட்டிருப்பதை உணரமுற்படுவர். விடுதலை வேட்கையும், வீராவேசமும் ஒன்று கலந்து அறப்போரிலிறங்கி அயராதுழைத்து முடிவில் வெற்றி காண்பர். இப்பிறவுலகச் சுதந்திரத்திற்குப் போராடி வீடும் நாடும் விடுதலையடைந்ததுபோதுமென்று இருக்கின்ற மக்கள் தனதகவுலக விடுதலையைப்பற்றி ஆராயாமலும் அக்கறைகாட்டாமலுமிருந்து வருவது வருந்தத் தக்கதேயாகும். ஆதலால் அக்குறையை நிறை வெய்தச் செய்தற்கு நீங்களனைவரும் ஆன்ம விசாரத்திலீடுபடுங்கள்.

**பஞ்சமாபாதகத்தின் பற்றகன்ற பக்தனுக்கு நெஞ்சிலிறை நிற்கும் நிறைந்து.**

அன்பின் வழிசென்று ஆத்மசக்தியைப் பெற்றுய்யுங்களெனப் போதித்த புத்த பகவானும், ஈகைநெறி நின்று இறைவனையடையலாமென்றுபதேசித்த ஏசுநாதரும், உள்ளொளியை நாடி நல்லவர்களாகுங்களென்று நவின்ற நபிகள் பெருமானும், கள்ளமில்லா தவருள்ளத்தில் கடவுளுணர்வைக் காணலாமென்றறைகூவிய வள்ளுவனரும், பக்திக்கடலிலாழ்ந்து பகவானோடுறவாடலாமென்று புகன்ற பரமஹம்சரும், தேசாபிமானமே தெய்விகமெனக் கண்ட காந்தியடிகளும், இன்னுமெண்ணற்ற மகாமேதைகளும் ஆத்மசக்தி வாய்ந்த தீர்க்க தரிசிகளேயாவார்கள்.

**பாதாதிகேசம் பரவும் பரம்பொருள்தான் வேதாந்த விண்ணின் விளக்கு.**

எமதறிவின் சுடர்களே!

மேற் சொன்ன ஜீவன் முத்தர்கள் தமது வாழ்க்கைக்கடலில் ஊக்கமாகிய படகைச் செலுத்தி, உணர்ச்சிமயமான பாயை விரித்து, ஆத்மநாதனுகிய திசையை நோக்கி, உத்வேகமெனும் சுக்கானைப் பிடித்து, ஐம்புலனுகிய அலைகளைக் கடந்து அமைதியாகிய கரையிலிறங்கி, அறிவுப் பிரகாசக் கடவுளைக்கண்டு, சமரசஞான ஏகாந்திகளாகி, சற்குணமாகிய அரியாசனத்திலமர்ந்து, மக்கட்குத் தருமோபதேசம் புரிந்து புகழுடலெய்தி மறையலாயினர்.

**அதர்மவெறியேறியாடும் அறிவிலியைப் பதரெனவே பற்றும் பவம்.**

அத்தகைய நிறையறிவுபரவிய பெரியார்களுடைய கால்வழி வந்த நவநாகரீக மனிதன், தருமநெறியின் எல்லையைத் தாண்டி, தவறுன மார்க்கத்திற் பிரவேசித்து, புனிதத் தன்மைகள் யாவையும் புறக்கணித்து, அதர்மத்தின் சிகரத்திலேறி ஆபாசக் கடலில் குதிக்கவும் ஆசைப்படுகின்றுன். அவன் கற்கத் தகாத தர்க்கசாஸ்திரங்களைக் கற்றும், ஒழுக்க நிறையற்றவர்களுடைய உறவை விரும்பி நல்லோர்களை நிந்தித்து இடையூறு செய்தும் பொல்லா தவனெனப் பலராலிகழப்பட்டு, தனதுயரிய வாழ்வைப் பாழ்படச் செய்து மாண்டொழிகின்றுன்.

**கோழைமனிதன் குணமற்ற துற்செயலான் ஏழைபணியாற்ற இயலான்.**

மேற்கூறிய மனவலிமையற்ற மனிதனின் ஊனுடலானது அடிக்கடி நோய்க்கடிமையாகி உழல்கின்றது. தூயமானது துகம்படியப்பட்டு சதா சஞ்சலச் சிறைபுக்கிக் கிடக்கின்றது. அவனது அறிவும் பொறுமையும் பறிபோய், அகங்கார வேங்கைக்கு இரையாகின்றது. இத்தகைய குற்றம் நிறைந்த கோடிக்கணக்கான மக்கள், தமக்கும் தமதினத்தார்க்கும் தீங்கு

விளைவித்து நாட்டிற்கு வேண்டிய நன்மைகள் யாவையும் நாசமாக்கி வருவதால் சத்தியம் தாழ்ந்து, சண்டாளமுயர்ந்து, மக்கட் பிறவியின் மகத்துவம் குன்றி மரண பயத்திற்காளாகின்றனர்.

பொறுமை பொறுப்பர் புகழ்விரும்பார்
தருமநெறியுற்ற பெரியார். [எந்நாளும்

எமதரிய குழந்தைகளே!

உழைப்பாளி மக்களை உயிர்நாடியாகப் பெற்ற இவ்வுலகப் பரப்பில் இலங்காதிபத்தில் வசிக்கின்ற உங்களுடைய விசுவாச நிழலில் சில நாட்கள் தங்கி, அஞ்ஞான இருட்படலத்தை அகற்றுதற்கேற்ற அருளொளி விளக்கை ஏற்றி, பொறுப்புணர்ச்சியுடைய மக்களை உங்களில் தெரிந்தெடுத்து, அவர்களிடமொப்படைத்து ஆங்காங்கு அருளொளி முழக்கம் செய்யுங்கள் என்றுபதேசிக்கவே நாமிங்கு வந்திருக்கின்றோம். எமதருமை மக்களாகிய நீங்களுடைய வேண்டிய ஆத்மலாபமொன்றே அடியேனுடைய அரிய தவத்தின் வெற்றியாகும்.

மக்களே வணக்கம்.

# மகான்கள் சமாதியாகி மகத்துவம் பெற்ற ஸ்தலங்கள்!

ஆதிகாலத்திலே தில்லையில் திருமூலர் அழகர்மலை ராமுதேவர்
அனந்தசனத்திலே கும்பமுனியும் நல்ல அருணையில் இடைக்காடரும்
வாதவைத்தீஸ்வரன் கோயிலில் தன்வந்திரி வான்மீகர் எட்டிக்குடி
பாதசெங்களனி ஆரூரிலே கமலமுனி பழனியில் போகநாதர்
திருப்பரங்குன்றினில் மச்சமுனியும் தெய்வத்திருப்பதியில் கொங்கணவரும்
சேதுராமேஸ்வரம் தன்னிலே பதஞ்சலியும் சேர்காசி நந்திதேவர்
சோதிரெங்கத்திலே சட்டமுனி மதுரையில் சுந்தரானந்த மூர்த்தி
திருவடமா மருதூரில் பத்ரகிரியும் திருவொற்றியூர் பட்டினத்தாரும்
குற்றலம் தன்னிலே அகஸ்தியரும் ஆவுடையார் கோயிலில் மாணிக்கரும்
அருந்தபசு புரிந்தென்றும் அழியாத புகழெய்தி ஒளிகண்ட திவ்ய ஸ்தலமாம்.

# மண் சீனியாக மலர்ந்ததம்மா!

பாவலர் - இரா. பகவதி, மதுரை.

நேரிசை வெண்பா

மண்ணுயிர்க ளத்தனையும் மாண்புடனே மெய்ப்பொருளைத்
தன்னுயிரிற் கண்டின்பந் தான்கூடப்—பண்ணுமிந்தப்
பேராளன்! பிள்ளைப் பிராயத்தே செய்தவிந்தை
ஏராளம்! ஈங்கொன் றிது!!

இணைவைக்க ஏதுமிலா ஏகனையே என்றுந்
துணைவைக்கு நன்னெஞ்சத் தூயோர்
—மனைவைத்தே
பல்லறஞ்செய் ஊராம் பனைக்குளவங் காடிக்குச்
செல்லுவரால் பாட்டியுடன் சேர்ந்து. 1

செல்லுகின்ற வீதியிலோர் செல்வ மனைச்சிறுமி
மல்குவள மண்ணை மனமாரச்—செல்லமிகுந்
தங்கக்கை மேற்சிரட்டை தாங்கினளாய்த்
தானளைந்தே
அங்குவிளை யாடுவா ளால். 2

அச்சிறுமிதன்னருகே அன்புடனே போய்நின்றே
இச்சிறுவர் இன்சொல்லால் என்னைதங்
—கச்சியே, நீ
அக்கறையா யள்ளி அளப்பதென் றூர்சீனிச்
சக்கரையீ தென்றாள் தளிர்!! 3

சக்கரையீ தாமாகில் தங்கச்சீ! உண்ணுதற்குப்
பொக்கெனவே யெற்காசை பூத்ததால்!!
—இக்கணமே
அண்ணனுக்குக் கைகளிலே அன்பா
யிடுவென்றார்!
கண்ணனுக்குங் காணர் களித்து!! 4

பொற்காசு சிந்திணப்போற் புன்சிரிப்பு
வாயுதிர்ப்ப
உட்கார்நீ! தந்திட்டால் உண்பாயோ?!
—மட்காணும்!!
ஈதென்றாள் செல்வி! இவரோ அலவிருக்
காதென்றார்! சீனியென்றார் காண்!! 5

சீனியென்றால் இந்தா நீ தின்னண்ணே!
யென்றுரைத்து
ஆனமணல் கைகளிலே அள்ளியே—வானிறைடு
மற்றெல்லாம் ஆன மகிபர் கரத்திட்டாள்!
சிற்றிநற் செல்வி சிரித்து!! 6

தாழ்சடையுந் தண்மதியும் தான்மறைத்தும்
தன்னெஞ்சத்
தாழ்கருணை மாற்றகிலா அண்ணலிவர்—
பாழ்மணலைத்
தங்கரத்தி லேயேந்தித் தானேக்கச் சீனியதாய்
அங்குடனே மாறிற்றே! ஆ!! 7

செம்மணலா? சீனியிது! செல்வீபார்!
தின்கின்றேன்,
அம்மம்மா! என்சுவையென் றுவென்று
தன்வாயில்
இட்டுச் சுவைத்தார்! எழுந்தார்! விரைந்தாரே!
தட்டுப் படாமற் றனித்து. 8

இட்டமண் கையில் இனிப்பான சீனியதாய்
சட்டென மாற்றியுண்ணத் தான்பார்த்தே
—மட்டில்லாப்
பேருவகை கொண்டாள்! பிறரை அழைத்
துரைத்தாள்!!
ஊர்முழுதுஞ் சேர்ந்த வொருங்கு!!! 9

ஒருங்குவந்தார் முன்னே ஒருசிறிது காட்ட
ஒருங்குவந்தார் உள்ளம் உருகிக் —கரங்கடனே
வானுயர்த்தி வல்லானை வாய்மணக்க
வாழ்த்தினரே,
ஆனநிறை யன்பாலே ஆர்த்து!! 10

சித்தியெலாம் வந்தேவல் செய்கின்ற தால்சித்ர
முத்தனெனுஞ் சித்தனடி முப்போதும்—பத்தியால்
நெஞ்சிற் தொழுவார்க்கு நீளாயுள்! மென்மேலும்
கஞ்சத் திருமேவுங் காண்!!

மங்களம்

# மூலப்பொருளறி காலனை வெல்லலாம்

ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள்
(கௌரவ காவலர், அருளொளி நிலையம், கொழும்பு)

விரிந்த ஆகாயமே ஓங்காரப் பிரணவம். அதனுள் விண்ணோர்க்கு மெட்டா வெளியை வீடாகக் கொண்டு, பேரொளி (த்திருமேனி) யாய் விளங்குபவன் இறைவன். இச்சோதி சொரூபன் எள்ளுள் எண்ணெயாய் எங்கும் வியாபித்திருக்கிறான். இவனை இந்துக்கள் சிவன், விஷ்ணு அல்லது பரப்பிரமம் என்றும், பௌத்தர்கள் ஞானம் என்றும், கிறீஸ்தவர்கள் ஏகோவா என்றும், இஸ்லாமியர் அல்லாஹ் என்றும் பல்வேறு நாமங்களால் போற்றி வணங்குகிறார்கள். இம்மூலப் பொருளாம் தத்துவனை அறிவதே பிறப்பறுக்க, காலனை வெல்ல நன்மார்க்கமாகும். சிவனைப் பற்றிய மார்க்கண்டேயனும், முருகனைப்பற்றிய அருணகிரிநாதனும், யமனை வென்றமை எங்ஙனம்? இதற்கு விடைபகர்கிறது இக்கட்டுரை.

அநாதியிலேயே மலத்தோடு கூடிய ஆன்மாக்கள் தாந்தாம் ஈட்டிய புண்ணிய பாவங்களுக்கீடாக இறையருளால் பற்பல பிறவிகள் எடுக்கின்றன. அவற்றுள் மானிடப் பிறவியே மேலானது. மானிடர்களே இகபர இன்பங்களைத் துய்க்கும் அருகதையுடையவர்கள். இவர்களிற் தெய்வ விசுவாச முடையவர்களாய் ஆன்றோர் வகுத்த விதிமுறைகளை யனுசரித்து, நெறியோடொழுகும் நிலைபெற்றவர்களே வாய்மையான சிவதொண்டர்கள் ஆவார்கள். இவர்கள் நெறிபட்ட வாழ்வு வாழ்ந்து மெஞ்ஞானமாம் மரணமற்ற நித்திய வாழ்வெய்தி, பேரொளியிற் கலந்து இன்புறுவார்கள். அதற்குறு துணையாம் தமதுடல்களை கண்ணே போல் போற்றிக் காத்து வருவார்கள்.

எமதுடல் ஒருசிறு உலகம். விண்ணிலும் மண்ணிலுமுள்ள சகல அசைவுள்ளனவும் அசைவற்றனவுமாகிய இயற்கைப் பொருட்களும், மூவர் தேவர், முனிவர்களும் இம் மெய்யுலகத்தின் கண் அமைந்திருக்கின்ற உண்மையை ஆன்றோர் அறிந்திருந்தனர். அவர்கள் தமதுடல்களில் உத்தமனைக் கண்டனர். அதனாலேயே ஔவையார்,

> ''உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
> உடம்பினில் உத்தமனைக் காண்''.

என்று உடம்பின் முக்கியத்துவத்தையும் அதனைப் பெற்றதன் பயனையும் விளக்குகிறார். திருமூலநாயனார் இதனைப் பின்வரும் செய்யுள்களில் தெற்றெனப்புகட்டியிருக்கிறார்.

> ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
> திடம் பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.''

> ''உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
> உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
> உடம்புளே உத்தமன் கோவில் கொண்டானென
> உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே.''

உடம்பின்றி உயிரும், உயிரின்றி உணர்வும், உணர்வின்றி அறிவும், அறிவின்றி ஆன்மபோதமும், ஆன்மபோதமின்றி மெஞ்ஞானத் தோற்றமும், மெஞ்ஞானத் தோற்றமின்றி மெஞ்ஞானச் சித்தியும், மெஞ்ஞானச் சித்தியின்றி ஆனந்தமாம் பரகதியும், இறவாப் பிறவாப் பெருநிலையும் இல்லை என்பது இவ்வான்றோர் துணிபு.

ஔவையார் தமதுடலை ஆதாரமாகக் கொண்ட ஆன்மபோதத்தை-கலைமகள் பீடமென்றழைக்கப்படும் நாவாம் ஆத்தியைச் சூடி, ஏத்தி யேத்தி தொழுதமையின் விநாயகப் பெருமான் அவரிடத்துக் கருணைபாலித்து தம் பெருந் தொந்தியாம் ஓங்காரத்துள்வெளியாகிய நிராதாரத்தில் சேர்த்துக் கொண்டார். இவ்வாறு ஔவையார் அடைந்த புகலிடத்தை நாமும் அடைய வேண்டில், நாமும் அவர் விதந்தோதிய முறையே செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட புகலிடத்தையே இந்துக்கள் கைலாயம், வைகுந்தம், காசி, கன்னியாகுமரி, தெய்வலோகம் என்று கொள்வர். இவ்விடத்தேயுற்ற ஆன்மபோதமே, இந்துக்கள் வணங்கும் ஆதியாம் சிவலிங்கமும், வேலாகிய ஞானவாளேந்தும் முருகனுமாக அமைகிறது. அதிற் தோன்றும் சிவஞானத்தை சூரிய கலையாகவும், சிவஞான சித்தியைச் சந்திரகலையாகவும், அவையிரண்டின் கலப்பாலாய சிவப்பிரகாசத்தை அக்கினி கலையாகவும் கொண்டு இங்கு காணும் ஞானபோதமே அருட்பெருஞ் ஜோதியுமாகும் என்பார் மெய்யுணர்ந்தோர். இதையுணர்ந்தடைதலே முத்தி, சமாதி, நிர்வாணம் எனப்படுவது, மரணத்தை வெல்லும் மார்க்கமும் இதுவே.

இவ்வாறு முத்தி நிலையடைதற்கு விநாயகப் பெருமானின் திருவருள் இருத்தல் வேண்டும். இவர் பரவெளியாம் வானவீட்டைப் பொருந்தி, அவ்வீடுற்ற பூதகணங்களுக்குத் தலைவனுக—பூதநாயகனுக விளங்குகிறுர். வானவீட்டின் வாயிலாகவும், வாயிற்காப்போனுகவும் அமைகிறுர். இப்பெருமானின் அனுமதியின்றி எவரும்—எப்பூதரும் வானவீட்டினுள் புகமுடியாது—முத்தியாம் வீடுபேறுங் கிட்டாது. இதனை உணர்ந்தமையினுலேயே சித்தர்களும், முத்தர்களும் மற்றும்பத்தர்களும் கணபதியெனும் களிற்றுமாமுகனைக் காப்பாகக் கொண்டு போற்றிப் பரகதியடைந்தனர்.

சைவப் புலவர்கள் யாவரும் தாம் ஆக்கிடும் பாமாலைகள் யாவும் இனிது முடிவுற வேண்டிப் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனை முதற்றுணையாகக் கொண்டு காப்புப் பாடித் தம் நூல்களையாத்தனர். மூல முதலாய் விளங்கி வல்வினை தீர்த்து உறுதுணையாக நிற்கும் இவ்விநாயகப் பெருமானை கபில தேவநாயனுர்,

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் [தன்மையினுற்
கண்ணிற் பணிமின் கனிந்து."

என்று திருவிரட்டை மணிமாலையில் கூறிப் போந்தனர்.

இறையருளை நாடி நெறியோடு ஒழுகி வருபவரை இறைவன் தன்னிலைமை பெறச் செய்யச் சித்தங்கொள்கிறுர். இதனை உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் வாயிலாக விளக்குகிறுர்.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி
பின்ன மிலான் எங்கள் பிரான்."

மேலும் அவர், இறைவனே அவரவர் பக்குவத்திற் கேற்ப குருவடிவாய் வந்து அருள்புரிகிறுர் என்பதை

"அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காதகோ."

என்ற அடிகளால் விளக்குகிறுர். ஆண்டவன் பக்குவமடைந்த ஆன்மாக்களை தன்னிலைசாரச் செய்வதற்கு விநாயகன், முருகன் போலும் கோலந்தாங்கி வந்து பாசபங்கஞ் செய்கிறுர். ஆன்மதத்துவத்தை யுணர்த்தி தம்மிடத்திற்கு நேர்வழி காட்டி அருமறையின் பொருளை விளக்குகிறுர். அப்போது அவன் அதுவாகிறுன். இவ்வுண்மையை ஔவையார்,

"நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டின்
பிரிவற்றிருக்குஞ் சிவம்."

என்ற குறள் வாயிலாக உலகிற்கு எடுத்துரைத்துள்ளார்.

முருகப் பெருமானைத் தன் குருவாய்க் கொண்டு பேரின்ப வீடடைந்த அருணகிரி, குருவாய் வருபவரின் இலக்கணத்தைக் கந்தரலங்காரம் வாயிலாக விளக்குகிறுர்.

"பெரியோரெனினும் புலையோரெனினும்
சிறியோரெனினும் தெளிவோரவரே
குறியோரெனினும் குருவாய் வருவான்
நெறியோ டொழுகும் நிலை பெற்றிடினே."

இஞ்ஞான்று எங்குருவாய் அருமறையின் பொருளுணர்ந்து, தன்னுள் தானுன தன்மையனுய்ச் சென்ற விடமெல்லாம் அருள்மழை பொழிந்து இருள் அகற்றி ஒளி பரப்பிவரும் ஸ்ரீசத். சித்ரமுத்தடிகள் "மூலப் பொருளறிகாலனை வெல்லலாம்" என விரிந்த தத்துவத்தைக் குறுக்கி எளிதில் விளங்கும் நடையில் கூறியிருக்கிறுர்கள்.

# "யான்கண்ட அருட்செல்வர்"

அருளொளித் தொண்டர்
மா. அ. பிச்சைமுத்து, கிரம்பரண்டி

புண்ணிய பாரத பூமிக்குப்பல பெருமை களுண்டு. அவற்றுள் தலையாய பெருமை மெஞ் ஞானிகள் தோன்றி உலக நலனுக்கு உழைப்ப தாகும். சென்ற நூற்றாண்டில் தோன்றிய அருட்ஜோதி இராமலிங்கர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் இவர்கள் ஆற்றல் உலகறிந்தவை. ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் உலகம் முழுவதும் ஸ்தாபனங்களை அமைத்துக் கல்விப் பணி புரிந்து வருவதுடன், திக்கற்ற குழந்தைகளை ஆதரித்து அவர்கட்கு வாழ்வளித்து வருவது கண்கூடு. இத்தகைய ஸ்தாபனங்களில் ஒன்றாகிய பினாங்குக் கிளை ஸ்தாபனத்தில் திக்கற்ற சிறுவர் களை பாதுகாக்கும் பணியாளனாக (ஆசிரம சூபரிண்டெண்ட்) எளியேன் இருந்தபோது 1952ல் நமது சற்குருநாதர் தவத்திரு சித்ரமுத்தடிகள் மலேயா நாட்டிற்கு விஜயம் செய்தார்கள்.

உலக மக்கள் நலன் கருதி அடிகளார் மௌன தவமிருக்க முடிவு செய்து அதற்கு ஏற்ற இடமாக நமது ஆசிரமத்தைத் தேர்ந்து எடுத்து பக்தர்கள் சூழ அடிகளார் மௌன தவம் ஆரம்பித்தார்கள். மூன்று தினங்கள் சுவாமிகள் மௌன தவமிருந்து, தவநிலை பூர்த் தியாகி, மக்களுக்குத் தமது திருவாய் மலர்ந்து அருளுரை பகர்ந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரம நிர்வாகிகள் சுவாமிகளுக்கு அன்பு செலுத்தி ஆசிரமம் செழிப்புற்றோங்க நல்லாசி அருளுமாறுவேண்டி, ஆசிரமத்தின் பார்வை யாளர் புத்தகத்தை முன் வைத்தார்கள். அப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் ''மனிதகுள் மாணிக்கம்'' பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆசியைத் தொடர்ந்து பல பெரு மக்களின் ஆசிகளும் அதில் இடம் பெற்றிருந் தன. சுவாமிகள் தமது திருவாய் மலர்ந்து திருக்கரத்தால் அடியிற்கண்ட வெண்பாவை எழுதி அருளினார்கள்.

வெண்பா

''ஏழைக் குழந்தைகளென் றெண்ணி இதயமது
கோழை படச் செய்தல் கூடாது—வாழையடி
வாழையென வளர்ந்து வாழ்ந்து புவிப்பணிக்கு
தாழை மடல் சான்றுணர்தி தான்''

என்று எழுதி முடித்தார்கள். சுவாமிகள் எழு திய திருவாக்கினால் அன்றுள்ள ஆசிரம நிதிநிலை நெருக்கடியில் நிர்வாகிகள் மனதிலும் வளர்க் கப்படும் குழந்தைகள் மனதிலும் நிறைந் திருந்த ''கோழைத்தனம்'' கூண்டோடு அகன்றது.

''யான் கண்ட அருட் செல்வர்'' அருளாசி வழங்கியது முதல், ஆசிரம நிதி நிலைகள் நாளொரு மேனியாக வளர்ந்து கஷ்டம் நீங்கி யது. சுவாமிகள் ஸ்தாபனத்தை நிலையான பொருளாக வைத்து, நிர்வாகிகளும், குழந்தை களும், இருந்து பின்பு வெளியில் செல்பவர்கள் மற்றும் வேறு நிர்வாகிகள், வேறு சிறுவர்கள் வந்து உறையுமிடமாதலால் ''ஏழைகள்'' என்ற நிலையில், நீங்கள் ''கோழைகள்'' ஆகிவிடாதீர் கள் என்ற பெரும் பொருளை உள்ளடக்கியே நிர்வாகிகளை ஊக்குவிக்கவும், குழந்தைகளை உற்சாகமூட்டவும் கருதி,

''ஏழைக் குழந்தைகளென் றெண்ணி இதயமது
கோழை படச் செய்தல் கூடாது''

என்ற வீரவுரை வழங்கிய அடிகளார், அடுத் துள்ள சற்றடிகளில் ஆசிரம நிர்வாகிகளும் வளர்க்கப்படும் குழந்தைகளும் உலகிற்கு எவ் வளவு உபயோகமானவர்களாக வாழக் கடமைப் பட்டவர்கள் என்பதை சிறந்த அனு பவ ரீதியாக உவமானத்துடன் விளக்கி, உங்கள் வாழ்வு தொடர்பாக ''வாழையடி வாழை யாக'' வாழ்ந்து ''புவிப் பணிக்கு தாழைமடல் சான்று உணர்த்தி'' தன் வாழ்வு தனக்கின்றி பிறருக்குப் பயன்பட வேண்டியதே பிரதானம் என்பதற்கு ''தாழை மடலை'' விட வேறு மேற் கோள் என்ன இருக்கிறது? அருட் செல்வர்கள் திருவாக்கினிலிருந்து தான் இத்தகைய சிறந்த நல்வார்த்தைகள் உயிரோவியமாக வர முடியு மென்பதற்கு இவைகள் ஆதாரமாக அமைந் துள்ளதை நோக்குவோம்.

—வாழையடி
''வாழை என வளர்ந்து வாழ்ந்து புவிப்பணிக்கு
தாழை மடல் சான்றுணர்தி தான்''

என்று சுவாமிகள் கைச்சாத்திட்டது முதல், சில ஆண்டுகளில் ஆசிரமத்தின் நிதி நிலை மிகவும் திருப்திகரமாக வளர்ந்து, புதிய கட்டிடங்களில் பள்ளிக்கூடம், குழந்தைகள் உறைவிடம், ஆலயம் முதலியன காட்சியளிப்பதை நாம் காண்கிறோம். 1950ல் அடியேன் ஷை ஆசிரம பொறுப்பேற்றபோது இருந்த நிலைக்கும் 1957ல் ஷை ஆசிரமப் பொறுப்பை விட்டு நீங்கிய சமயம் இருந்த உயர் நிலைக்கும் அனுபவ ரீதியில் சிந்தித்துப் பார்க்கும் போது, மெஞ்ஞானிகள் திருவுள்ளத்தால், நினைப்பது நடக்கும், என்ற திருவள்ளுவரின் திருவாக்கு முற்றிலும் உண்மையே என்பது தெளிவு.

''ஒன்னார்த் தெறலும் முவந்தாரை யாக்கலு
மெண்ணிற்றவத்தான் வரும்''

—குறள் 264

''யான் கண்ட அருட் செல்வர்'' தவத்திரு சித்ரமுத்து அடிகளாரினதும் அவர் தம் திருப்பணிகளை முன் நின்று நடத்துகின்ற பக்தர்களினதும் திருவடிகளை எளியேன் சிரமேற் கொள்ளக் கடமைப்பட்டவனுவேன். கொழும்பு அருளொளி நிலையத்தாரின் நன்முயற்சியாலே ''அருளொளி'' நமக்கு கிடைத்தது. அதுபோல மீண்டும் அத்திருப் பெயரிலே மலர் வெளியிட முன் வந்த அவர்கள் நற்பணி உலகிற்கு உபயோகமான திருப்பணியாகும். இதோ நமது குருவாக்கு,

''உலகிற்குழைக் கின்ற உத்தமர்கள் சித்தமது
கலங்கரை விளக்காகும் காண்''

—சித்ரமுத்து

# தன்னம்பிக்கையே சிறந்த செல்வம்

உலக விடயங்களை நம்பியேமாந்து போவதைப் பார்க்கிலும் தன்னைத்தான் நம்பினுல் பலவித நன்மைகள் பெற்றுய்யலாம். நம்பிக்கையென்ற மலரில் விசுவாச மென்னும் பிஞ்சுண்டாகி, வைராக்கியக் காயாகமுற்றி, பக்திப்பழமாகப் பழுத்து அக்கனியை அருந்த அருள் பெற்றுனந்த முறலாம். துன்பக்கடலைக்கடந்து கரையேற நம்பிக்கையென்ற படகல்லவா துணைசெய்யும்.?

தன்னையறிந்து உயர் சாதனஞ்செய்து இறைவனைப் பற்றவிரும்பின், தன்னம்பிக்கையே சாலச்சிறந்ததாகும். கள்ளமில்லாத உள்ளத்தை உறுதிப்படுத்த பின்வருமாறு மன்னஞ்செய்து அதிகாலையில் யோகாசனம் பயின்று சிரசாசனத்தில் நின்று, அகத்தாலுச்சரித்து சித்தத்தை மிகத் திடனுக்கிக் கொள்ளல் நன்மைபயக்கும். தன்னைத்தானுயர்த்த இவ்வுச்சரிப்பு ஒரு அரிய உபாயமாகும்.

''ஆயிரங்கோடி அழியாத அருட்சக்தியும், கோடான கோடி குறைவுருத்திருவருளும் நமக்குண்டு; யுகமும் ஜகமும் சர்வமும் நமதகத்துள் ஐக்கியமாய் அடங்கியுள்ளன; நமக்குக் கவலை, வறுமை, பிணி முதலாம் கொடிய வாதனைகள் கிடையா. மலர்ந்த முகமும், குளிர்ந்த பார்வையும், திறந்த ஞானமும், சிறந்த சொல்லும், பரந்த நோக்கமும் எமக்கிருக்கையில் ஏ! மனமே!! உன் ஊக்கங் குறைந்து ஏக்கமுறுதே.

மேற்கண்ட வற்றை உள்ளத்தில் பதித்து மனதால் உச்சரித்து வந்தால் சதா ஆனந்தமாக இருக்கலாம். இது சாதாரன மென்றெண்ணிவிடல் கூடாது. சித்தத்திடமுடையவர்கள்தான் எதிலும் ஜெயசீலர்களாகத் திகழமுடியும்.

—குருமதிமாலை—

# நலிவடை புண்ணுடல் பொலிவடை பொன்னாகும்!

எஸ். பாலகிருஷ்ணபிள்ளை, மதுரை.

''நித்திய வாழ்விற்கு வழி சத்திய நெறி'' என்று, சமத்துவ சன்மார்க்கக் கொடி ஏந்தி, வந்திப்போர் சிந்தையில் முத்திக்குவித்திட்டு பக்தியை வளர்த்து, சக்தியை பெருக்கி வரும் எமது குருபிரான் மௌனானந்த மாதவர் ஸ்ரீ சத்.சித்ரமுத்தடிகளார், மக்கள் சமுதாயத்தின் உயிர்க் கொல்லிகளாயமைந்த நோய்களை வருமுன் காக்கும் நல்லௌடதமாம் யோக மார்க்கத்தை மக்களிடையே பரப்பிவருகிறார்கள். அன்னார் ''ஆசனப் பயிற்சி அரும் பிணியகற்றும்'' என்ற நன்மொழியை நினைவில் இருத்தி அருளொளி இயக்கத்தைத் தாபித்து அருட்பணி யாற்றி வருகின்றனர்.

தயாள சிந்தையுடன், தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று, தாம் கண்ட ஞானத்தின் விளைவை வாரி வழங்கி, பற்றற்ற பணியாற்ற இம்மண்ணுலகில் அவதரித்திருக்கின்ற எம் அண்ணலின் கட்டளைப்படி, காட்டிய நன்னெறிப்படி; அல்லும் பகலும் இறை நாமத்தை தியானித்து, வைராக்கிய சிந்தையுடன் முழுமுதற் பொருளிடம் சகலதையும் அற்பணித்துவிட்டு, மானிட வர்க்கங்களை பூண்டழித்து வருகின்ற வியாதிகள் என்ற கொடிய அரக்கர்களை விரட்டிமுறியடித்து துரத்திவிட்டு, சத்தியம் என்ற வித்தை எமது இருதயம் என்கிற பூங்காவில் விதைத்து, அதன் பலனாக விளையும், அரும்பெரும் திருவையும், திடகாத்திரமான வாழ்வையும், கருணாமூர்த்தியின் அனுக்கிரகத்தால் பெற்று, அல்லல் என்பது தலைதூக்காது அறவே ஒழித்து, இறைவன் திருவடித் தாமரைகளில் ஆழ்ந்த சிந்தனையுடன் அடி பணிந்து நிற்கின்ற காலத்தில் ஞான சூரியன் குணதிசையில் உதயமாவான். அஞ்ஞானமாகிய இருள் இருக்கின்ற இடந் தெரியாது மறைந்து ஒழியும். மனித இதயங்கள் தூய்மையடையும், அருட்பெருஞ் சோதி பிரகாசிக்க ஆரம்பித்துவிடும். அன்பெனும் அமிர்தம் எங்கும் பெருகி நிறைந்து, வழிந்து பிரவாகமாக ஓட ஆரம்பிக்கும். மக்கள் அவ்வமிர்தத்தைப்பருகி மாய்கையைத் தகர்த்து எறிந்து விட்டு ஞானத்தில் தேர்ச்சியுறுவார்கள் அந்நன்னாள் என்று வருமோ?

இத்தகைய நன்னிலையை பாருலகெங்கும் காணத் தம்தவத்தை அற்பணித்து அருளொளி விளக்கேற்றி ஆத்மீக சேவை செய்து வரும் மெய்ஞானமூர்த்தியாகிய, வேத சொரூபனும் ஸ்ரீ சத்.சித்ரமுத்தடிகளாரை அனுதினமும் தியானித்து அன்னாரின் திருநாமத்தை பயின்று வர கீழ்க்காணும் நலன்கள் விளையும் என்பது திண்ணம்.

### விருத்தம்

குலந்தரும் செல்வந் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெரு நில மளக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
ஸ்ரீ சத்.சித்ரமுத்தென்னும் நாமம்.

இக் கருணாமூர்த்தியின் திருநாமத்தைத் துங்கமுடன் எந்நாளும் துஞ்சும்போதும், துயர் உற்ற காலையும் நினைந்தழைத்தால் எண்ணுவார் நெஞ்சில் நண்ணிடும் ஈசனாய் கலந்து அருள்வான். ஆதலில் துயரிலீர் நீரும் என்றும் நினைமின். பெருமகனாரது வாய்மொழியானது ஆக்கம் தருவது, அருட்திருவுருவமோ ஊக்கந் தருவது, வாழ்ந்திடக் காட்டும் நெறி, நந் நோக்கத்தை அருள்வது; ஆயின் அவர் திருமுக தரிசனமோ வீக்கம் தந்து வினையறுப்பது ஆகும்.

பழுக்கக் காய்ந்த இரும்பினிடத்தில் ஈக்கென்னவேலை? அதுபோல யோகாசனம் என்னும் ஔடதத்தை உட்கொண்டவர்களின் உடல்களில் நோய்களென்ற ஈக்கென்ன வேலை? அவை அஞ்சி, நடுநடுங்கி விரைந்தோடிவிடும்.

யோகாசனங்களில் ஈடுபடாதவர்களின் தூல சூட்சும சரீரங்களின் நிலையானது-மண்சுவரை போல வலுவற்று கனத்தமழை பெய்தவுடன் இடிந்து விழுந்து கரைந்து மறைந்துவிடுகின்றது. இப்பேற்பட்ட குட்டிச் சுவர்களின் மேல் ஞானம் என்னும் மூட்டையை வைத்துப் பத்திரப் படுத்தப் பிரயத்தனப் படுகின்றதானது யாதொரு பலனையும் தராது. ஆனால் இறைவன்

திருவருளால் முதலில் மண் சுவரைக் கெட்டியான கற்சுவராகக் கட்டி, அதன்மேல் ஞானமாகிய மூட்டையை வைத்துப் பத்திரப்படுத்தினால், அது ஜோதிமயமாகப் பிரகாசித்துக் கொண்டு உலகிற்குப் பெரும் பலனளிக்கும்.

ஆதலின் மாந்தர் அனைவரும் தினந்தோறும் காலைவேளையில் மலசலங் கழித்துவிட்டு வெறும்வயிற்றில் ஆசனங்களைச் செய்து, மண் சுவரைப் போலிருக்கும் தூல, சூட்சும சரீரங்களை நன்கு செப்பனிட்டு கற்சுவராக்கி ஞானத்தை விருத்திசெய்து பலன் கொடுக்கும்படி செய்தல் வேண்டும்.

ஆனால், இன்று மாந்தர்கள் மிதமிஞ்சிய போகம், அறிவைமயக்கும் மது, கூடா ஒழுக்கம், பொல்லா உணவு முதலியவற்றை அளவிற்கதிகமாகக் கைக்கொண்டு நோய்களென்ற ஊனச்சதை, வாயு, துர்நீர்முதலியவை மிகுந்து உடல் வலுவை உறுஞ்சிட, மனைவி மக்கள் கதறியழ, உயிராகிய சத்தைப் பிரித்துக் கொண்டு செல்கின்றனர். புற உடல் மண்ணாலோ நெருப்பாலோ உருமாறி அழிகிறது.

சரீர மென்று சொல்லக் கூடிய வீட்டில் வயிறானது ஓர் புரைபோலிருக்கின்றது. யோகாசனங்கள் வயிற்றில் உள்ள ஊனச்சதை, வாயு, துர்நீர் முதலியவற்றைப் போக்கி மூலாக்கினியை உண்டு பண்ணி, பசி நன்றாக உண்டாகும்படி செய்கிறது. சுகபோசனமருந்தி சரீரத்தைப் பலப்படுத்தி பற்றற்ற தொண்டு புரிந்து பரமனருளடைய வேண்டும்.

அடியேன் 1950ம் ஆண்டு முதலில் குருபிரானைத் தரிசித்து அவரிடம் பிரம்மோபதேசம் பெற்று யோகாசனமுறைகளைப் பிரதி தினமுஞ் செய்து வருகிறேன். அடியேனுடைய வயிற்றின் சுற்றளவு அப்போது 42 அங்குலமாக இருந்தது. மூன்று ஆண்டுகளின் பின் வயிற்றின் சுற்றளவு 32 அங்குலமாகக் குறைந்து உடலும் உளமும் சோர்வுநீங்கப்பெற்றன. "முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்."

நாம் செய்ய வேண்டிய பணிகள் ஐவகைப்படும். அவை சரீரப்பணி, பெற்றோர்பணி, குடும்பப்பணி, சமூகப்பணி, உலகப்பணி என்பன. இப்பணிகளை முறையே செய்யுங்கால் அன்பெனும் வெள்ளம் பெருக்கெடுத்து நமக்கு பக்கத்துணையாக நிற்கும். எல்லாவற்றிற்கும் இறையருள் பரிபூரணமாக இருக்க வேண்டும். அவ்வருளைப் பெறக் கீழ்க்காணும் நெறி வழிச் செல்ல வேண்டும்.

**அன்பைப்பேணிட பக்திவளரும்**
**பக்திவளர்ந்திட உணர்ச்சி பெருகும்**
**உணர்ச்சி பெருகிட பேரின்பக் காதல் தோன்றும்**
**பேரின்பக் காதல் தோன்ற இறையருள் கிட்டும்.**

நமது குருபிரானின் ஆசியும் அருளும் பெற்றவர்களிடத்தில் ஊக்கமும், ஆக்கமும் உண்டாகின்றன. மலர்ந்த முகமும், குளிர்ந்த பார்வையும், திறந்த ஞானமும், பரந்த நோக்கமும், சிறந்த செய்கையும் உடையாராகிறார்கள்.

அன்னார் நிறுவி வரும் அருளொளி இயக்கம் கொழும்பில் நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருதல் கண்டு பேருவகை கொள்கிறேன்.

திரிகரண சுத்தியுடனும், ஆர்வத்துடனும், மனம், வாக்கு, காயங்கள் ஒன்றுபட சன்மார்க்கத்தில் இறங்கி இறைவனிடத்தில் இம்மூன்றையும் அர்ப்பணித்து விட்டு களங்கமற்ற இதயத்துடன், பற்றற்ற தொண்டு புரிந்தால் இறையருள் கிட்டும் என்பதில் ஐயம் இல்லை.

நாம் ஒவ்வொருவரும் தினமும் வைகறையில் துயிலெழுந்து, மலசலங் கழித்துப் பின் அடிகளார் காட்டியுள்ள 21 ஆசனங்களை முறையே செய்து, அரை மணிநேரம் சவாசனத்திருந்துஅதன் பின் சிறிது அன்னரசசஞ்சீவியை உட்கொண்டு, நீராடி நல்லாடை அணிந்து, பத்மாசனத்திருந்து சிந்தையை சிதறவிடாது புருவமத்தியில் நிலை நிறுத்தி "உள்ளத்திடத்தைத்தந்து, பற்றற்ற பணி செய்து பரமனருள் அடையும்படியான பாக்கியத்தைத் தந்தருள வேண்டும்" என்று இறைவனை இறைஞ்சி வேண்டித்தியானித்தல் வேண்டும். அதன்பின் குளிர்ந்த ஆகாரமருந்தி நம் கடமைகளை வெற்றிகரமாகச் செய்ய முற்படல் வேண்டுமென்று நமது குருபிரான் அவர்கள் "ஞான பண்டிதன்" என்னும் நூல் வாயிலாகப் புகட்டியுள்ளனர்.

## குரு வணக்கம்

(1) அன்பு, அடக்கம், ஊக்கம், உணர்வு, பொறுமை, நேர்மை, சமத்துவநோக்கு முதலாம் நன்னெறி தன்னெறியாய்க் கொண்ட அண்ணலே போற்றி! போற்றி!!

(2) பிறந்து, வளர்ந்து, இன்பத்தை நுகர்ந்து, மகிழ்ந்தஉடல் தளர்ந்து, முடிவில் அழிந்தொழிந்து போகும் பரிதாபகரமான உண்மையை உணர்ச்சியுடன் உபதேசம் புரிந்திட்ட உத்தமரே போற்றி! போற்றி!!

(3) அழியும் உடலை, அழியாக் கோட்டையாக்க மாந்தர்க்கு யோகாசனங்களைப்புகட்டி, ஆத்மீக வீரியத்தை ஆர்வத்துடன் வாரி வழங்கும் வள்ளலே போற்றி! போற்றி!!

(4) மக்கள் பணியாளராகிக் கடமை பல செய்து மக்கட்கு வாழும் நெறிவகுத் தளித்த குணக்குன்றே போற்றி! போற்றி!!

(5) நல்லுடலும், நல்லறிவும், நற்செயலும், மனமகிழ்வும் அமைந்த எம் அண்ணலே போற்றி! போற்றி!!

(6) பன்னீர் அங்குலம் பாய்ந்தழியும் பிராணனை நாலிற் குறுக்கி ஆயுளை பெருக்கும் முறைதனை வகுத்தளித்த பெரியோய் போற்றி! போற்றி!!



அருள் வடிவில் அடிகளார்

# போசன விதியோடு ஆசனம் பழகு.

ஆசனப் பயிற்சிகளை எதற்காகச் செய்யவேண்டும்? அதனால் என்ன லாபமடையப் போகின்றோமெனக் குதர்க்கம் பேசி தற்கால மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சதவிகிதம் கொடிய பிணிகளுக்கு ஆளாகி வைத்தியர்களைத் தேடியலைந்து சரணடைந்தும் பயனடையாமல் மாண்டு போகின்றார்கள். அவ்வாறல்லாது, உங்களுடைய சரீரத்திலுள்ள இரத்தத்தைச் சுத்தமாக்கி, கெட்ட கிருமிகளை யெல்லாம் நசுங்கச் செய்து, ஆரோக்கிய வாழ்வையும், ஆயுள் விருத்தியையும் அளிக்கத்தக்கன, இங்கு சித்திரங்களில் காட்டப்பட்டிருக்கும் அப்பியாசங்களேயாகும். ஆதலால் தேகசுகமும் தெய்விக வாழ்க்கையும் பெறவிரும்பிய ஒவ்வொருவரும் காலந்தாழ்த்தாமல் இப் பயிற்சியை மகிழ்ச்சியுடன் அனுட்டித்து பலனடைவீர்களாக!

அப்பியாசிகள் காலை நான்கு மணிக்கு மேல் ஐந்துமணிக்குள் நித்திரை நீங்கி படுக்கையில் மல்லாந்து படுத்து மூச்சை உள்ளிழுத்து விரைந்து எழுதல் வேண்டும். பின் சற்று உலாவி மலசலங் கழித்துக் கை, கால், முகங் களைச் சுத்தி செய்தல் வேண்டும். மலசலம் இலகுவாகக் கழிப்பதற்கு. வாயைச் சுத்தம் செய்து சிறிது நீரருந்தி நௌலி, உட்டியாண முதலியன செய்ய வேண்டும். கை, கால், முகம் சுத்தி செய்தபின் மேடு பள்ளமற்ற சமதரையில் விரிப்பமைத்து அதன்மேல் பத்மாசனத்தமர்ந்து (முடியாத வர்கள் சித்தாசனம் அல்லது சுகாசனத்தில் இருக்கலாம்) புருவ மத்தியில் கண்ணையும் மனதையும் பொருத்தி இறைவனைத் தியானித்து ஆசனங்களை முறையே செய்தல் வேண்டும்.

ஆசனங்களை அமைதியாகவும், நிதானமாகவும் பயிலுதல் வேண்டும். அவசர புத்தியும் விதிமுறை தவறிய பயிற்சியும் துன்பத்தை விளை விப்பன. ஆதலின் புது அப்பியாசிகள் ஆசான் துணைகொண்டு பழகுதல் சாலச் சிறந்தது.

யோகாசனங்களை சிறியோர் முதல் முதியோர் வரை ஆண்களும் பெண்களும் செய்து, நோயணுகாது உடலைக் காப்பதுடன் நோய்க்கடிமை யாகிய உடலை மீட்கவும் முடியும். தத்தமது சத்திக்கேற்ப சிறு சிறு ஆசனங் களைப் பயின்று பயனடையலாம். பெண்கள் இப் பயிற்சியினால் ஆரோக்கிய வாழ்வும், குன்றா எழிலும் பெறுவதுடன் பிரசவ காலத்து சுகப் பிரச வத்தையும், சுகதேகிகளான குழந்தைகளையும் பெற முடியும். இவர்கள் மாதருதுவான காலத்திலும் கர்ப்பமுற்ற காலத்திலும் அப்பியாசத்தை தவிர்த்தல் வேண்டும்.

அப்பியாசிகள் சீரிய பலனைப் பெற தூய-சைவ-உணவைக் காலமறிந்து அளவுடன் உண்ணுதல் வேண்டும். சைவ உணவு சாத்வீக குணத்தை அளித்து. ஆத்மிக சக்தியை பெருக்கி, ஞானத்திற்கு வழிகாட்டுகிறது. அசைவ உணவு ராஜத குணத்தை அளித்து, அஞ்ஞானத்தைப் பெருக்கு கிறது. ஆதலின் சைவ உணவை காலமறிந்து அரை வயிற்றிற் குண்டு, கால் வயிறு நீரருந்தி வருதல் சாலச் சிறந்தது.

இவையன்றி மதுவும், மாதும், பொடியும், புகையும் நீக்கப்பட வேண்டியவை. இவை நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தி உடலோடு உயி ரையும். அறிவையும், உணர்வையும் கெடுக்கின்றன. இவற்றிற்கு அடிமை யானவன் சாணேறி முழம் சறுக்கி ஈற்றில் துன்பப் பெருங்கடலில் அழுந்து வான். நெறிபட்ட வாழ்வும், தெரிபட்ட உணவும் அப்பியாசிகளை ஆன்ம வீரர்களாக்கி, நடுநாடியோகத்தில் தேர்ச்சியுற்று ஞான வீரர்களாக்கும் என்பது திண்ணம். ஆதலின் இவ் வாசனங்களை முறையே பயின்று முத்திக்கு வித்திட்டு நற்கதி அடைவோமாக!

— யோகப்பள்ளி —







1. பவனமுத்தாசனம்
2. கருணபீடாசனம்
3. சர்வாங்காசனம்
4. கிசகாசனம்









5. பச்சிமௌதாசனம்
6. மாரீசாசனம்
7. பற்குணாசனம்
8. பத்மாசனம்







9. வஜ்ரவசனம்
10. கோமுகாசனம்
11. பத்தபத்மாசனம்
12. யோகமுத்ராசனம்









13. பத்மலோலாசனம்
14. நௌலியாசனம்
15. உட்டியாணாசனம்
16. மச்சேந்திராசனம்









17. பாதாசனம்
18. ஹஸ்தாசனம்
19. மயூராசனம்
20. சிரசாசனம்







21. சர்ப்பாசனம்



22. தியானம்



அருட்டிரு அடிகளாருடன், சர். கந்தையா வைத்தியநாதன்.

# யோகர் தந்த முத்தாரம்

தொகுப்பு: *சிவதொண்டன்*

*சிவஞானிகளும், சீவன் முத்தர்களும் வாழையடி வாழையாகத் தோன்றி அருள் மழை பொழியும் புகழோங்கு தமிழகத்தின் ஒரு பகுதியாய் விளங்கும் யாழ்ப்பாணப் பொன்னகத்தில் எம்முடன் கூடிக் குலாவித் திருவிளையாடல் பல செய்த மாபெரும் ஞானியாம் கொழும்புத் துறைப்பதி யோகசுவாமிகளை அறியாதார் அறியாதாரே. அன்னாரது அநுபூதி வாக்குகளிற் சிலவற்றை ஈங்கு திரட்டித் தருகின்றோம். உண்மையை நாடி உழைக்கும் சாதகர்கள் இம்மறை மொழிகளை சதா ஊன்றிச் சிந்தை செய்து மெய்விளக்கம் பெறுவார்களாக!*

**1.** நாம் வாழும் உலகம் ஒரு பொன் உலகம்.

**2.** இது ஒரு அருமையான உலகம். இங்கே ஒரு பொல்லாப்புமில்லை.

**3.** சர்வம் பிரம்ம மயம்; அண்ட பிண்டமெங்கும் அதுவெனக் கண்டு தொண்டு செய்வது தகுதி.

**4.** அனைவருக்கும் தெய்வம் ஒன்றேயென்பதையறிந்து உலகில் வாழ்வதே தொண்டு.

**5.** காயமே கடவுளினிருப்பிடம்.

**6.** தன்னை அறிந்தால் தவம் வேறில்லை.

**7.** எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்.

**8.** எல்லாஞ் சிவன் செயல், எல்லாஞ் சிவன் வடிவு, எங்கும் அவனென்றால், பொல்லாப்பிங்கேதடி.

**9.** அனைத்தும் சிவன் செயலென்றறிந்த பெரியோர்க்கு மனத்துயர் வந்திடுமோ?

10. ஆதாரத்தாலே நிராதாரஞ் சென்றபின் பாதார விந்தமென்றுந்தீபற! பலித்தது பூசை யென்றுந்தீபற!

11. எந்த நேரமும் இறைவனிணையடி சிந்தை செய்பவர் சீவன் முத்தரே.

12. பொருந்திய வண்ணம் பூமியில் வாழுதி.

13. ஆவதும் ஒன்றுமில்லை அழிவதும் ஒன்றுமில்லை.

14. உனக்குச்சரியாக நட; உன்னை உனக்கு ஒழியாதே; உன்னை அறி.

15. நாமென்றும் உள்ளோம்; நமக்கொரு குறைவுமில்லை.

16. எல்லாம், எப்பவோ முடிந்த காரியம்; முழுவதும் உண்மை; யார் அறிவார்?

17. தொழுது வணங்குவாய் துரிதநிலை சாருமட்டும்.

18. கருமம் செய்யாமையை விரும்பாதே, கருமத்தைப் பற்றாதே, செய்வதிலும் செய்யாமையிலும் அது தங்கியிருக்கவில்லை.

19. வேடம் ஒன்றும் போடாதே வீணருடன் கூடாதே.

20. எல்லாம் வல்லவர் செயலை யார் அறிவார்?

21. ஒழுக்கம் விழுப்பந் தரும் தம்பிமாரே!
ஓம் என்று சிந்தை செய்வீர்
தம்பிமாரே!

வழுக்கிவிழுந் தாலும் தம்பிமாரே!
மலரடியைச் சிந்தை செய்வீர்
தம்பிமாரே!

22. ஈவது விலக்கார்க்கு எல்லாமுண்டு. எல்லாரிடத்தும் ஈசனுண்டு.

23. கைவினை செய்து கழலடி போற்றுக.

24. ஏது மொன்றற நில்; சுட்டிறந்து நில்.

25. மாதிரி யொன்றும் பண்ணாதே.

26. சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம்.

27. சும்மாயிரு.

## "இறவாமற் பிறவாமல் எனை ஆள் சற்குருவாகி"

*மண்ணுடன் விண்ணும் கலந்தொளிர்வது போல, கண்ணுடன் காண்பான்—இறைவன்—கலந்தொளிர்வதை மகிதல மக்கள் கண்டுங்காணாது இருக்கின்றார்கள். பரமண்டல மாயாசத்தியோடு கூடியாடிய பாதத்தை பருவ திசையிலன்றோ பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஓருயரிய சற்குருவினிடத்து 'உபந்நியாசம்', 'உபதேசம்', 'உபவாசம்', 'உபநயனம்' முதலாம் படிகளொவ்வொன்றையும் நன்கு பயின்றுணர்ந்தால், எந்த இடுக்கண்களையும் தாண்டி இறையருள் பெற்றுய்யலாம். இவ்வாறல்லாது, தற்கால உலகப்போக்கை உற்று நோக்குங்கால் தன்னை உணரும் மார்க்கம், பெரிதும் பிற்போக்காகவே போய்க்கொண்டிருக்கின்றது. அருள் ததும்பிய பெரியார்கள் இயம்பியுள்ள பொன்மொழிகளும் புறம்பாகக் கருதப்படுகின்றன.*

*ஆகவே, பிறவிநோயகற்றக் கருதிய எவரும் இரகசிய வஸ்த்துக்களை சற்குருவினிடத்தறிந்து, அநித்திய வழிகளை யொழித்து நித்திய வஸ்த்துவை யுணர்ந்து நிலைநிற்பார்களாக!*

—குருமதிமாலை

# அருள் ஒளி வழிபாடு

கி. சீதாராமசாஸ்திரிகள்

- யாழ்ப்பாணம் -

அகில உலகிற்கும் கண்போல விளங்கும் ஆதவன் அந்தி நேரத்தில் ஆழ்கடலில் அஸ்தமிக்கும் பொழுது தன் ஒளியை தீயினிடம் அர்ப்பணித்து மறைகின்றான். இக்கருத்தை சுருதிவாக்கியமும் விளக்குகின்றது. ''ஆதித்யோவா அஸ்தமயன் அக்நிம் அனுப்பிரவிசதி'' ஆதவன் அஸ்தமிக்கும் பொழுது தீயினுள் பிரவேசிக்கின்றான் என்பது இதன்கருத்தாகும். தீயின் இயற்கைக்குணம் சூடு. செயற்கையால் வந்தகுணம் ஒளி. பகலில் பானுவின் ஒளியில் மக்கள் நல்வாழ்வை நடத்துகின்றனர். பானு மறையும் பொழுது எங்கும் இருள் வந்து சூழ்ந்து கொள்ளுகின்றது. மக்கள் அப்பொழுது விளக்கேற்றி இருள் நீக்கி இன்பம் காண்கின்றனர். இருளை நீக்கி ஒளியைத் தந்தருளுகின்ற தீப ஜோதியை மாலையில் நாங்கள் ஒவ்வொருவரும் வணங்கவேண்டும். இறைவனின் திருவருளாகிய ஜோதி ஆன்மாக்களின் அஞ்ஞான இருளை நீக்கி, சிவஞான ஒளியை அருளிப் பேரின்பவாழ்வை அளிப்பது போல வெளியிருளை நீக்கி நல்லொளியைத் தந்து மக்களுக்கு இன்பவாழ்வை அளிப்பது தீபஜோதியாகும். ஆகவே அந்த தீபஜோதி தீபலட்சுமி என்று அழைக்கப்படலானாள். இறைவனின் திருவருள் சக்தியாகும். அஞ்ஞான இருளை நீக்குவதும் சிவஞான ஒளியை அளிப்பதுவுமே சக்தியின் தன்மைகளாகும். லலிதாஸஹஸ்ர நாமத்தில் இவ்விரு தன்மைகளை விளக்கும் இரு நாமங்கள் தேவியாருக்கு சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றன. அஞ்ஞான திமிராபஹி-சிவஞானப் பிரதாயினீ அறியாமை இருளைநீக்குபவள், சிவஞான ஒளியைஅருளுபவள் என்பது இதன் கருத்தாகும். ஆகவேதான் ஆலயங்களில் இறைவனின் அருள்வடிவமாகிய உருவத்திருமேனியை ஜோதியினூடாக ஆராதித்து வருகின்றோம். இதனை தீபாராதனை என்று கூறுவர். தீப ஜோதியினூடாக ஆராதனை—வழிபடுதல் என்பது இதன் கருத்தாகும். இந்த தீப ஜோதியை தீபலட்சுமிஎன்று போற்றுகிறார்கள். அருட்ஜோதி அறியாமையை நீக்கி சிவஞானத்தையருளுகின்றது. தீபஜோதி வறுமை, பிணி, பொறாமை முதலிய துன்ப வாழ்வை நீக்கி செல்வம், சுகவாழ்வு, அன்பு, பக்தி முதலிய இன்பவாழ்வை அருளுகின்றது. அண்ணாமலையில் இறைவன் திருக்கார்த்திகை யன்று அரிபிரமாதிகளுக்கு அருட்ஜோதி காட்டியருளினார் என்பதை நாங்கள் இன்றும் போற்றி வணங்குகின்றோம். கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் நிரையாக விளக்கேற்றி வாசலில் வைத்து இன்றும் நாம் வழிபட்டு வருகின்றோம். இம்மாதத்தில் மாலையில் அருட்ஜோதி நம் இல்லம்நோக்கி வருகின்றாள். அந்த அம்மையாரை அன்புடன் வரவேற்கும் வரவேற்புமுறையே இந்த தீபஜோதி வழிபாடாகும். ஆகவே ஒவ்வொருநாளும் இல்லத்தில் மாலையில் விளக்கேற்றி மக்களுடன் இந்த ஜோதி வழிபாட்டை நடத்தி வரவேண்டும். அப்படி வழிபடுபவன் எல்லாவகையான செல்வங்களையும் பெற்று புகழுடன் நீடூழி வாழ்வான். நாம் யாரை உள்ளத்தில் தியானித்து வழிபடுகின்றோமோ அந்த மூர்த்தியாகவே அந்த ஜோதிகாட்சியளிக்கும். இதில் ஐயமில்லை. அருணகிரிநாதர் தீப ஜோதியில் முருகப்பெருமானைக் கண்டார். வாக்கினால் புகழ்பாடிப் போற்றினார்.

தீபமங்கள ஜோதி நமோ நமோ
தூய அம்பல லீலா நமோ நமோ
தேவ குஞ்சரி பாகா நமோ நமோ— அருள்தாராய்

இந்த தீபஜோதியை வழிபட வேண்டிய முறை சுத்தமாக விளக்கப்பட்ட தீபகத்திற்கு குங்குமப் பொட்டிட்டு பசுநெய் அல்லது எண்ணெய் (தேங்காய் நெய் மத்திமம்) விட்டு நூற்திரியிட்டு விளக்கேற்ற வேண்டும். மண்ணெய் விளக்கிலிருந்து நேரே விளக்கேற்றுவது உத்தமமன்று. ஐந்து முகமாகவோ, மூன்று முகமாகவோ அல்லது ஒரு முகமாகவோ அமையலாம். விளக்கிற்கு முன் மெழுகிக் கோலமிட்டு அலங்கரித்தல் வேண்டும். தீபலட்சுமி கிழக்கு முகமாக கொலுவிருக்கின்றாள் என்று பாவனை செய்து கொண்டு வடக்கு முகமாக அமர்ந்து தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பக்திப்பாடல்களைப் பாடவேண்டும். முடிவில் மூன்று, ஐந்து அல்லது பன்னிரண்டு முறை

நமஸ்காரம் செய்தல் வேண்டும். ஒரு அரிசியை விளக்கின் தகட்டில் வைத்து திரியை எண்ணெயில் இழுத்து விடவேண்டும். வாயால் ஊதியோ கையால் விசியோ அணைக்கக்கூடாது. பக்தியாகிய நெய்யில் ஜோதியை மறையச் செய்தல் வேண்டும். மலர் கிடைத்தால் தீபகத்தின் திருவடியில் சமர்ப்பிக்கலாம். அல்லது மாலையாகத் தொடுத்து தீபகத்தின் தண்டில் சாற்றலாம். தீபகத்தின் உச்சியில் மலர் வைப்பது உத்தமமன்று என்று சான்றோர் கூறுகின்றனர். தீபவொளிபட்டுக் கருகி விளக்கில் விழுந்து ஜோதியை அவித்துவிடும் என்று கருதி அவ்வாறு கூறியுள்ளார் போலும்.

முறையாக இயன்றவரை தீபஜோதியை நாம் வழிபட்டு வருவோமேயானல் வேத மந்திரத்தில் கூறிய பயன்களைப் பெற்று நல் வாழ்வை அடையலாம்.

**வேதமந்திரம் கூறுவதாவது**

''ஓ! தீபஜோதியே!! யான் முன் செய்த பாவ இருளை நீக்கி ஆன்மஜோதியை பிரகாசப் படுத்துவாயாக! எமக்கு நல்ல செல்வத்தை அளிப்பாயாக! எத்திசையிலும் நல்வாழ்வை அளிப்பாயாக! யான் அறியாது தவறுசெய்து விட்டால் என்னை மன்னிப்பாயாக! பசுச் செல்வம், மக்கட் செல்வம், வாகனச் செல்வம் யாவற்றையும் அருளுவாயாக! மறுமையில் பிறவாத பேரின்ப வாழ்வுடன் கூட்டி வைப்பாயாக!'

**அருட் ஜோதிக்கு வணக்கம்.**

## பிறந்ததின் பயன்தான் என்ன?

அழியும் பொருளுக்குள் அழியாத பொருளாய் - இரவுக்குப் பகலாய் - துன்பத்துள் இன்பமாய் இறைவன் இருக்கிறன். ஓயாத்துயரலைகளுக் கூடாகவும், திராச்சஞ்சலங்கட் கூடாகவுந்தான் நாம் இவனை உணரமுடியும். உணர்ச்சியே இறைவன். உள்ளத்தில் இறைபக்தியும், சத்திய நெறியும் உரம் பெற்றால் தான் இவனை எம்மால் உணரமுடியும். இவனது இணையற்ற பெருங்கருணையைப் பெற்று அனுபவிக்கத்தக்கதாக வாழ்வைப் பண்படுத்தாத மக்கள் பாரில் பிறந்ததன் பயன்தான் என்ன? சித்தத்திட மற்றவர் இருந்தும் இறந்தவரே.

நாம் இப்பிரபஞ்சத்தில் சேவை செய்வதற்காகவே மனித உருவெடுத்திருக்கிறோம். இயற்கையை அநுசரித்து வைராக்கியத்துடன் கடமையாற்றவேண்டும். உடற் பயிற்சியுடன் உளப்பயிற்சியும் செய்தல் வேண்டும். இவை இரண்டும் சேர்ந்தால் நீண்ட ஆயுளும் நிறைந்த வாழ்வும் கிட்டும். வாலிபர்களும், வனிதையரும் யோகப்பயிற்சி செய்து தமது தேகங்களை வச்சிர தேகங்களாக ஆக்கித்தேசப் பணிபுரிவதோடு, மங்களகரமான இளஞ் சந்ததிகளை ஞானவீரர்களாக ஆக்கி உலகிற்களிக்கவேண்டும்.

நிட்டூரச் செயல்களைச் சதாகாலமுஞ் செய்து, வாழ்க்கையை பாழாக்கிவிடாதீர்களென அன்புகூர்ந்தழைத்து அறைகூவினலும், சரிதானெனச் செவிசாய்த்து ஒப்புக்கொள்ளப் போதிய மதி கிடையாதபடியால், மழலை மதியுள்ள மக்கள் மயங்குகின்றனர். ஆங்காலம் அருகிலொளிரும் போது கலக்கந் தெளிந்து எழுந்து கண்ணியமாகக் கடமையோடு உறவாடுவார்களென்பதையும் நாம் அறிவோம்.

— சித்ரமுத்தன் —

# எப்படிச் சொல்ல முடியும்?

செ. தனபாலசிங்கன் B. A.(Lond.)

ஆண்டவனைக் காண எத்தனை எத்தனை முயற்சிகள். மனிதன் காவியுடுத்துத் தாழ் சடைவைத்துக்காடுகள் புக்குத் தடுமாறுகின்றான். காய்கனி துய்த்துக் காயம் ஒறுத்துக் காசினி முற்றும் திரிகின்றான். கோயில்கள் கட்டி எழுப்புகின்றான். மூர்த்திகளை உருவாக்குகின்றான். ஆயிரம் ஆயிரம் குடங்களைக் கொண்டு பாலைச் சொரிந்து நீரைச் சொரிந்து தேனைச் சொரிந்து அபிஷேக ஆராதனைகள் பண்ணிப் பார்க்கின்றான். யாகங்களைச் செய்து அவிசைச் சொரிகின்றான். மூக்கைப் பிடித்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்து தியானம் பண்ணுகின்றான். அஞ்சி வழிபடுகின்றான். கெஞ்சி வழிபடுகின்றான். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றி, பின்னர் உண்ணத் தெரிந்து, உடுக்கத் தெரிந்து, உறங்கத் தெரிந்த நாள் முதல் ஆண்டவனைத் தேடிப் பார்த்துக் கொண்டே வருகின்றான்.

எல்லாம் வல்ல இறைவனும் எப்படி எப்படியோ அன்பர்கள் உள்ளத்திலே உருவெடுத்து விடுகின்றான். வானம் மணிமுகடாய் மால்வரையே தூணாக ஆனபெரும் பார் அரங்காக அண்டங்களை ஆட்டிவைக்க ஆடுகிறான் நடராஜன். குருவாய் வருவாய் என்று ஓலமிடுவார்க்குத் தட்சணாமூர்த்தியாய்த் தரிசனம் தருகின்றான். ஆணும் பெண்ணும் இணைந்த நிலையில் உலகம் உருவாகின்றது எனக் காட்டித்தரத் தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்த பெரும்பித்தன் ஆகிவிடுகின்றான். கோவில் சுடுகாடு, கொல் புலித்தோல் நல் ஆடை, தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி. அவன் காயில் உலகனைத்தும் கற்பொடி காண்சாழலோ என்றல்லவா உருத்திரமூர்த்தி உருவெடுக்கின்றான். வேதம் அசைக்கும் கோவணமும், மெய்யில் நீறும், உள்ளாளக் கீதம் இசைக்கும் கனிவாயும் உள்ளே நகையும் கிண் கிணி சூழ்பாத மலரும் பாதுகையும் பலிகொள் கலனும் கொண்டு நருக்கித்திரியும் மக்களின் தருக்கு அடக்க ஆணவத்தையும் அன்பையும் பிச்சை கேட்டு இறைவன் பிக்ஷாடனாகிக் கபாலியாகியே விடுகின்றான். பக்தன், அகிலாண்டேஸ்வரியாம் ஆதிபராசக்தியை அலைமகள், மலைமகள், கலைமகள் என்றெல்லாம் உள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்துவிட்டு,

"தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில்
[வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
[என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்
[கண்களே"

என்று அன்னையின் கடைக் கண்களுக்குக் காவல் கிடக்கின்றான். யானை முகத்தையும் தொந்திவயிற்றையும் குட்டைக் காலையும் கொண்டு வித்தகவிநாயகனைச் சிருஷ்டித்து,

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

என்று ஏத்துகின்றான். அழகைக் கண்டு, இளமையைக் கண்டு, இறைமையைக் கண்டு, வைகபுனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பில் ஊறிக் கிடந்தவன் வேலுண்டு வினை இல்லை, மயிலுண்டு பயமில்லை என நெஞ்சில் உரம் பெற்று மயிலோடும் வேலோடும் வேலவனைப் பார்த்துச்

"செங்கேழடுத்த சினவடிவேலும் திருமுகமும்
பங்கே நிரைத்த நற்பன்னிரு தோளும் பதும மலர்க்
கொங்கே தரளம் சொரியும் செங்கோடைக்
குமரன் என
எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந்து
எதிர்நிற்பனே.'

எனப்பாடி அஞ்சுமுகம் தோன்றும் போதெல்லாம் ஆறுமுகனைப் பார்க்கின்ருன். தீராத விளையாட்டுப் பிள்ளை, தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை, தின்னப்பழங் கொண்டு வருவான், பாதிதின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான் என்று கொண்டல் வண்ணன் கோபாலன் வெண்ணெய் உண்ட வாயனைப் பார்க்கின்ருன்,

இங்ஙனம் அதீதமான கற்பனைகளால் கோவில்கள் உருவாகின்றன. கோபுரங்கள் உயர்கின்றன. சுருக்கமாகச் சொன்னுல், பக்தன் கலையைக்கண்டு, சிலையைக் கண்டு கடவுளைக்காணத் துடிக்கிருன்.

இத்தனை தூரம் கடவுள் மூச்சுக்குக் காவல் கிடக்கும் சைவச்செந்நெறிச் செல்வர்களைத் தட்டி நிறுத்துகிருர் தண்ணருட்செல்வர் மணிவாசகர். 'போக்கிலன் வரவிலன் எனக் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்று அழுத்தம் திருத்தமாக அடித்துச் சொல்லுகிருர். அவர் சொல்வதில் நியாயமிருக்கிறது!

மாணிக்கவாசகருக்குச் சாட்சி சொல்ல அப்பர் வருகிருர். பாடுகிருர்.

''மைப்படிந்த கண்ணாளும் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடையனல்லன் ஒருவனல்லன்
ஓருரனல்லன் ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் னென்றெழுதிக் காட்டொ
[ணதே''

அப்படியானுல் கேட்டாரும் அறியாதானை ஒருவரும் அறிந்து விடவில்லையா? அறிந்துதான் இருக்கின்ருர்கள். பழுத்த மனத் தடியவர்கள் ஆண்டவனை அநுபூதியில் கண்டிருக்கின்ருர்கள்.

ஒரு பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை ஒருவனைத் தாய் தேடிக் கொடுக்கலாம். எவர்களும் நினைக்க முடியாதபடி கல்யாணம் பண்ணலாம். ஆனுல் கணவனேடு சேர்ந்து அடையும் இன்பம் எப்படி இருக்கும் என்று மகள் கேட்டால் பதில் சொல்ல முடியுமா?

''மகட்குத் தாய் தன் மணளனேடு ஆடிய
சுகத்தைச் சொல்லெனிற் செல்லுமா றெங்ஙனே?''

'அந்த இன்ப சுகத்தை மகள் அநுபவித்து தெரிந்து கொள்ள வேண்டும். அதுபோல இறைவன் இன்ப அநுபவத்தை விளக்க முடியாது.'' மனவாக்குச்சொல்லாலே அடைவதற்கு அரியவன்; மூன்று காரணங்களின் நுகர்ச்சிக்கும் அப்பாற்பட்ட அவனை எப்படிப் யிருப்பான் என்று சொல்லவே முடியாது. உருவம் எதுவும் இல்லாதவன். அவன் அருவே உருவானவன். ஆனுல் நாம் செய்யக்கூடிய தொன்றுண்டு. அவன் திருவடிகளில் தலைவைத்து வீழ்ந்து இறைஞ்சினுல், அவனிடத்தே முறுகிய அன்பு கொண்டால், நீயே அவனைக் காண முடியும். நான் கண்ட மாதிரியே காண முடியும். நான் எவ்வாறு கண்டேன் என்று கேட்டால் என் அநுபவத்தை எப்படிச் சொல்ல முடியும்?'' என்று அருணகிரியார் வழிப்படுத்துகின்ருர். பாடல் இதுதான்!

''வேலே விளங்குகையான் செய்யதாளினில் வீழ்ந்
[திறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பதல்லால் மனவாக்குச்
[செய
லாலே அடைதற்கரிதாய் அருவுருவாகி ஒன்று
போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே''.

முருகன் திருக்கரத்தில் பொலியும் ஞான வேலைப்பார்த்து அவன் திருவடிகளில் விழ்ந்திறைஞ்சினுல் அருணகிரியாரைப் போல நாமும் முருகனைக் காணலாம். அந்தப் பெருமானை நம்முடைய இன்ப அனுபவப் பொருளாக உணர்ந்துகொள்ளவும் முடியும். எப்படி இருப்பான்? என்று கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்?

# “முருகா நீ வரவேண்டும்”

எமதருகிலமைந்துள்ள ஞானகாயத்தில் நடமிடும் அம்பிகை மனேன்மணியைப் பார்த்து பரமானந்தமுற, உன திருவிழிகளும் இமையாத நாட்டம் பெறவேண்டும்; கண்ணிமையாத நாட்டமற்ருல் கலியுகவரதனிைட்டங் காண எளிதேயாகும். கேட்டுத் தெளியவோ, ஏட்டிலெழுதவோ இவை இயலா முருகன்-அழகு அறியாப் பொருள், குறைவற்ற செல்வம், மாசற்ற மாணிக்கம், தேடாத்திரவியம், தோன்ருத்துணை, ஒவ்வொருவர் உள்ளும் புறமும் சூழ்ந்திருக்கும் ஆதியந்தமற்றவன். அடியார்களுக்கு அடியவன். அவனை வழிபட முயலுமெவரும் முகக்கண்ணைமூடி அகக் கண்ணுல் இறைவன் மலரடி காண மன்ருடல் வேண்டும்.

—குருமதிமாலை

# அருட்பிரகாசர் கண்ட அருளொளி இன்பம்

(சாது அருள்ஜோதி
மஞ்சக்கொல்லை)

நந்தமிழகத்திலிதுகாறும் அவதாரம் செய்துள்ள மகான்கள் பலருள் மிகச்சமீப காலத்தவரும் சமரச சுத்தசிவ சன்மார்க்கம் என்றதன் கருத்துக்களை யெடுத்துரைத்து சமயப் புரட்சி செய்த பெருந்தகையுமாகிய அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளை, தமிழ்நாடு செய்த தவப்பயனுக வுதித்த மகான்களில் ஒருவரெனக் கூறின் மிகை யாகாது. இத்தகைய மகானுபாவருடைய அருட் பெருந்திறமையும் பெருமையும் அவ ரால் பாடப் பெற்றுள்ள, 'திருவருட்பா என்ற ஆறு திருமுறைகளின் வாயிலாக அறியக் கிடக்கின்றது. எனினும் இன்று அன்னுர் கொள்கையைப் பின்பற்றுவோரெனக் கூறிக் கொள்ளும் சன்மார்க்க நேயர்கள் பலர் "சாதியிலே, மதங்களிலே, சமயநெறிகளிலே சாத்தி ரச்சந்தடிகளிலே" ..."சழக்கு வெளுத்தது, சாதி யாச்சிரமாச்சாரஞ் சமயமதாச்சாரமெனச் சண்டை யிட்டகலக வழக்குவெளுத்தது" என்பது போன்ற சில பாடல்களைப்பாடி சாதி, மத, சமய அவச் சம்பிரதாயங்களை மறுப்பதோடு நில்லாமல் உருவவழிபாடு, திருநீறணிதல், உணவுநெறி, தெய்வத்தொண்டு முதலிய அருள் நெறிக் குரிய அத்தியாவசியக் கொள்கைகளையும் வெறுத்து வருகின்றனர். இதை ஒப்புக்கொள்ள மனமில்லாத சமயாபிமானிகள் சிலரோ! சுவா மிகளுடைய பாடல்களில் "நீறணிந் தொளிர்அக்க மணிதரித்துயர் சைவ, நெறி நின்றுனக் குரியவோர், நிமலமுறுமைந் தெழுத்துண்ணிலையுறக் கொண்டு, நின்னடிப் பூசை செய்து, "வந்தனைசெய் நீறெனுங் கவசமுண்டு அக்கமாமணியுண்டு அஞ்செழுத்தாம், மந்திரப்படையுண்டு சிவகதியெனும் பெரிய வாழ் வுண்டு தாழ்வுமுண்டோ?" இதுபோன்றஇன்னும் சிலபாடல்களையும் ஆதாரமாகக் காண்பித்து வள்ளலார் சைவ நெறிகளைப் போற்றி யிருப்பதுடன் சைவசமய குரவர்களையும் புகழ்ந்து பாடியுள்ளாராகையால் சைவசமயக் கொள்கைகளெதையும் மறுக்கவில்லையென்றும் பொதுவாக சமயவாதங்கள் பேசி உயர்வு தாழ்வுகற்பித்து வேற்றுமைகளையுண்டு பண் ணும் சிறுநெறியிற் செல்லாமல் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் அனைத்து மதங்களுக்கும் உகந்ததாயுள்ள அருள்ஒளி வடிவாம் ஆண்டவனை வழிபடும் பெருநெறியே அடிகள் கண்ட சுத்தசிவசன்மார்க்கமென்றுங் கூறுகின் றனர். இவ்விரண்டுக்கு மிடையில் சாத்திரவா திகள் சிலர் எல்லாம் வல்ல இறைவன் பார் நீர், ஒளி, வளி, வெளி ஆகிய ஐம்பெரும் பூதங் களின் குணியாயிருந்துஅண்டபிண்டசராசரங்க ளனைத்தையும் இயக்குகிருரென்றும் இவற்றுள் முன்னவையிரண்டிலும் உருவத்தையும் பின் னவையிரண்டிலும் அருவத்தையும் நடு விலுள்ள ஒளியில் அருவுருவத்தையும் சைவ சமயங்கண்டு மகிழ்கிறதெனமணிவாசகப்பெரு மானது ஆழ்ந்த கருத்துக்களையுங் கூறி அவ்வரு வுருவாம் சமரச ஒளியின் மூலம் அகமும் புற முந் துளும்பி வழிந்து உயிர்க்கெலாம் களைகண் ணுகி, தெருள் நிறைந்த இன்பநிலையாய்த் திகழ் கின்ற சிவானுபவ முதிர்ச்சியால் கருணையென் னும் ஜீவகாருண்யம், தயை, ஆன்மநேயம் இவைகளைப் பெற்று அதன் பயனுக மக்களடை யும் இன்பமே அமைதியும் சாந்தமும் ஆனந்தமு மாகிய அருள்ஒளி இன்பமென்றும், இதுதான் அருட்பிரகாசவள்ளலார் கண்ட உண்மையான தத்துவமெனவுங் கூறுகின்றனர்.

இத்தகைய அருளொளியின் உண்மைத் தத்துவங்கள் நாடெங்கும் நலமுறப்பரவ வேண்டுமென்ற நன்னேக்கத்துடன் இராமேஸ் வரம் சேதுயாத்திரை மார்க்கத்தில் அழகன் குளம் என்ற நகரின் அருகாமையில் ஆத்ம சாந்தி நிலையமென, ஓர் நிருபணமமைத்து அதன் வாயிலாகச் சன்மார்க்க முரசுகொட்டி

சனங்கள்பால் அன்புநெறியை வளர்த்துவரும் தவத்திரு சித்ரமுத்து அடிகளாரால் இயக்கப் பட்டுவரும் அருளொளி முழக்கங் காரணமாக அனைத்துமக்களின் இதயத்திலும் ஆண்டவன ருள் குடிகொண்டு ஆன்மநேய ஒருமைப் பாடும் ஆத்மீக சிந்தனைகளும் உதயமாகியிருப் பதுடன் கடல் கடந்த நாடுகளிலும் இதன் கிளைகளாக விளங்கும் அருளொளி நிலையங்கள் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளைக் காணுந் தோறும் எண்ணுந்தோறும் எந்தை அருட்பிர காச வள்ளலார் கண்ட உண்மையான அருள் ஒளி இன்பம் உலகம் முழுதும் பரவுங்காலம் அண்மையில் வந்து கொண்டிருப்பதாயுணர்ந்து மக்களனைவரும் மகிழ்ச்சியடையக் கூடியதாயு ளது.

வாழ்க அருளொளி வையகம்முழுதும்.

சுபம்.

# பரிபூரணனந்தமே

—யோகர் சுவாமிகள்—

ஆத்மா நித்தியமானது, பிரிவில்லாதது, பூரணமானது. சரீரமோ அழியும் தன்மையுள்ளது. பிரிவுள்ளது. இப்படி இருக்கையில் நாங்கள் இவ்விரண்டையும் சரியென்று சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சொன்னால் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?

ஆத்மா எல்லாத்துக்கும் மாதியாயுள்ளது. யாவையும் ஆளுங்கிறது. சரீரமோ தொடக்கமுடையது. ஆளப்படுந் தன்மையுடையது. இப்படி இருக்கையில் நாங்கள் இவ்விரண்டையும் ஒன்றேடொன்று ஒப்பிட்டுப்பார்க்க முடியுமா? அப்படி யொப்பிட்டால் இதிலும் வேறு பழி கிடையாது.

இயற்கையிலே ஆத்மா அறிவுடையது. தூய்மையானது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ்ஞானம் பிறிதுண்டோ?

ஆத்மா பிரகாசமுடையது. அதாவது சுயப்பிரகாசமுடையது. சரீரமோ இயற் கையிலே இருள்மயமானது. இவ்விரண்டையும் ஒப்பிடலாமா?

யாரொருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கின்றனே ஐயோ, அவனிலுங் கீழ் மகன் யார்? யார் ஒருவன் தன்னுடைய சரீரமென்று சொல்லுகிறனே அவன் மட்பிண்டத்தைத் தன்னுடையது என்று சொன்னது போலிருக்கும்.

யார் ஒருவன் தன்னைப் பூரணனென்றும், நித்தியனென்றும் இயற்கை அறிவுடையவனென்றும்நினைக்கின்றனே அவன் உண்மையறிவாளி. அவனுக் கிணையாகஒரு தெய்வமுமில்லை.

யார் ஒருவன் தன்னை ஓர் அழுக்கும் பற்றமாட்டா வென்றும், மாறுபாடில் லாதவனென்றும், தூய்மையிலுந் தூய்மை யென்றும் நினைக்கிறனே அவனை அறிவாளிகள் ஞானி யென்று சொல்லுவார்கள்.

வேதம், ஆகமம் யாவும் இந்த உலகம் முழுவதும் தெய்வமே நிறைந்திருக் கிற தென்றும் அதைவிட வேறுயாதுமில்லை யென்றும் முறையிடநாங்கள் எப்படி உலகமிருக்கிறது, சரீரமிருக்கிறது என்று நினைக்கலாகும். அப்படி உலகம் சரீர வேறுயிருக்கிறதென்றல் இதைவிடப் பழி பிறிதுண்டோ? ஆன்றேரும் 'நின்னுவார் பிறரின்றி நீயே ஆனய்' என்று சொல்லியிருக்கின்றர்கள்.

இன்னேரன்ன பல காரணங்களாலும் கடவுளைத் தவிர வேறென்று மில்லை. யாவுமவன் செயல்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே.

# 'கடமைகளாற்ற உன்மடமைகளகற்று'

ஸ்ரீ சத். சித்ரமுத்தடிகள்

தவத்திரு அடிகளார் 1954ம் ஆண்டு மார்கழிமாதம் 22ம் நாள் மௌனதவங்களைந்து, கொழும்பு அருளொளி நிலையத்தில் அருளிய நல்லுரைகளைத் தொகுத்தளிக்கின்றோம்.

பணியே செய்வாய்!

1. நீங்கள் தருமநெறி பிசகாத வகையில் பணி செய்து புகழெய்துங்கள் என்றுங்களை யாம் வாழ்த்துகின்றோம்!

உன்னில் உணர்வாய்!

2. இவ்வுலகின் கண் தோன்றி மறைகின்ற இலௌகீக விஷயங்கள் அனைத்தும், உங்களுடைய பரிசுத்த ஆத்மசக்திக்குள் ஐக்கியமென்பதை, ஐம்புலன்களையும் அகமுகமாகத் திருப்பி, அசைவறச் சற்றிருந்து ஆராயுங்கள். இதுதான் உங்கட்கு எளிதாகஜாக்கிரசக்தியைஅளிக்கவல்லதியான நிலையாகும்.

பக்தி செய்குவாய்!

3. நந்தனுகிய பக்தனுக்கு இரங்கி பரநிலையெய்த வழிவிட்ட நந்தி தேவன், உங்களையுமங்கு ஏகாதபடி தடைசெய்யக் காரணமென்ன? உந்தியாகிய சுழியின் நிலையை மட்டிலும் சிந்தித்திருக்கப் பழகிவந்தால் அங்கு அமைதிகாணலாம்.

தீண்டாமை வேண்டாம்.

4. கிருபை பரவிய நமது நாட்டில், தீண்டாமை வடிவில் வளர்ந்து வருகிற காண்டாவனமாகிய காட்டை உங்கள் பகுத்தறிவு என்னும் நெருப்பை மூட்டிப் பஸ்பமாக்கத் துணிவு கொள்ளுங்கள். தெய்வீக திருத்தொண்டர்களுக்கு இதுதான் முதற் பணியாகும்.

தேசப்பணி செய்.

5. அசத்திய சக்திகளைக் கண்டு அணுவுமசையாத இருதயமுடைய உறுதி மனிதர்களைத் தான், எதிர்வரும் தேச சேவைக்குத் தெரிந்தெடுக்க வேண்டி இருக்கின்றது. நீங்களும் அதற்கு ஆயத்தமாக இருங்கள்!

மனதிற்கு மருந்து

6. உங்களுடைய மனத்துயரத்தை மாற்றுவதற்கேற்ற அரிய மருந்து அருளொளி, மருந்தொன்றுதான். அம்மருந்தை மறந்து போகாதீர்களென்று போதிப்பதுதான் நமது கடமை. பக்குவ நிசையை அணுகிய மக்கள் ஒப்பத் தருந்த தவமும் இதுவேயாகும்.

எல்லாம் நன்மைக்கே.

7. மாறுபட்ட மனநிலையை உடைய மக்களிடமிருந்தும், நமது நாட்டிற்குப் பல நன்மைகள் உண்டாகத்தான் செய்யும். இதில் ஐயமில்லை. தன்னிகரற்ற தவப் பணிகளை உணரமுடியாத சில மக்கள் உழுது பண்பட்ட நிலத்தில் உரங்களைக் கொண்டு சேர்ப்பது போன்று, உதாசின மொழிகளை வாய்க்குப்பையாக வாரியிறைக்க முயல்வது இயல்புதானே? கலங்கா நிலையை உடைய உங்கட்கு கவலைகளேதற்கு? பணியைத் துணிவுடன் செய்யத் தயங்காதீர்கள்.

எதிர்ப்பும் வேண்டும்.

8. சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக நீங்கள் ஆக்கிய எத்தகைய ஸ்தாபனங்களுக்கும்,

ஓர் எதிர்ப்பும் போராட்டச் சக்தியும் இருந்தே தீரவேண்டும். இல்லையேல் அந்த ஸ்தாபனமானது நாளடைவில் சீர்கேடடைந்து செயலற்றுப் போகுமென்பது நிதரிசனமானதால் எதற்கும் புறங்காட்டாத ஞானவீரர்களாகிய நீங்கள் தொட்ட கடமையைத் தொடர்ந்தாற்றி வெற்றி காண்பீர்களாக!

**தீமையும் நன்மைக்கே.**

9. பகவானாகிய பாற்கடலைப் பருகத் துணிந்த பக்தர்களிதயத்தைப் பழுது படுத்தக் கருதி, பொய்யாகிய புளித்துளியை தெளிக்க முற்படுவார்களானால் பாற்கடல் தயிர்க்கடலாக உறையும். தயிர்க்கடலிலும் தண்ணீரை ஊற்றத் தலைப்பட்டால், தயிர்க்கடல் மோர்க்கடலாக மாற்றமடையும். மோர்க்கடலையும் கலக்க ஆரம்பித்தால் வெண்ணெய்க்கடலாகத் திரளவும் ஆரம்பிக்கும். அதைக் கண்டு அவசரப் பட்டு அக்கினி மூட்டினால் நெய்யாக உருகி மெய்யாகிய சக்தியை விரைவில் வெளிப்படுத்தும் ஆனது பற்றியே பக்தர்களுக்குப் பகைவர்கள் கிடையாதென்பது ஆன்றோர் கருத்து.

**அவசரம் வேண்டாம்.**

10. பெருந் தன்மையுடைய உள்ளத்திலிருந்து பேரின்ப வெள்ளம் பெருகி கரை புரளுமென்பது தவநெறி நின்ற பெரியார்களது அனுபவங்களாகும். அவசரமற்ற புத்தியும் ஆழ்ந்த கருத்தும் உங்கட்கு அவசியம் என்பது நமது உபதேசமாகும்.

**வஞ்சகம் எதற்கு.**

11. பல பாகங்களிலும் பெய்த மழைத் துளிகள் ஒன்றுதிரண்டு ஓடையாகி, முடிவில் நதிகளாகி, அளவற்ற அசுத்தங்களையெல்லாம் தன்னுள் ஐக்கியமாக்கி, கடலோடு இரண்டறக் கலக்கின்ற தன்மை போன்று, உங்களுடைய நெஞ்சமும் வஞ்சகமற்று சாந்தமாகிய சாகரத்தை எய்தி நிற்கட்டும்.

**எல்லாம் இறை கட்டளையே.**

12. கடவுளாகிய பரம்பொருளிட்ட கட்டளைச் சட்டத்தை மாற்றியமைக்கும் மனிதவர்க்கமும் இம் மகிதலத்திலுண்டோ? உங்களிடமுள்ள திருவருட் சக்திக்குப் பணிந்து நல்லவைகள் செய்ய முன்வருவீர்களானால் மேன்மை யுண்டாம்.

**மக்களே! நீங்கள் வகழ்க! வாழ்க!!**

## நீ! ?!!

அறிவுமயமாகிய நீ, அந்தரமாகிய ஏகவெளியை நாடி, மனமாகிய தோணியில் ஐம்புலன்கள், சிந்தனைகள் என்னும் சரக்குகளையேற்றி, ஞாபகமென்ற கணக்கனிடம் ஒப்படைத்து, புத்தியாகிய காவலனைத் துணைக்கனுப்பி, உபசாந்தமென்ற பாயை விரித்து, அகங்காரமென்ற சுக்கானைத் திருப்பி அநித்திய லோகக்கடலைக் கடந்து, நித்திய லோகதுறையைக் கண்டு, சத்தியலோக மாகாணத்தின் துறைமுகம் பிடித்து, சிரத்தை யென்ற கூலிகளை ஏவிச் சரக்குகளை இறக்கி, பேரிளமையூர் மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரி என்ற ஊரிலிருக்கும், நித்திய மங்களநாதனிடம் ஒப்படைத்து. தொல்லைகளை ஒழித்து, தூங்காமற்றூங்கி, சுகம் பெற்று, எங்கும் நிறைந்து, நீயே அவனாய், அவனே நீயாய் ஒன்றற நிற்றலே நிஷ்டை.

—குருமதிமாலை—

# அருணன் உதித்து விட்டான்

— சிவனடியான் —

மார்கழி மாதம், இந்து மக்களுக்கோர் பொன்னானகாலம். வைகறையில் துயிலெழுந்து சூரியஉதயத்தின் முன்பே அருவி நீராடி, காலைக்கதிரவனை வரவேற்க மனைபெருக்கி, மாக்கோலமிட்டு சிவனைத் துதித்து வணங்கும் பொற்காலம். நாளொரு பிள்ளையார் பிடித்து விக்கினம் தீர்க்க விநாயகனைத் தொழுங்காலம். இதுமட்டுமல்லாமல் திருவாசகம் என்னும் மறைதந்த மாணிக்கர் திருவெண்பாபாடிய காலம். தெருவெங்கும் திருவெண்பா பாடல் கேட்கும் காலம்.

அன்று வழக்கம் போல் தான் குருநாதரை தரிசிக்கச் சென்றார் அவர். மிகுமரியாதையுடன் வந்த சீடனைக் கண்ட குரு. ''அடேய் அருணன் உதித்து விட்டான் தெற்கே அருணன் உதித்து விட்டான். போடா, போய் பாரடா, போ'' என்று சத்தமிட்டார். குருவாக்கிற்கு மறுவாக்குக் கூறியறியாத அவர் எழுந்து வந்து விட்டார். குருவின் வார்த்தையைக் காக்க எங்கே போவது. அருணனைத் தெற்கே எப்படிப் பார்ப்பது. உலக அதிசயமல்லவா! ''கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதிக்கும்'' என்று செய்ய முடியாதவற்றிற்கு சிலேடையாக கூறுவார்கள். அப்படியிருக்கத் தெற்கே உதித்து விட்டான் என்றால் எப்படி நம்புவது? சித்தரின் சித்தத்தில் உதிப்பதை யாரறிவார்?

தக்கோர் தகவுடைய தனையர் குருவார்த்தையில் மறைந்திருக்கும் பொருளுணர முயன்றார். சிந்தைக் கெட்டிய வரையில் தட்டுப்படவில்லை. மறுநாள் கொழும்பிற்கு பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. புறப்பட்டுவிட்டார். கொழும்பிற்கு வரும் வரையில் அவர் அடிமனத்தில் இருந்த கேள்வி ஒன்றே ''அருணன் தெற்கில் உதித்து விட்டான்''

கொழும்பையடைந்த அன்பரின் காதில் பல செய்திகள், புதினங்கள் விழுந்தன. அவற்றூடே வந்தது ஒரு நற்செய்தி. பசித்தழும் குழந்தைக்கு பால் கிட்டியது போன்ற ஆனந்தம் கொண்டார். கார் கண்ட மயிலெனப் பூரித்தார். குருவாக்கிற்கு பதில் கிடைத்து விட்டதாக உணர்ந்தார். அப்படி அவரை ஆனந்தக் கூத்தாட வைத்த செய்தி பிறிதொன்றில்லை. கொழும்பில் அடிகளார் என்ற தலைப்பில் தினகரனில் வெளியிடப்பட்ட செய்தியொன்றே. அருளொளி நிலையத்தின் தாபகர் தவத்திரு. சித்ரமுத்தடிகளார் இலங்கை வந்து அருள் ஒளி ஏற்றி வைக்கிறார் என்ற அச்செய்தியைக் கேட்ட அன்பர் ஓடோடி வந்தார் அடிகளாரைக் காண.

வந்தவரை முன்பே அறிந்தவராக வரவேற்றார் அடிகள். அருணனை, அருள் வடிவை, அருட்ஜோதியை தமநிடக்கரத்தேயேந்தி ஜோதி, ஜோதி, ஜோதி என அடிகளார் சிம்மக் குரலில் கணீர்! கணீர்! எனப் பாடிய பாடலைக் கேட்டு மெய் சிலிர்த்தார். அருணன் உதித்தனன். அவரது இதய அம்புயம் விண்டது. அடிகளார் ஆசியைப்பெற்றார் தமக்கு. குரு கூறியவற்றைக் கூறிப் பணிந்தார். முகத்தில் மந்தகாசம் தவழ, ''அப்படியா மகனே? அதையார் அறிவார். எங்கும் நிறைந்த பரஞ்ஜோதி. நான் அதன் ஊழியன்.'' என்று பதில் இறுத்தார்.

பின் அவ்வன்பர் அடிகளாரைத் தன் குருவிடம் அழைத்துச் செல்ல விரும்பினார். அதற்கிசைந்த அடிகளார் தமது வடதிசைப் பிரயாணத்தின்போது அப் பெரியாரை நாடிச் சென்றார். பார்த்தார் பெரியார். அவர் வாய் வழமைபோல் குளறியது.

''புத்தன் வந்தான். ஏசு வந்தான். நபி வந்தான். அவங்கள் பண்ணிக் கிழித்து விட்டாங்கள், நீதான் கிழிக்கப் போறியோ? செய், செய், நம் கடன் பணி செய்து கிடப்பதே. சித்ரமுத்தனுக்கு எல்லாம் தெரியும். அப்படித்

தானே?'' என்று நிந்தாஸ்துதி செய்து வர வேற்றார். அடிகளார் அதே மந்தகாசம் தவழும் முகத்துடன் பெரியாரை அகமுகமாக தரிசித்து அவரில் தானாக ஐக்கியமாயினர். பெரியார் எழுந்து அடிகளாரை அணைத்துக் கொண்டு இன்பப் பெருக்கோடிருந்தார்.

அருளொளி ஓங்கத்தன்தவத்தின்சாட்சியாய் புரிந்து வாழ்த்திய பெரியார் தமது அந்திய காலத்தில் தாமே அதுவாய்—ஜோதியாய் மறைவதை அன்று உணர்ந்திருந்தார்போலும். அருளொளித் தனையரை அணைந்து, இணைந்து தனது பிற்கால ஐக்கியத்தை ஊமை மொழி யில், பேசா மறையில் உணர்த்தினர் அப் பெருமான்.

அவரது திருவிளையாடல் இவரது பிரிவி லேயே வெளிப்பட்டது. அன்னாரது ஈமைக் கிரியை ஜோதி மயமாக ஜோதி வழிபாட்டுட னேயே நடந்தது. அவர் அகில உலக ஜோதி யாய்—அருணனாய் எங்கும் கலந்துறைகிறார்.

இப்படி யெல்லாம் சிந்தித்த சித்தர், சித்ரமுத்தரைக் கவர்ந்த வித்தர், ஒரு பித்தர். அவரை அறியாத யாழ் மகன், ஏன்? தமிழ்மகனே இலங்கையில் இருக்க முடியாது. அவர்தான் யாழ்நகர் ஈந்த அருட்ஜோதி யோகர் சுவாமிகள். அவரது சிடர் இன்றும் அவர் சேவையை அகமுகமாய் செய்து வரும் திருவாளர். பொன்னம்பலம் அவர்கள்.

இவ்வாறு யோகர் போற்றிய அருளொளி, தாமே ஐக்கியமான பரஞ்ஜோதி, இலங்கை வாழ் மக்களிடையே என்றென்றும் நின்று பிரகாசிக்கட்டும். அத்திருச்சேவையைச் செய்து வரும் சித்ரமுத்தன் சேவை வளர்ந் தோங்கட்டும். இன்பமே சூழட்டும். எல்லோ ரும் வாழட்டும்.

அன்பேசிவம்

# நீ! யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது. இதுமகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதா வது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன் னிலே என்று சாதனை செய். கடவுள் உள்ளும், புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு

**அவனே நானே**



# "சும்மாயிரு!"

—கே. எஸ். நாதன்—

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடி வெம் புலியையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமை யோடிருக்கலா மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமேனடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்த மே.

—தாயுமானவர்

உலகம் சுற்றுகிறது. சந்திர சூரியர்கள் சுற்றுகின்றனர். அண்டசராசரங்களும் சுற்றுகின்றன. எல்லாம் சுளல் வட்டமாகவே அமைகின்றன. வாழ்க்கை ஒரு சுழற்சி; பிறப்பு, மூப்பு, பெரும்பசி, வான் பிணி, இறப்பு, மீண்டும் பிறப்பு. இன்ப துன்பமும் சுழற்சி, செல்வம், வறுமையும் அப்படியே. இதற்கு முடிவே யில்லையா? உண்டு. அதுதான் சும்மாயிருத்தல்.

யார் சும்மாயிருப்பது? அதற்கு வழி என்ன? ''சும்மாயிரு'' என்று யோகர் சொன்னார். அதற்குப் பொருள் என்ன? என்று ஒருவரிடம் கேட்க அவர் பேசா திருத்தல் என்றார். மௌனத்தில் இறங்கி விட்டார் அந்தப் பக்தர். ஆனால் பலன் கிடைக்கவில்லை. மீண்டும் போனார் யோகரிடம். ''அலையா மனத்தோடு இரு'' என்றார். மௌனத்தை நீத்து மன ஒடுக்கத்திற்கு வழி தேடுகிறார் அன்பர். ஆம், ''சும்மாயிருக்க வழி மனஒடுக்கம்''. ஆனால் மன ஒடுக்கத்திற்கு மார்க்கம்?

''தொட்டதைக் காட்டாவிடிலோ
கெட்டவுன் மனக்குரங்கைத்
திட்டவும் உரிமையில்லையே—கயிறெடுத்துக்
கட்டவும் பெரிய தொல்லையே''

—சித்ரமுத்தன்

''சும்மாயிருப்பது சுகம்'' என்ற வார்த்தையை நம்பி அதற்கு வழிதேட முனைந்தால் முடிவு பெரிய தொல்லையாக அல்லவா முடிகிறது. அப்படியானால் இந்த வீண் நம்பிக்கையை கைவிட வேண்டும் என்று தானே தோன்றுகிறது. சீ, சீ, அது தவறு. கற் கோவில் கண்டு அதனைக் கலைக்கோவிலாக்கினான் தமிழன். முன்னைக்கும் பின்னைக்கும் முடிவுக்கும் வழி கண்டான். காலத்தின் கையில் சிக்குண்டு சிதறிச் சிதைந்து போகாத அரும் பெருந் தத்துவங் கண்டான். அதைக் கல்லிற் சமைத்தான். காலத்தை வென்றான். இன்றும் காத்து நிற்கிறான். ஆனால் எப்படி? கண்ணிருந்தும் குருடனாக, வாயிருந்தும் ஊமையாக, கையிருந்தும் முடவனாக, தலையிருந்தும் முண்டமாக, மெய்ப்பொருளின் உட்பொருள் காணாதவனாக, கல்லையும் மண்ணையும் தஞ்சமெனக் கொண்டான். அது கூறும் தத்துவத்தை மறந்தான்.

இந்துசமையம் கூறும் இறைவன் கோவிலில் கல்லாய், பொன்னாய், வெங்கலமாய், வெள்ளியாய், ஊமையாய், தூற்றுவார் தூற்ற, போற்றுவார் போற்ற, ஏற்றுவார் ஏற்ற, எதையும் கண்டுங் காணாதவனாய், உணர்ந்தும் உணராதவனாய், தெரிந்தும் தெரியாதவனாய், நிர்மலனாய், நிர்க்குணனாய் சிலையாக உருவகிக்கப்பட்டு இருக்கின்றான். சும்மாயிருக்கின்றான். அதனால் அவனுக்கு அழிவில்லை. முடிவில்லை.

நித்தியம் சத்தியமாக என்றும் விளங்கு கிறான். அவன் போதிப்ப தென்ன?

ஆலயத்தில் சிவன் இலிங்கமாக, பற்றற்றவனாக கல்லாய் அமைக்கப்பட்டிருக்கிறான். அவன் தலையில் விழுகின்ற நீரானது தாமரை இலை நீரென உருண்டோடுகிறது. பற்றற்றவன் என்பதால் அல்லவா? அன்றியும் கல்லாய் – கல்நெஞ்சனாய் – உணர்ச்சிகளை வென்று நிர்மலனாய் இருக்கிறான். அப்படித்தான் நாமும் வாழவேண்டும் என்று காட்ட அல்லவா? மேலும் துள்ளித்திரியும் மான் போன்ற மனதைத் தன் இடக்கரத்தே ஏந்தி, ''மன அடக்கம் உன் கையில்தான் உள்ளதுஎன்றும்,''கோடரியை வலக்கரத்தே ஏந்தி, கோள்+அரி கோள்-குணங்களை–அரி–நீக்கு–என்று–நிர்க்குணனாய் இருக்க வேண்டும்; அதுவும் உன் கையில் தான் உள்ளது என்று உணர்த்தாமல் உணர்த்துகிறது சிவமூர்த்தம். நாமும் அவனைப்போல் நிர்க்குணமாம் கோடரியையும் மனமாம் மானையும் எங் கைகளில் பற்றிக் கொண்டால் அவரைப் போல சும்மாயிருக்கலாம். அப்போ எண் குணத்தனாதல் பொருந்தும். எண் குணத்தனாக நிர்க்குணனாதல் வேண்டும். நிர்க்குணன், நிர்மலன், ஒரு மனத்தன் ஆக வழியென்ன?

அதற்கும் வழிகூற எம்முன்னோர் தவறவில்லை. ''வாசி எங்குண்டோ மனமும் அங்குண்டு'' என்று வாசியாகிய சுவாசத்தையும் மனத்தையும் இணைத்துக் கண்டனர் ஆன்றோர். கலியுக வரதனாம் முருகன் வலக்கையால் கிரியா சக்தியாகிய தெய்வயானையாம்—வாசியையும் தனது இடதுகையால்இச்சா சக்தியாகிய மானின் மகளாகிய—வள்ளியாம் மனதையும் இறுகப்பற்றி ஞானசக்தியாக வேலை ஏந்திப் பரிபூரணனாய் நிர்மலனாய் சும்மா பிருக்கின்றான். தன்னைப்போல் உலக மாந்தரும் ஆவார்கள், ஆகவேண்டும் என்றவிருப்பாலன்றோ? அவன் அப்படிச் செய்து காட்டுகிறான். அதனால்தான் உமாபதிசிவாச்சாரியார்,

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''.

என்று கூறுகிறார்.

ஆன்றோர் வாசியோகங் கண்டுயோகம் பயின்றனர். ஞானம் பெற்று போகம் விட்டனர். தமது பிரசந்ததிக்கு ஏட்டில் எழுதி வைத்தனர். பாட்டில் மறைத்து வைத்தனர். ஆனால் அதனை அறிய முயன்ற தமிழ்ப் பண்டிதர்கள் மிக்குச் சோதித்துச் சோகமேயுற்றனர். இறைவனது இலக்கணத்தை அறியாது அவனைப்பற்றிக் கூறும் மறையை உலகில் தாம் கண்ட இலக்கணத்தால் அறிய முயன்று தோல்வி கண்டனர் காண்கின்றனர். இதை உணர்ந்த ஒளவையார்,

''நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே,
எல்லையில்லாத சிவம்''.

என்றும், அவனை அடையத் திருவருளே வேண்டும் என்பதை,

''கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடில்
செல்லாத தென்ன செயல்''.

என்றும் சிறப்பாக கூறியிருக்கிறார்.

ஆதலின் அவனை அறிய, அவனை உரை, அவனாய் அமர, சும்மாயிருக்க, கல்வி வேண்டா, மறைபல கற்றிட வேண்டா, ஆனால் திருவுரு பெற்றிடல் வேண்டும். அது எங்ஙனம்?

''என்னை எனக்கறிவித்தான்; முன்னை வினை நீக்கிவிட்டான்; தேகம் நீயல்ல என்றான்;மோகத்தைதுணியென்றான்;வாசியோகந் தேரென்றான்; நாசி நுனி நோக்கென்றான்; அங்கு நடனம் தெரியுமென்றான்; கருவழியைக் கடவென்றான்; கட்டுப்படும் மனமென்றான்; தேடாமல் தேடென்றான்; நாடாமல் நாடென்றான்; பாடாமல் பாடென்றான்; வாடாமல் வழிபடவே ஊமையெழுத்தறி யென்றான்;எங்கள் குரு நாதன்''. என்று பாடினார் யாழ்நகர் தந்த யோகர் சுவாமிகள். இவர் வாக்கு உண்மையானால், திருவுருப்பெற்றிடஅதன் வழி இறையடி பற்றிட, சும்மாயிருக்க குரு வழி காட்டிடல் வேண்டும்.

''தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியிலல்லால்
வலைப்பட்ட மானது வேயாம்.''

என்ற ஒளவைகுறளும் இக் கருத்தை ஆதாரப் படுத்துவதாக அமைகிறது.

அப்படியாயின் நெறிபட்ட சற்குரு நேர் வழிகாட்டல் வேண்டும். நெறிபட்ட சற்குருயார்? அவன் தானாய், எல்லாமறிந்தும் அறியாதவனாய்; முதிர்ந்தும் முதிராதவனாய்; தன்னை அண்டியவனைத் தன்மயனாக்கி, தானே அவனாய், அவனே

தானாய், சின்மயனாய் விளங்குபவன்; அவனே சற்குருவாவான். இந்நெறிபட்ட சற்குரு காட்டத் தகுந்த நேர்வழி என்ன?

உபநியாசம், உபதேசம், உபவாசம், உபநயனம் முதலாம் படிகளில் ஒருவனைப் பயிற்றி நித்திய வஸ்த்து வாக்குவதே. பூணூலைச் சாத்திரச் சடங்குகளுடன் இட்டு காயத்தரி மந்திரம் மட்டும் ஓதி உபநயன தீட்சை வைப்பதை இந்நாள் நாம் காண்கின்றோம். இதுவா உபநயனம்? சிந்திக்கத் தவறிச் சீரழிந்து போகிறோம். உப+நயனம் உப—என்றால் அண்மை அல்லது துணை நயனம் என்றால் கண் ஆதலின் உபநயனம் என்பது துணைக்கண் அல்லது அண்மையில் உள்ள கண் —நெற்றிக்கண்— என்றல்லவா பொருள்படும். உபநயன தீட்சையாவது நெற்றிக்கண்ணை அளிப்பது அல்லவா?

''நெற்றிக் கண்ணைத் திறந்து நிமலன் ஒளி
[வடிவை
உற்றுப்பார் என்பர் குரு.''

என்பதற் கமைய ஒருவனது நெற்றிக் கண்ணைத் திறந்து, சிவசொருபத்தை சோதியை காட்டுவ தல்லவா உபநயனம். இதை காட்டுபவனன்றோ உண்மைக் குரு?

இதேபோன்று அறியாமையால் நம் முன்னோர் காட்டிய வழிகளைத் தப்புக் கணக்கு போட்டுத் தவறாகப் பின்பற்றிச் சமயத்திற்கும் எம் உடலுக்கும், உயிருக்கும் தீமைதேடுவதை விட்டு உண்மை விளக்கம் கூறும் உத்தமரை நாடுவதல்லவா உயர்த்தது.

'' மெய்யிலே உள்ள தொன்றும் விள்ளார்கள்
[வேதியர்கள்
பொய்யிலே உன்மனதைப் பூட்டுவார்—கையிலே
கண்ணாடி வைத்தாலுங் காணாதகைப் பொருளை
விண்ணாந் திருப்பாரே மேல்.''

என்பதற்கிணங்க, இன்றைய மதப்பிரசாரகர்கள் எம் மனதைப் பொய்யிலே பூட்டுவதன்றி மெய்யிலே உள்ள தொன்றையும் விளக்காது போகிறார்கள். இவர்தம் சொல்லை மெய்யென்று நம்பியவர்கள் ஆதி நிலையை ஈதென்று அறிய மாட்டார்கள். ஆதி நிலையை ஈதென்று அறிவிப்பவனே சற்குரு. அவனே; வள்ளுவன்''மலர் மிசை யேகினோன்; மாணடி சேர்ந்தோன்; நிலமிசை நீடு வாழ்வோன்; வேண்டுதல் வேண்டாமை இலான்; இருள் சேர் இருவினை சேரான்; பொறிவாயில் ஐந்தவித்தான்; தனக்குவமை இல்லாதான்; அறவாழி அந்தணன்; எண் குணத்தான்; பிறவிப் பெருங்கடல் நீந்துவோன்;'' என்று போற்றிய தலைவன். சும்மாயிருக்குஞ் சுகமுடையோன்.

அவனையண்டி நம்பாவங்களை அவன் திருப்பார்வையால் பொசுங்கச் செய்து, அவனது தாள்சடையேற்றிப் பணிந்து, அவனதுஅளப்பெருங் கருணைவெள்ளத்தில்மூழ்கினால் நாமும் அவனாகிச் சும்மாயிருக்கலாம். கிரீஸ்த்தவர்கள் கூறுவது போல் பாவமன்னிப்புப் பெற்று ஞானஸ்நானம் பெறுவதே சும்மாயிருக்க வழி. அதை விடுத்து, மௌனம், விரதம் என்று பல கூறி, மந்திரங்கள் பல செபித்து, மாரித் தவளைகள் போல வாய் குளற, உடல் பதற, உள்ளம் சிலிர்க்க, ஆவேசம் கொண்டாடியும், பாடியும், கலைவந்தவன் போல் துள்ளியும், வீழ்ந்தும், சுற்றில் வாடி மடிவதும் அல்ல தியானம். தவம் சும்மாயிருத்தல். யோகம்சில செய்து சித்தி பலபெற்று அச்சித்திகள் எட்டையும் அட்டதிக்கும் எட்ட பிரபலப் படுத்தித் தன் சக்தியை அழித்து முத்தியை மறைப்பதல்ல சும்மாயிருத்தல்.

'' ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறுதாரத் தங்குச நிலையும்
பேறுய் நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி.''

உணர்த்தி, சும்மாயிருக்கச் செய்யும்சற்குருவாம் விநாயகனை—கணேசனை(கண்+ஏ+ஈசனை,) காட்டும் பெருமையனை, எம்முன் அருட் பிரகாசமாய், தொண்டனாய், ஊழியனாய், அடியவனாய் மிளிரும் ஸ்ரீ. சத்.சித்ர முத்தனை நாடிப் பாடித் தேடிக் கூடி இருப்போம் — சும்மாய்!

சும்மாயிருப்பதே சுகம்!

மங்களம் - - -

# ஏன் அழுதீர் ஐயா?

கருணைக் கண்ணீர்

ஆதி ஜெகசோதியாய் அன்னையாய் நின்றதிரு
அருவமதைப் பற்றியழுதேன்!

நீதிலாக் குணமுடைய மக்களனைவர்க்குமே
திருவளர வேண்டியழுதேன்!

வீதிகளில் விளையாடிவரும் பாடைப்பல்லக்கின்
விதிவசங்கண்டு மழுதேன்!

நீதிநெறி கிடையாத ராஜாங்கத்தண்டனை
நியதி கண்டலறியழுதேன்!

வாதிட்டு வழிதவறி மடிகின்ற மக்களின்
வாழ்க்கையை புணர்ந்துமழுதேன்!

சாதிமதமென விருபேசியே சண்டையிடும்
சளுக்கரைப்பார்த்து மழுதேன்!

காதினிலே மொழிகின்ற நல்லோர்கள் வார்த்தையை
கடந்தழிதல் கண்டுமழுதேன்!

ஓதியுலகெலாம் ஒரு ஒளியுளுய்கவென
யானழுத தாரறிகுவார்?

மந்திரமெனக்கூறி மக்களை மயக்குகிற
மடமையை யொழிக்க வழுதேன்!

அந்திபகலாய்ப் பிச்சையெடுத்தேங்கி நிற்கின்ற
அகதிகளைக் கண்டுமழுதேன்!

சிந்தையது கெட்டு அபிமான மதழிந்து சிலர்
சிரழிதல் கண்டுமழுதேன்!

பந்தமொடு படுகுழியுள் வீழ்கின்றமக்களின்
பரிதாபம் பார்த்துமழுதேன்!

நிந்தனைகள் செய்பவரை வந்தனைகள் செய்துமே
நினைவு தடுமாறியழுதேன்!

கந்தலுடையோடு மடமாதர்கள் கையேந்தி
கற்பழிதல் கண்டுமழுதேன்!

குந்தியிருந்தமைதியுறக் குடிசை கிடையாதவர்கள்
குணங்குறிகள் கண்டுமழுதேன்!

இந்தவித மாயடியேன் நெஞ்சகம் நினைந்துருகி
யானழுத தாரறிகுவார்?

# உழுவோம் உளந்தனை

— செ. கணேசமூர்த்தி—

பெறற்கரிய மானிடப்பிறப்பெடுத்த எவரும் நாடுவது இன்பமே. ஆனல் அவர்கள் நாடும் இன்பமும் நாடுந் துறையும் வேறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. இஃது அவரவர் அறிவு நிலைக் கேற்றவாறு அமைகிறது. உலகில் உற்ற சமயங்களும் அவ்வாறே. எனது அறிவிற்கு எட்டிய அளவில், உலகில் உண்மையையும், அதன் இலக்கணத்தையும், முடிந்த முடிவாக தருக்க முறையில் எடுத்து விளக்கி, உயிர்கள் பெறற் குரிய இன்பத்தின் உயர்ந்த நிலையையும், அதையடையத் தடையாயுள்ள உலகத்திய பந்தங்களையும்உள்ளங்கை நெல்லிக் கனியாக்கி,மெய்யின்பத்தை யெய்தச் செய்ய வேண்டிய சாதனங்களையும் தெரிவிப்பது சைவசமயம் ஒன்றே. மேற்கண்ட கூற்றைக் கூறுமிடத்து புறச் சமயங்களைப் புறக் கணித்தல் எனும் பொருள் புலப்படின் அது தவறு. சமயங்கள் அனைத்தும் நல்லாறுகள். (ஆறு-வழி) ஆறுகள் அனைத்தும் கடலை அடைதல் போல சமயங்கள் அனைத்தும் அன்பாகிய கடலையே நோக்கி ஓடுகின்றன. ஆனல் சைவசமய ஆற்றில் இணைந்தால் அன்புக் கடல் மிக அண்மை என்பது புலப்படும். இவ்வுண்மையை உருசுப்படுத்தச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினன்கும் ஒளி கொடுத்துதவும் இருகண்களாகும்.

பிறப்புகளுள் மானிடப் பிறப்புத் தலையாயது என்பது சகல சமயங்களும் ஏற்கும் ஒரு உண்மை. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' அதனினும் அரிது சைவனய் அமைதல். ஏனெனில் சைவ நெறி அன்புக் கடலடையும் அண்மை நெறியன்றே!

மக்களாகப் பிறந்தநாம் இன்று வாழும் மாக்கள் என்ற நிலை மாறி, ''நாம் ஏன்தோன்றினேம்? எதற்காகத் தோன்றினேம்? என்று சிந்தித்தாக வேண்டும். அங்ஙனம் எண்ணி மெய்ப் பொருள் காண்பதுடன் நில்லாது கண்டகருத்திற் துணிந்து,துணிந்தபின் எண்ணி இழுக்கு ஏற்படுத்தாது செயற் படுத்தும் வன்மையுடையவர்களாதல் வேண்டும். இன்றேல் அரிய பிறப்பாய மானிடப் பிறப் பெடுத்ததன் பயன் தான் என்ன? மற்றைய விலங்குகட்கும் மனிதருக்கும் வேறுபாடுயாது? விலங்கும் பிறகிறது, உண்கிறது, வளர்கிறது, இனப்பெருக்கம் செய்கிறது,ஈற்றில் மடிகிறது. எனவே நாமும் ஒரு மானிடவிலங்காக இராது மனிதராக வாழ வழி காணவேண்டும்.

அதற்கு வழி எது? எனக் கூறுவது எனது நோக்கமல்ல. அவ்வாறு நெறிப்படுத்துவதால் பயனுமில்லை. இன்றேல் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வள்ளுவன் ஈந்த பொக்கிஷத்தைக் கற்று உபதேசித்து விழாக்கள் பல கொண்டாடுகிற சமுதாயம் இத்தகைய பிற்போக்கடைந்திருக்க வேண்டியதில்லையே! எமது சமுதாயம் கற்றதும் கற்பதும் உண்மை. ஆனல் அறிவுடையதாகவில்லை. கற்றபடி நிற்கும் ஆண்மை இல்லை. காரணம் எம் சமுதாயத்தின் உள்ளம் பண்படவில்லை. உள்ளம் உழப் படவேண்டியது. உள்ளத்தை மூடியிருக்கும் பாசப் புற்களும் ஆணவச் செடி கொடிகளும் அறிவுக் கலப்பை கொண்டு உழப் பட வேண்டியவை. அதுதான் சமுதாயத்தில் முதற் கண் செய்யப்பட வேண்டியது.

உள்ளத்தை உழுது பண்படுத்த விஞ்ஞானிகள் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் அஞ்ஞானிகளின் கருவிகள் தேவையில்லை. சிறந்த கருவிகள் சைவசமயத்தில் நிறைந்து கிடக்கின்றன. அவற்றை நாம் உபயோகத்தில் கொண்டு வந்தால், எமது உள்ளத்தை நிச்சயம் பண்படுத்தலாம். சமயத்தின் உண்மைத் தத்துவமாம் வெற்றிக் கொடியை நிலை நாட்டலாம்.

உண்மை அறிவுபெறநாம் ஐம்புலன்களையும் அடக்கவேண்டும் என்கிறுர்கள். ஐம்புலனையும் எவனும் அடக்கமுடியாது. அடக்கியவரும் உலகிலில்லை. ''ஐந்தும் அடக்கென்பார் அறிவில்லார். ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை—'' என்றுர் திருமூலர். ஐம்புலன்களையும் கொடுத்தான். இன்பங்களையும் அவனே படைத்தான். சுவைக்கவன்றே?. என்று ஒரு சிலர் கூறுகின்றனர். அஃதும் உண்மை. ஆனல் எது இன்பம்? என்பதில் தான் கருத்து வேறு

படுகிறது' எவ்வாறெனில் இலைகுழை வெட்டச் செய்த கத்தியால் மனிதனை வெட்டுவது போல. காது இருக்கிறது கேட்க, கண்இருக்கிறது பார்க்க, வாய் இருக்கிறது பேச, நாவிருக்கிறது சுவைக்க. ''கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை கண்காள் காண்மின்களோ'' என்கிறார் எமது நாயனார். எமக்கு அதில் இன்பம் இல்லை. வேறு எத்தனையோ இச்சைகளின் இருப்பிடங்களைக் காண முயற்சிப்பதில் இன்பம் காண்பதாகக்கருதிக் கொள்கின்றோம். அதனால் வரும் தீமையை நரை வந்தபின் சிலர் உணர்கின்றோம். சிலர் அப்போதுங் கூட உணர்வதில்லை.

ஐம்புலன்களையும் புலன்போன போக்கில் போகவிட்டு நாம் வாழந்து கொண்டிருக்கிறோம். அது மட்டுமன்றி ஐம்புலன்களும் நுகர்பவையே எமக்கு இன்பம் என்று கருதுமளவு அறியாமைச் சேற்றில் அமிழ்ந்திக் கொண்டு இருக்கிறோம். நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்பதை—நாளென ஒன்று போற் காட்டி உயிரீரும் வாள் தான் நாள் என்பதை உணராது எமது பொன்னான நாட்களை யெல்லாம் மண்ணாக்கி ஈறுவந்த காலை சிந்திக்கிறோம். வெள்ளம் வந்தபின் சிந்தித்துப்பலனேது?முன்பன்றோ அணைகட்டவேண்டும். கட்டியவர்கள்—வெள்ளம் வராது தடுத்தவர்கள் வழிகாட்டி யிருக்கிறார்கள். நாம் ஏன் கடைப்பிடிக்கிறோமில்லை?.

நாய் இருக்கிறது. எலும்பைக் காண்கிறது. துள்ளுகிறது வாலை ஆட்டுகிறது. கவ்வுகிறது. நாலு கட்டை குதிக்கிறது. கண்டது வேறு ஒன்றும் இல்லை, இறைச்சியற்ற எலும்பு தான். அவ்வெலும்பை பல்லிடை வைத்து நெரிக்கிறது. பல்லீர்ப்பினால் இரத்தம் வர, அவ்விரத்தம் எலும்பிலிருந்து வருவதாகக் கருதிச் சுவைக்கிறது. ஈற்றில் பல் நோவால் தவிக்கிறது. இதேபோன்று தான் நாமும் உலகின் எத்தனையோ நிலையற்றவற்றை நிலையானவை என்று கருதி ஏமாந்து அவற்றில் இன்பங்காண்பதாகக் கருதி எம்மை நாமே அழித்துக் கொள்கிறோம்.

எனவே நாம் சைவம் காட்டிய உண்மை நெறியை பயில்வதற்கு, முன்னோர் காட்டிய வழிகளைப் பின்பற்றி, அதன் படிநடப்பதன் மூலந்தான் நாளொரு பொழுதாக எமது உள்ளத்தைப் பண் படுத்த முடியும். அது அனுபவத்தால் செய்யவேண்டியது. அவர்களது செய்கைகள் எதுவொன்றும் தவறானது அல்ல. ஆழ்ந்த தத்துவத்தை உள்ளடக்கி நிற்பவை.

நீற்றைப் பொருளுணராது அணிவது தவறு. பொருள் அறிந்து அணிய வேண்டும். ஒரு மனிதன் இறந்த பின் அவனுடல் சுடுகாடு அல்லது இடுகாட்டில் இடப்படுகிறது. அதாவது அது சாம்பலாகிறது. அல்லது மண்ணோடு மண்ணாகிறது. நாம் காலையில் நீறணியும் போது எமது உடலும் நாளை சாம்பராகும் என்பதை உணர்ந்து அதற்குள் செய்யத் தகுந்த நற்காரியங்களைச் செய்ய வேண்டும். என்ற எண்ணத்தை தினமும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது இவ்வுடல் அநித்தியம் என்பதை தினமும் காலையில் நீறு ஞாபகப்படுத்துகிறது.

அன்றியும் நீறு ஆக்கப்படுவது எங்ஙனம்? பசுச் சாணம் நீறுகிறது. அதாவது பசுவின் மலம்-அழுக்கு நெருப்பில் இடப் பட்டு நீறுகிறது. அது போன்று ஆன்மாக்களாகிய எமது ஆசாபாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை எனும் மலங்கள் சிவக்கனலில் நீறுக்கப் படுகின்றன. ஆன்மா தூய்மையாக்கப் படுகிறது என்பதை உணர்த்தா நிற்கிறது என்பதையும் எமது கருத்திற் கொள்ள வேண்டும். வேறு பல அம்சங்கள் நீறு அணியும் முறையில் அடங்கியுள்ளன. எனவே மக்களாகப் பிறந்தநாம் எமது முன்னோர் கூறியாங்கு தூய உள்ளத்துடன் நடந்து, வாய்மையுடன் வாழ்ந்து, உள்ளத்தைப் பண்படுத்து வோமாயின் வாழ்வில் வெற்றி காண்பது நிச்சயம். சமய உண்மைகளை மிக்குச் சோதிக்க முயலாது நம்பிக்கையும் அன்பும் கொண்டு அவ்வழி நடப்போமாகில் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி கிட்டும். என்பதுதிண்ணம்.

''அல்லல் அருளாள்வார்க்கில்லை வளிவழங்கு
மல்லல்மா ஞாலங்கரி.''

—குறள்

*

# மனத்தது மாசாக மாண்டார் நீராடேல்

—மகான் கருணையானந்த ஞானபூபதிகள்—

நாம் உபயோகித்த மட்பாத்திரத்தை வேறொருவர் தொட்டுவிட்டால் அதனைத் திட்டான பாத்திரமென வெளியிலெறிந்து விடுகிறோம். பொற்பாத்திரம், பொன்னாபரணம் முதலியவைகளை நீசர் தொட்டாலும் அதனை திட்டென்று விட்டெறிய ஒருவரும் முயலுவதில்லை. அதுபோல சித்தசுத்தியற்ற இல்லறத்தார் கட்கே திட்டு முதலாம் அசுத்தங்கள் நேரிடுவதன்றி, துறவறமுடையவர்கள் ஒருக்கால் மாதர் சங்கமம் முதலான எந்தக் கிருத்தியங்களைச் செய்தாலும் அவர்கட்கு சித்த சுத்தியிருப்பதால் அங்க சுத்தி செய்யவேண்டியது அவ்வளவு அவசியமானதன்று. இது காரணம்பற்றியே குருபாததாசர் குமரேச சதகத்தில்,

................"சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியில்லை" எனவும்,

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந் தொழுகுமாந்தர் பலர்."

(க-து) உள்ளத் தழுக்கறுக்க உடலழுக்கைக் கழுவுவார் பலர்

என்னும் பொருள் தோன்ற பொய்யாமொழியாரும் கூறியிருக்கின்றனர்.

ஒரு பாத்திரத்தின் உட்புறத்தைச் சுத்தி செய்யாமல் வெளிப்புறத்தை மட்டிலும் பிரகாசமாய்க் கழுவிவிட்டுச் சமையல் செய்து சாப்பிட்டால், அந்தப்போசனம் நன்மையாக இராதல்லவா? வெளிபுறத்தைக் கழுவாமல் உட்புறத்தை மட்டிலும் கழுவிச் சமையல் செய்தால், பிறருக்கு பாத்திரம் மட்டும் அசுத்தமாகத் தோன்றுமேயன்றி, அப்போசனம் கெடமாட்டா. அகமும் புறமும் சுத்திசெய்து சமையல் செய்தால் மிகவும் நன்மையே. ஆகிலும் உட்புறத்தையே அவசியம் கழுவ வேண்டும். அதுபோல ஒருவன் சித்த சுத்தியில்லாமல் அங்க சுத்தமட்டிலும் செய்து கொண்டு, கடவுளை வழிபடுவதால் ஒருபோதும் நன்மையுண்டாகாது. அங்க சுத்தியில்லாமல் சித்தசுத்தியுடன் வணங்கினாலும் நன்மையுண்டாவது திண்ணம். அதனால் அங்கசுத்தி செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. அங்க சுத்தி இருந்தாலும் இல்லாவிட்டாலும் சித்த சுத்தியே அவசியம் வேண்டும் என்பது கருத்து.

### அப்பர் தேவாரம்

"கங்கையாடிலென்? காவிரியாடிலென்?
கொங்குதன்குமரித் துறையாடிலென்?
ஓங்குமாகடல் ஓதநீராடிலென்?
எங்கும் ஈசனென் னாதவர்க்கில்லையே."

### ஒழிவிலொடுக்கம்

"உடலாலுழைத்தால் உடலொழியுமென்று
கெடுவீர் இதையெங்கே கேட்டீர்?-உடலே
நடையாடிய பிணம்போல் நான்போய்த்
திரியக்
கிடையாதோ வென்று கேளீர்."

வைதீக நிட்டாபரனுை ஒரு வேதியன், ஒரு நாள் ஒரு குளத்தில் இறங்கி நீர்வேட்கையாற் கையினல் தண்ணீர் மொள்ள, கரைமேலுள்ள நாவல்மரத்தின் மீதிருந்து ஓர் எச்சிற் கொட்டை அதில் விழுந்தது. தாகத்தின் கொடுமையால் அதை அவன் நன்கு பாராமல் தண்ணிருடன் பருகிவிட்டு, 'இக்கொட்டை இங்கென்னமாய் வந்தது? பறவையோ! குரங்கோ! இன்னும் ஏதேனும் செந்துவோபோட்டது'' என்று யோசித்து அண்ணுந்து அம் மரத்தை உற்றுப் பார்க்கையில் அதில் ஒரு சிறு பையனைக் கண்டு, 'நீ யார்?' என்று கேட்க, அவன், 'ஐயா! நான் பறைப் பையன், இதிலேறிப் பழந்தின்று கொட்டைகளை உமிழ்ந்தேன்' என்ருன். அதைச்செவியுற்ற அந்தணன் மிக்க வெறுப்பும் விசனமும் அடைந்து 'பறையன் எச்சிலைத்தின்ற யான் எவ்வாறு புனிதனுவேன்' என்று தவித்துக்கொண்டே வந்து ஊரிலுள்ளசாஸ்திரிமாருக்குஇதனை விளம்ப, அவர்கள் ''ஏக வாராசனத்தோடு கங்கைக்குச் சென்று ஸ்நானம் செய்து வருவையாயின் அப்பாவம் தீர்ந்து நீ பரிசுத்தவனுகுவை'' என்று புகன்றனர்.

அதைக் கேட்டு மறையோன், அங்ஙனமே செய்வதெனத் துணிந்து பிரயாணப்பட்டு, மூன்று நாளானபின் ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் வீட்டுத் திண்ணையில் இரவில் படுத்திருந்தனன். அப்போது பகலில் நல்லுணவில்லாமையால் தூக்கம்பிடியாமல் அங்கிருந்த மாடத்திற் கையிட, அதில் ஒரு பாக்கு அகப்பட்டது. அதனை அவன் வாயிற் போட்டுக்கொண்டு சற்று நேரம் குதப்பி நறுக்கென்று கடித்தனன். வீட்டுப் பார்ப்பனி அவ்வோசையைக் கேட்டு, ஓ! ஐயரே! நீர் படாரெனக் கடித்திரே! அது யாது?' என வினவினுள். அந்தணன், 'இம் மாடத்திலுள்ள தோர் பாக்கு' என்ருன். அவள் ஆச்சரியப்பட்டு 'ஐயா! உம்முடைய பல் உரப்பை என்ன சொல்வேன்? நான் வீட்டிற்குப் போகக்கூடாமையால் நேற்றிரவு இங்குபடுத்துக் கொண்டு இப்பாக்கை நெடு நேரமளவும் வாயிற்போட்டு ஊறவைத்துக் கடித்துப் பார்த்தும் கடிக்கக் கூடாமல் இம் மாடத்து உமிழ்ந்து போனேன். அதை எடுத்துக் கடித்திரே! உமதெயிற்றின் திண்மை எனது கண் திருஷ்டி படாமல் நெடுநாள் வாழ்க'! என வாழ்த்திப் போயினள்.

பின்பு மறையோன், 'அந்தோ! நமக்குப் புண்ணின் மேற் பூச்சியும் கடித்ததே'! என்று வியாகூலப்பட்டுக் கொண்டே எழுந்து போய், உதயமாகி ஐந்தாறு நாழிகைக்கு மற்ருேர் ஊரில் ஒரு பூசுரன் வீட்டுத்தெருத் திண்ணையில் உட்கார்ந்தான். குளத்துக்குப் போயிருந்த அவ் வீட்டு விதவை வந்து பார்த்து, 'ஐயா! இன்றைக்கோர் பிராமணனுக்கு அன்னமிடவேண்டும்; யாரையும் காணேம் என்றிருந்தேன். தெய்வாதீனமாக உம்மைக் காணச் சந்தோஷமாயிற்று. நீர் இங்கேயே அமுது கொள்ளும்; எழுந்து குளத்துக்குப் போய் ஸ்நான முதலியன முடித்துக் கொண்டுவாரும்' என்ருள். அது கேட்ட பார்ப்பனன், சோறு அகப்படுகிறதாயினும் எச்சின்மேலெச்சில் நேரிட்டதற்கு என்ன செய்யலாமென்று சிந்தித்துப், பல நீட்டுக்கு ஒரு முழுக்கு. ஆதலின் கங்கா ஸ்நானமே எல்லாவற்றிற்கும் பிராயச்சித்தமென்று தேறி, முழுகிவந்து சாப்பிட உட்கார்ந்தான். அவ்வமங்கலி, சோறு கறி முதலியன பரிமாறி உபசரித்துப் புசிப்பித்து 'ஐயா! நான் உங்களுக்குப் போதுமானபடியே சமைத்து வைத்துத் தண்ணீர் கொண்டுவரப் புழக்கடை வாய்க்காலுக்குப் போனேன். அதற்குள் ஏதோ ஒரு நாய் வந்து அதிற் கொஞ்சம் தின்று போயிற்று. என் செய்வேன்? பொறுத்துக் கொள்ளுங்கள் என்று உபசாரவார்த்தைகள் சொல்லினுள்.

பார்ப்பானே, 'முதலிற் பறையன் எச்சில்! இரண்டாவது உதகியெச்சில்!

மூன்ருவது சுணங்கன் எச்சில்! இப்படி ஒன்றின் மேலொன்ருக அசுத்தமே ஏற்பட்டு வருவதினுல், இனியெங்கும் உணவு கொள்வதுமில்லே, சயனிப்பதுமில்லே, என மனவுறுதி கொண்டு, நேரே கங்கைக் கரைக் கேகிக் கங்கையை தரிசித்து, மணி கர்னிகா கட்டம் முதலான துறைகளிற் பிராமணர் அநேகர் ஸ்நானம் செய்வதும், பூசை நடத்துவதும், புராணம் படிப்பது மாயிருந்ததனுல் அவ்விடங்களிற் சென்று தன் பாவங்களுக்குச் சங்கற்பஞ் செய்து கொண்டு ஸ்நானஞ் செய்ய வெட்கப்பட்டு, இவைகளுக்குச் சிறிது தூரத்தி லிருந்ததோர் துறையில் முழுக எத்தனித்தனன்.

அத்துறை, பறையர் தங்கள் தங்கள் இனத்தாருடைய பிரேதங்களின் எலும்புகளேக் கொணர்ந்து போட்டு மூழ்கிப் போகும் இடமாக இருந்தது. ஐயோ! இப்பேதைப் பார்ப்பான் அதையறியாமல் ஆழமான நீரிலிறங்கி அமிழ்ந்து அகமரீஷண சூக்தம் என்னும் பரிசுத்தமாவதற்கு நீரில் நின்று செய்யும் செபத்தை சொல்லிக் கொண்டிருக்கையில், சில புலேயர் கடத்தில் எலும்பைக் கொணர்ந்து அதில் எறிந்து விட்டுத் தாங்களும் முழுகியெழுந்தனர். இதற்குள் வேதியனும் மந்திரம் முடித்து எழுந்திருக்க, இச்சண்டாளர் அவனேக் கட்டி, 'எங்கள் அப்பனே! வீட்டிற்குவா போவோம், என்றுவலிமை செய்தனர். இவன்' 'நான் பிராமணன் உங்களவனல்லேன், என் மார்பிற் பூணூலேப் பாருங்கள்' என்று கூவினுன். அவர்கள் விடாமல், ''உங்கள் அப்பன் இறந்தால் அவன் எலும்புகளேக் கங்கையாற்றில் எறியுங்கள். உடனே அவன் நல்ல செனனம் எடுத்து கரையேறுவான் என்று நம்முடைய குருக்கள் சொன்ஞர். அப்படியே நீ பிராமண சென்மமெடுத்துக் கரையேறினுய், உன்னே விடமாட்டோம். நம்முடைய வீட்டிற்கு வந்து, சேகரித்து வைத்த நல்ல உணவுகளேப் புசித்துப் பின்பு தனித்திரு'' என்று நிர்ப்பந்தப் படுத்தினர். பார்ப்பான் ஞ்யோ! முறையோ! என்று கூவித் தன் தலேயில் அடித்துக்கொண்டு அழுதான். அப்போது கரையிற்போகா நின்றவர்களும் அதிகாரிகளும் வந்துவிசாரித்து, அவனே விடுவித்து இச்சண்டாளரை நோக்கி 'அடே! புத்தியீனர்களே! உங்கள் குருக்கள் சொன்னது மறு சனனத்திற்காம், கரையேறுவது என்பது பாவத்தினின்றும் நீங்குவதற்காம்' என்றுசொல்லி அனுப்பிவிட்டனர்.

**வேமன்னபத்தியம்**

"மலமூத்திர இரக்தாதி மாம்ஸயுக்
தம்பைன
முட்டுகுண்ட நீள்ள முன்ச னேமி
பைமுறுகி போவுனு லோமுரிகி
போதையா
விஸ்வதா பிராமவினுர வேமா

(இதன் பொருள்) மலம், மூத்திரம், இரத்தம், மாமிசம் முதலானவைகளேச் சேர்ந்திருக்கிற தீட்டு ஒரு மிடா சலத்தினுல் போகுமா? தேகத்தின் மேல் படர்ந்திருக்கும் அழுக்குகள் போகுமே யல்லாது உட்புறமாயிருக்கிற தீட்டுகள் ஒழியாது. ஆதலால் உட்சுத்தியாகிய சித்தசுத்தி செய்தாலன்றி, உள்ளழுக்குகளான தீட்டுகள் இந்தச் சரீரத்தை விட்டு ஒரு போதும் நீங்குகிறதில்லே.

ஆதலின் நாம் இக்கருத்துகளேக் கொண்டு சிந்திக்குமிடத்து. தீட்டு என்பதொன்று கிடையாதென தோன்றினும் அது மகான்களுக்கன்றி, மடியிற் பூனேயை வைத்துக்கொண்டு வழிப்பூனேக்குச் சகுனம் பார்த்து, தொட்டதற் கெல்லாம் சந்தேகமும் விபரீதமும் எண்ணக்கூடிய அந்தகாரமான பிரபஞ்சத்தவர்கட்கு அல்ல. இவர்களுக்கு எப்போதும் தீட்டுண்டு என்பது தெளிவாகும்.

# "இன நலம் ஏமாப்புடைத்து"

—கரம்பனூர்: யோவான்—

"சாதி இரண்டொழிய வேறில்லை
சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின் -
மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார்
இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி."

என்றார் ஔவையார்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்"

என்றார் வள்ளுவர்.

"சாதியும் மதமும் சமயமும் பொய்"

என்றார் இராமலிங்கர்.

"சாதிகள் இல்லையடி பாப்பா"

என்றார் பாரதி.

இந்த சாதிப்பாகுபாடும் வேற்றுமையும் இன்று நேற்றல்ல சரித்திர காலந் தொட்டு இருந்த ஒரு பிரச்சினை. இதற்கு தீர்வுகாண்பது என்பது சுலபம் அல்ல. அது அரசின் கையிலோ, சட்டத்தின் கையிலோ, தங்கியிருக்கவில்லை. அது அறிவின்பாற்பட்டது. சிந்தனையின் கையில் தெளிவுற வேண்டியது.

சங்ககாலத்திற்கு முந்திய காலத்தில் இப்பாகுபாடு இருக்கவில்லை என்கின்றனர் சிலர். இக்கொடியவழக்கு ஆரிய படையெடுப்பின் பயனாய் ஏற்பட்ட கொடுமை என்பாரும் உளர். ஆராயுமிடத்து இவற்றில் எவ்வளவுண்மையிருக்கிறது என்று வலியுறுத்த இயலாததாக இருக்கிறது. சங்க காலத்தில் அமைந்த பாகுபாடு நிலத்தை அடிப்படையாகக் கொண்டதென்கிறார் புலவர். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை முதலாம் ஐவகை நிலங்களை வகுத்து அவற்றின் கண் வாழ்ந்த மக்களை குறிஞ்சியில் குறவரும், முல்லையில் வேடரும், நெய்தலில் வலைஞரும், மருதத்தில் உழவரும், பாலையில் வணிகரும் எனப்பகுத்தனர். இப்பாகுபாடு நிலத்தியல்பதாகும் என்பார் சிலர். செய் தொழில் வேற்றுமையினால் என்பார் சிலர். ஆனால் வள்ளுவர் கூற்றுப்படி இப்பாகுபாடு செய்தொழில் வேற்றுமையினால் ஆனது என்று முடிவாகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்.

—குறள் 972

ஆனால் இப்பாகுபாடு பிற்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. வர்ணாச்சிரமம் தோற்றி நால்வகை வர்ணத்தாரை ஆக்கி அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து வேற்றுமை கண்டது பிற்கால வழக்கு. இது ஆரியத்திணிப்பென்பாரும் உளர். இக்கூற்று ஓரளவு உண்மையேயாயினும் அதன் உட்பொருளை ஆய்ந்துணர்ந்து, எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண்பது தான் அறிவு. பார்ப்பான், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பாகுபாட்டினைத் தனித்தனி யெடுத்தாராய்வாம்.

முதலாமவன் பார்ப்பான்-அந்தணன். இவன் உயர்சாதி மேலோன் எனக்கருதப் பட்டான். காரணம், அவன் அறவோனுக, செந்தண்மை பூண்டொழுகுவோனுக இருந்தமையால். அறவோன் என்ருல் அறத்தை வலியுறுத்துபவன். பேர் அறமாம் வேதத்தை காப்பவன் என்பது விரிவு. அவன் அரசனுக்கும் அவன் பிரசைகளுக்கும் அறவுரை வழங்குபவனுதலின் அறவோனுயினன். குருவாயினன். அவனிடம் பாகுபாடற்ற செந்தண்மை இருந்தது. செவ்விய தண்ணளி பூண்டவர் என்பது பொருள். ஆதலின் அவன் உயர்ந்தோனுக—உயர்குடிப்பிறந்தோனுக அரசன் முதல் அவன் பிரசைகள் வரை எல்லாராலும் ஏற்றப்பட்டான் - போற்றப்பட்டான். இது ஒருவிரிவு. இதன் தத்துவ விரிவை ஆராயின், இப்பாகுபாடும் செய்தொழின் வழியதே என்பது புலனுகிறது. பார்ப்பான் பார்க்குந் தொழிலே உடையோன் என்பது பொருள். அவன் செந்தண்மையுடையவன். நல்லதையும், தீயதையும், உயர்வையும், தாழ்வையும் வேற்றுமையின்றி காண்பவன். அறவோன். நன்மை தீமையை கண்டு நடுநிலே வகுக்க வழி காட்டுபவன். ஆதலின் அவன் பார்க்கும் தொழிலேச் செய்யும் கண்களே யொப்பான். கண்கள் எம் அங்கத்தில் உயரிய இடத்தில் பிற அவயவங்களுக்கு மேல்-தலையின் மேற் பகுதியில் இருப்பதின் அவன் மேலோன்-உயர்ந்தோன் என்பதாயிற்று. ஆதலின் அண்டத்தில் பார்ப்பாஞய் இருப்பவன் பிண்டத்தில் பார்க்கும் கண்மணிகளாயிருக்கின்ருன்.

இரண்டாமவன் சத்திரியன்-அரசன் முறை செய்து காப்பவன். அறனிழுக்காது அல்லவை நீக்குபவன் - சத்தியன். பசுக்கன்றைக் கொன்ற தன்மகனைத் தேர் ஏற்றிக் கொன்ற மனுவும், தானே குற்றவாளி எனக்கண்டு தன்கையை துண்டித்த பொற்கையனும், தன்தவற்ருல் கோவலன் கொலேயுண்டான் என உணர்ந்து உயிர்நீத்த பாண்டியனும், கொடுத்த வாக்கைக் காப்பதற்காக சுடலே காத்த அரிச்சந்திரனும். இப் பண்பினர் அன்ருே! இவர்கள் சத்தியத்தைக் காத்து நீதிவழுவா நெறிமுறை நிற்பவர். இறை என மக்களால் வழுத்தப்படுபவர். முன்னேற்கும் பின்னேற்கும் முதல்வர் அன்ருே! ஆதலின் அவன் இரண்டாமவனுக வைக்கப்பட்டான். இதை உணர்ந்தன்ருே பொய்யாமொழி வள்ளுவனும் தன் திருமறையில் அறவியலுக்கு அடுத்து பொருளியல் அமைத்து இறையாம் மன்னன் இலக்கணத்தை விளக்குகிருர். இதன் தத்துவத்தை ஆராயின், சத்திரியன் - சத்தாகிய உண்மையை ஆய்ந்து உணரும் தன்மையை உடையவன். அறவோர் அறிவுறுத்த வழக்கைச் செவிமடுத்து நீதிவழங்குபவன். உண்மையைக் கேட்பவன். கேட்கும் தொழிலுடையவன் சத்தத்தை திரிபு செய்துணர்பவன் எனினும் பொருந்தும். இத்தகையன் பார்ப்பானுக்கு இரண்டாம் இடத்தில் செவியாய், செவ்வியனுய் இருக்கிருன். அண்டத்தில் அரசனுய்-செவ்வியனுய் இருப்பவன் பிண்டத்தில் செவியாய் இருக்கின்ருன்.

மூன்ருமவன் வைசியன் - வணிகன். இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்து வகுத்தலுமாம் நாற் தொழிலேயும் மன்னவன் செய்ய உறுதுணையாய் இருப்பவன். ஏற்றுமதிப் பொருட்களே இயற்றி-ஆக்கி, அதனை ஏற்றிப்பொருள் ஈட்டியும், பண்டமாற்றுச் செய்து தனந்தேடியும், பார்ப்பான், சத்திரியன், சூத்திரன் முதலாம் எல்லோர்க்கும் வேண்டும் தனந்தேடித் தருபவன். பொருள் தேடுபவன். பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லே ஆகவே இவ்வுலகில் வாழப்பேருதவி செய்வோன். அரசற்கு அணிகலனும், பிரசைகளுக்கு

உண்கலனும் பெற்றுத்தரும் இவன் மூன்றும் இடம்பெற்ருன். தன் தொழிலால் உலகத்தாரை வாழ்விக்கும் இவன் தன்தத்துவம் உணர்வோம். இவன் பண்டமாற்றுச் செய்பவன். உற்ற பொருள் ஏற்றி மாற்றுப் பொருள் கொணர்வோன். எமதகத்தே உற்ற கரியமல வாயுவை வெளி ஏற்றி அதன் மாற்றும் பிராணவாயுவை உட்கொணரும் சுவாசகன் – நாசி. அண்டத்தில் வைசியன் பிண்டத்தில் சுவாசகன்-நாசியாய் இருக்கின்ருன்.

நான்காமவன் சூத்திரன்-பாட்டாளி. அரசன் முதல் அகிலத்தார் எல்லாருக்கும் வேண்டும் உணவை ஆக்கியும், போர்வந்தகாலே நாடுகாத்தும் பணிபுரிபவன். வீரன். உழவன். இவன் நாட்டின் சூத்திரம் போல் விளங்குபவன். உயிர் நாடியாக இயங்குபவன். அவனின்றி நாடேது? அரசேது? அதனுல் சூத்திரன் எனப்பெயர் கொண்டான். அண்டத்தில் சூத்திரன் பிண்டத்திலும் சூத்திரனுக, உழுதுண்டு வாழ்கிருன். போர் செய்கிருன். நாடுகாக்கிருன். நாம் உண்ணும் உணவை நன்ருய் உழுது புரட்டி உண்பவன். எதிர்ப்போரை வைது போர் செய்பவன். ஆபத்துக் காலத்தில் கூக்குரலிட்டு எம்மைக்காப்பவன். சூத்திரமாக எப்போதும் இயங்குபவன். பேசுபவன் - நாமகன். அண்டத்தில் சூத்திரன் பிண்டத்தில் நாவாக அமைந்திருக்கின்ருன்.

இவ்வாறு அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் கண்டு உண்மை உணர்ந்தால் வேற்றுமைகள் இங்கேது? இன்று உள்ள சாதிச் சண்டைகள் ஏது? சமயப் புறட்டுகள் ஏது?

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்
கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்"

—குறள் 973

என்ற வள்ளுவன் மொழிக்கொப்ப மேல் குலம் எனப்பெருமை பேசிக் கீழ்மைத் தொழில் செய்வோரும் கீழோரே. கீழோராயினும் மேன்மையான நோக்கும் செய்கையும் உடையர் மேன்மக்களே. ஆதனூர்ப் பறையனும், வேடனும் கண்ணப்பனும் அந்தணரின் குருவானமையும் இங்கு நோக்கற்பாலது. ஆதலின் கீழோர் மேலோர் என வேற்றுமைகாணுது இறை புதல்வர்-பிறப்பில் ஒத்தவர் என்று சமரசங் கண்டு தூய வாழ்வு வாழ்தல் கடை.

"மன நலம் நன்குடையராயினும் சான்ரேர்க்கு
இன நலம் ஏமாப்புடைத்து."

—குறள் 458

என்பதற்கு இயைய மனநலத்துடன் தான் பிறந்த இனத்திற்கு ஏமாப் பெடுத்துக் கொடுப்பது தான் நம்கடன். நந்தன் தனதினத்திற்குத் தேடிய பெருமையையார் மறுப்பார்? சண்டேஸ்வரர் இடைச்சேரிக்கு தேடிய பெருமையும், கண்ணப்பன் வேடர்குலத்திற்கு ஆக்கிய பெருமையும், உலகறிந்ததே.

இஞ்ஞான்று நாமும் பிறந்த பொன்னுட்டிற்கும், பெற்ற பேரினத்திற்கும் பெருமை தேடி தாழ்த்துவாரை தலைவணங்கச் செய்வதன்ருே மேல். அதை விடுத்து சண்டையிட்டு மண்டையுடைப்பது அறியாமையன்ருே? ஆதலின் நாம் அன்பை வளர்த்து, அஹிம்சையை பயின்று, அருளொளியில் இணைந்து, பெருவெளியில் கலந்து, பேரின்பப் பெருமை காண்பதே கடன்.

# அருளொளியும் இஸ்லாமும்

அன்பர் பூபதிதாஸர்

அருள் மறை ஓதி - அருள் நிலை நோக்கிடும் ஆயிரம் ஆயிரம் பல்லாயிரங் கோடி படைப்பினங்களிடையே-நாமும் இன்று வாழ்ந்து நிற்க விழைகின்றோம். விளைவுகளில் சிக்குண்டுவிடாமல் எச்சரிக்கையுடன் நடக்கக் கற்றுவருகின்றோம்.

அன்பையும் அருளையும் இணைத்து ஒருஇன்ப ஆட்சியைக் காணதுடிதுடித்து செயலாற்றுகின்றோம். அந்த ஆட்சி நம் காலத்திலேயே ஓங்கிட — உயர்ந்து பொலிந்திட ஓயாது உழைத்து இயங்குகின்றோம்.

அன்பு வேண்டி - அருள் நாடி நாம் உழைப்பது போன்று, நமக்கு முன்னரே வாழ்ந்த பலரும் உழைத்து நின்றனர் என்பதனை அவர்தம் அனுபவத்தின் வாயிலாய்—அவர்தம் வாய்மொழியின் வாயிலாய்-உணர்ந்துள்ளோம்.

மனத்தின் எழுச்சியினுல் ஏற்படும் ஆசைகள் புகை மயமானவை. அவை புகையும் பிழை சேர்ந்தவை. எனவே, அறிவை மங்கிடச் செய்யும் - அறிவின் சுடரை பொலிவு குன்றச் செய்யும்-மாக தன்-நம்மை மருள் மயமாக்கமுயலுகின்றன. அந்த முயலை நிறுத்தப் பழகிடும் பழக்கமே நம் வழக்கத்தில் வந்து சேர வேண்டும். பழகப் பழகப் பழகிவரும் ஒரு பழக்கம் அதுவாகவே அமைதல் வேண்டும்.

இருள்-புறவெளிக் கதிர்களை மங்கச் செய்தல் போல-மருள் அகஒளிக் கதிர்களை அமுக்கி-ஆழ்த்தி செயல்பட வலுப் பெறலாம்! சிறு தாரைகளை பெருந்தாரைகள் விரட்டுதல் போல், வலு குறைத்தவிடத்து-வலு கூடியவைஆட்சி அமைத்து விடலாம்.

ஆகவே முயற்சி உடையார் இகழ்ச்சியடையார். முயற்சி - மெய்வருந்தக் கூலிதரும்.

இஸ்லாமிய நெறி முறைகளின்படி அதன் திருமறைத் தொடரிலே-திருக்குர்ஆன் அருளப்பட்ட வொன்றேயாகும். அன்புக்காக பிறவி எடுத்த-அன்புக்காக வாழ்ந்து காட்டிய ஓர் உயர்நிலை ஜீவனுக்கு-அருள்பாலிக்கும் பான்மையினை-திருக்குர் ஆன் அருளப்பட்ட வழிமுறைகளில் நாம் கண்கூடாகவே காண்கின்றோம்.

அல்லா(ஹ்) என்னும் சர்வசக்தியும் திரண்டெழுந்த ஒன்று - தன்னுடைய ஒளியிலிருந்து உயிரினங்களை தோற்றுவித்த உண்மையினை, திருக்குர் ஆன் அழகுற எடுத்தியம்புகிறது. அவன் அருளால் ஒளிநுதல் முனைந்தெழுந்த அழகிய அமைப்பே நாமெல்லாம்.

அருள் ஒளி என்பது - அருள் மயத் திஞல் நிறைந்த - ஒரு முழுப் பெரும் நிறைவில் திளைத்து - பிணைத்தெழுந்த கதிர்கள் என்பதனை உணருகின்றோம்.

அழிந்துபோய் தாழ்வு நிலைக்கே சென்றடங்கி விடும் புறமுகத் தோற்றங்களை எல்லாம் கடந்து நின்ற அக முகங் குவித்து-அதில் அதுவாகவே கரைந்து நிற்குமிடத்தே-கரைகாணுத - கீழ்மேல் அழிந்தெழுந்த - திசைகள் கோணங்கள் தகர்த்தெழுந்த ஒளிமயம் மாசில்லாத வெண்ணிறையாக நிறைந்து-சர்வ சராசரங்களையும் விழுங்கி-தன்னுள் ஒளிமயமாகவே மாற்றிவிட்ட ஒரு புதுமையை-ஞானிகள் கண்டு களித்து அதிலேயே அடைந்து கிடந்தனர் - கிடக்கின்றனர்!

மனமுனைகள் யாவும் செத்து—மடிந்து-மக்கி இழந்து-அருள் ஒளியிலே கிடப்பதுதான் கிடத்தல் - அவனெடு கிளர்த்தல் ஆகும்.

அல்லாஹ் என்னும் பரம்பொருள் ஒளிமயத்தையேநிறைவாக்கிக்கொண்டு நிலைத்தது-என்பதை முஸ்லீம்கள் நம்புகின்றனர். அதனுலேயே-பேதங் கடந்த அபேத நிலையில்-ரூபங்கடந்த அரூப நிலையில்-மருள் கடந்த அருள் நிலையில்-நார் அகன்றநூரானியத்தில்-நெருப்புஅகன்ற ஒளிநிறைவில்-இறைவனைக்காண வணங்குகிருர்கள்.

அதன் விழுங்குதலில் தம்மைப் புகுத்திக்கொள்ள, ஒளிபுக்கி - ஒளித்துக் கொள்ள - ஒருமுகமே பெருமுகமாக்கி ஒடுங்குகின்ருர்கள். அந்த ஒளித்தலுக்கே இறை வணக்கம் என்றும் தொழுகை என்றும் பெயர்கூறி தன்னை ஒளியாக்கிக் கொள்ளத் தெளிவடையும் நிலைக்கு மக்கள் உயரவேண்டும் என நாம் வேண்டுகின்ருேம்.

## அருட்பெருஞ்சோதி

பிரிவற்றிருக்கும் பேரொளி யொன்றுதான் அறிஞர்கள் வணங்கும் அழியாத தெய்வம், காரணமுணராத பாமர மக்கள் கண்டதை யெல்லாம் நினைத்து மனதடங்காமல், துதித்துப் பயன் கிடைக்காமல் தூக்கித்துத் துன்பப்படுவர்.

# தேகாலயத்துள் தெய்வம் காண்மின்

—நாவற்குழி ரத்தினம்—

மாயையின் கண் தோன்றிய உலகியற் பொருள்களினிடத்தே வேட்கை கொண்ட மக்கள், உண்மையுணராது அவல நிலையடைந்து அல்லலுறுவதை நீக்கி, பேரானந்தப் பெரு வெளியில் திளைத்து, சோதிசொரூபனும் இறைவனின் பாதாரவிந்தத்தைச் சென்றடைவதற்கு நல்வழியாய்—செந்நெறியாய்—அமைந்ததே சமயம். சமயங்கள் பல. அவை எவ்வழிச் செல்லினும், அவற்றின் நோக்கமும், முடிவு மொன்றே. இதனாலன்றோ ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளினார்.

பற்பல சமய நெறிகள் இருப்பதனால், ஆங்காங்கே தத்தம் நெறிகளுக்கேற்ப ஆலயங்கள் அமைத்து, மக்கள் இறைவனை வணங்குகிறார்கள். குறியற்ற வாழ்வும், நெறியற்ற செய்கையும் சீரழிதல் போல, குறியற்ற வழிபாடும் பயனற்றுப் போகும். ஆகவே மன ஒருமைப் பாட்டிற்கு—வணக்கத்திற்கு—ஒருகுறி வேண்டுவது அத்தியாவசியமாகிறது. அதனாலேயே ஆலயத்தை அமைத்து, அதற்குள் உருபொருளை வைத்து, அதனை உற்றுநோக்கி, மெய்யன்போடு வணங்குகின்றார்கள். ஆலயம் (ஆ+லயம்) என்ற சொல், ஆன்மா ஒன்றுசேருமிடம் அல்லது ஒடுங்குமிடம் என்னும் பொருளை கொண்டது. ஊனுடலைக் குடிலாகக் கொண்ட ஆன்மா, அதனை விடுத்து பிறிதோரிடத்தில் ஒடுங்க முடியுமா? முடியாது. ஆதலின் ஆன்மா ஒடுக்கத்திற்கு ஊனுடல் அவசியமானதென்பது வெள்ளிடைமலை. இம்மறையை பாமரரும் உணர்தற் பொருட்டு, காயக்கோயிலின் சாயலில் கற்கோயில்களை அமைத்தனர் நம் முன்னோர். எச்சமயங்களும், அவ்வச்சமயத்தாபகர்கள், தாந்தாம் கண்ட இறைவனை, அனுபூதியை, மறைகளாகவும், மார்க்கங்களாகவும் வகுத்து, அவற்றிற்கமைய ஆலயங்களையும் வகுத்தனர். இதேபோன்று காலத்தை வென்று ஆதியாயமைந்த சைவசமயம் அமைத்த ஆகக்கோயிலுக்கும், ஆக்கக் கோயிலுக்குமுள்ள தொடர்பைச் சற்று ஆராய்வாம்.

இக்காயக் கோயிலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவை முறையே, ஆசனம் (முதுகெலும்பின் அடிப்பாகத்தைச் சேர்ந்த பகுதி) குய்யம், நாபி, மார்பு, கண்டம், புருவநடு என்பனவற்றை குறிக்கின்றன. அவற்றைக் கற்கோயிலில், முறையே சபாமண்டபம், அலங்கார மண்டபம், ஸ்நபன மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிரகம் (மூலஸ்தானம்) என ஆறுவகைமண்டபங்களாக அமைத்திருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் முன்பக்கமாகக் கோபுரமிருக்கின்றது. கோபுரம் பாதங்களைக் குறிக்கின்றது. அது கோயிலிருப்பதை நினைவு கூர்வதுடன் வழியில் செல்லும் மக்கள் புறத்தே நின்று வழிபடுவதற்கும் உறுதுணையாக அமைகிறது.

கோபுர வாசல் வழியே உட்சென்றதும் சபா மண்டபம் காட்சியளிக்கின்றது. அங்கே நின்று, மக்கள், மூலஸ்தானத்தை—சபாநாயகரை—வணங்கவேண்டும். அருளுரைகளை அடியார்கள் இவ்விடத்தே நடத்தலாம். அம்மண்டபம் காயக் கோயிலின் ஆசனம் போல் விளங்குகின்றது. அடுத்து அலங்கார மண்டபமிருக்கின்றது. அங்கே கொடித்தம்பம், பலிபீடம், நந்தி, முதலியன காணப்படுகின்றன. கொடித்தம்பத்தை வணங்கிப், பின் பலிபீடத்தையடைந்து சிவசக்தியை வணங்கி, ஆணவத்தால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கமாம் தீயகுணங்களை பலிபீடத்தில் பலியிட்டு, ஆன்மசுத்தி செய்து, மூலமூர்த்தியின் வாகனமாகிய நந்தியை வழிபடல்வேண்டும். நந்தி

வாகனமாகவும், வாயிற்காப்போனாகவும் அமைகின்றது. இந்த மண்டபம் காயக் கோவிலின் அடிவயிற்றுப் பகுதியைக் குறிக்கின்றது. அங்கு உணவை சீரணிக்கச் செய்து, இரத்தத்தைச் சுத்தமாக்கி, ஆன்ம நலத்திற்கும் உடல்நலத்திற்கும் ஆக்கம் செய்யப்படுகின்றது.

இந்த மண்டபத்திற்கு அடுத்ததாகஸ்நபன மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தில் கும்பபூசைகளும் மற்றும் பல கிரிகைகளும் நடைபெறுகின்றன. அவற்றைச் செய்வதினால் சக்தி கூடுகின்றது. அதேபோல நாபியும் வயிற்றுள் இருக்கும் சிசுவுக்கு ஆக்கத்தைக் கொடுத்து ஆண்மையை வளர்க்கின்றது. அடுத்த மண்டபமாகிய மகா மண்டபம் கோவிலின் மார்பாகக் காட்சியளிக்கின்றது. அங்கே எழுந்தருளுவிக்ரகம் இருக்கின்றது. அர்ச்சகர், முதலில் அம்மண்டபத்தில் நின்று மூலத்தானத்திற்கு பூசை செய்வார். அதே பூசையும் தீபாராதனைகளும் எழுந்தருளு விக்கிரகங்களுக்கும் நடைப்பெறும். காயக் கோயிலின் மார்பாகிய மண்டபத்திலிருந்து, புருவநடுவாகிய மூலத்தானத்தை நோக்கி உள்ளத்தால் பிரார்த்தனை செய்ய வேண்டும். காயத்தில்இரத்தாசயம் சுவாசப்பையாகியவை நன்றாக வேலை செய்து ஆன்மபலத்தை அளிக்கின்றன.

அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் அர்ச்சகர் நின்று மந்திரங்கள் சொல்லி பிரார்த்திப்பார். அதே போல பிண்டத்தில் நாவாகிய ஆசசகர் கண்டத்தில் நின்று போற்றுதல் செய்கின்றார். அர்ச்சகர் மந்திர உச்சாடனத்தின்பின் உள்ளொளியின் விளக்கமாக பஞ்சாலாத்தி ஏற்றி இறைவனின் தோற்றத்தை சோதி மூலம் காட்டுகிறார். மக்கள் எல்லோரும்அந்தத் தீபத்தை-சோதியை ஆனந்தத்துடன் 'அரகர' என்று சொல்லி கைகள் சிரமேற்குவிய, உள்ள முருக நின்று வணங்குகிறார்கள். அந்தச் சில நிமிடங்களுக்கு மக்கள், ஐம்புலன்களும் பார்வையேயாக மெய்மறந்து நிற்கும் நிலையடைகின்றனர்.

காயக்கோயிலின் புருவநடுவாகிய மூலத்தானத்தில் உள் ஒளி தோன்றச் செய்தால் பேரானந்தத்தைப் பெறலாம். அந்தப் பேரானந்தத்தைப் பெற்று இந்த ஆறு ஆதாரங்களுக்கு மேலாய் உச்சியில் உள்ள, ஆயிரத் தெட்டு இதழ்களையுடைய சகஸ்ராரம் என்னும் சிதாகாயத்தில் சஞ்சரிக்கும் பொழுது இறைவனுடன் இரண்டறக் கலக்கலாம். சகஸ்ராரம் என்னும் சிதாகாயத்தை கற்கோயிலில் மூலத்தானத்திற்கு மேலுள்ள விமானம் மூலம் விளக்கியுள்ளார்கள். குண்டலினிசக்தி என்னும் ஜீவான்மா மூலாதாரத்தில் (ஆசனத்தில்) ஆரம்பித்து, முதுகெலும்பின் வழியே மேற் கூறிய பகுதிகளுடாகச் செல்லும் பொழுது சக்தி வலுவடைந்து புருவநடுவில் பரமாத்மாவோடு கலந்து ஒளிவிடுகிறது. இவ்வொளி சிதாகாயப் பெருவெளியில் நித்திய சிவப்பிரகாசமாகப் பிரகாசிக்கின்றது.

மேற்கூறிய உண்மைகளை உணர்த்துதற்காகவும், மக்கள் கசடறக் கற்று கற்றவாறொழுகி, உண்மையின்பத்தைப் பெறுவதற்காகவும், ஔவை குறள் என்னும் நூலை இயற்றி,

''உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்'' என்றும்

''உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி ஆதியைநாடு'' என்றும் உடம்பின் பயனை ஔவையார் விளக்கியுள்ளார். நாயன்மார்களும், மாணிக்கவாசக சுவாமிகளும் மற்றும் பல அடியார்களும் இறைவனை அன்பு மலரால் ஆராதித்து, காயக்கோயில்களில் குடியிருத்தி, அவனுடன் இரண்டறக் கலந்தார்கள். இந்நிலையை கந்தர் அநுபூதியை யாக்கியளித்த அருணகிரிநாதர்,

''ஆனாவமுதே அயில்வேலரசே
ஞானாகரனே நவிலத்தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே'' என்று

பாடுகிறார். நிலையில்லாததும், என்னுடையதல்லாததுமான இந்தயாக்கையை எனது என்று நினைத்து மயங்கிய என்னை ''நீயே நான். நானே நீ'' என்று பேதமற ஆட்கொண்டு முழுமையாய் இருக்கும் பெரும்பொருளையும், அவன் தன்மையையும் விளக்க முடியுமோ என்றுதான் ஆதியில் இரண்டறக் கலந்த நிலையை விளக்க முடியாது மருள்கின்றார்.

நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனார், இறைவனுக்கு ஆலயம் அமைக்க விரும்பினார். இடம், பொருள், ஏவல்களில்லாமையால் மிகவருந்தி, தமது காயத்தையே கோயிலாக அமைத்து, சிவபிரதிஷ்டைக்கு ஒரு நன்னாளையும் குறித்தார். காஞ்சிபுரத்து அரசனாகிய காடவர்கோமான் ஒரு பெரிய கற்கோயில் கட்டி, அதே நன்னாளிலே, சிவபிரதிஷ்டை செய்ய நாட்குறித்தான். சிவபெரு

மான் கல்லாலயத்தில்புகாமல், காயாலயத்தில் புகுந்தருளினுரென்ருல் மெய்யுடலின்பெருமை தான் என்னே! உடல்-மெய்-உண்மை என்பன ஒரு பொருட் சொற்கள். மெய்யின்துணை கொண்டு, மெய்ப்பொருளாகிய இறைவனை அறிந்து அவனேடு கலத்தல் வேண்டும். மனிதப் பிறவியைக் கொண்டுதான், நம் பிறவித்துன் பங்களைக் களையலாம். அதற்காகவே, இறைவன் மனிதனை, பகுத்தறிவாகிய மேலான அறிவோடு படைத்து, பிறவிப் பயனுக்கேற்ப இன்ப துன்பங்களைக் கொடுத்து, தன்னை யுணரச் செய்கின்ருர்.

இறைவனுக்குத் தொண்டாற்றிய ஆலால சுந்தரராகிய சுந்தரமூர்த்தி நாயனுரும், தேவர் களுக்கு அரசனுகிய இந்திரனும் தாந்தாம் செய்த பாவங்களை நீக்க, மானிடப்பிறவி யெடுத்துச் சிலகாலம் பூமியில் வாழ்ந்து, பின் தத்தம் பழைமை நிலைகளை அடைந்தார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்தது இம் மனிதப்பிறவி. இதனுலன்ரே, ''மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே.'' ''அரிது அரிது மானிடராதல் அரிது.'' ''எண்ணரிய பிறவி தனில் மானிடப்பிறவியே அரிதிலும் அரிது காண்.'' ''இப்பிறவிதப்பினுல் எப்பிறவி வாய்க் குமோ?'' என்று, பலவாறு மானுட தேகம் எடுத்து சிவப்பிரகாசத்தைக் கண்டு, அனுப வித்த சிவானுபூதிகள் பலர் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய பெறுதற்கரிய பிறப்பைப் பெற்ற நாம் இறைவனைத் தேடிச் செல்ல வேண்டும். அதற்கு உள்ளத் தூய்மையும் உடற் தூய்மையும் அத்தியாவசியம். உள்ளத் தூய்மைக்கு, பிரார்த்தனை தியானம் முதலிய வற்றைத் தினமும் செய்து வரவேண்டும். கோயிலைக்கருங்கல்லால் அமைத்து, வலிமை யுடையதாகச் செய்வது போல, எமது உருவா கிய உடம்பை திரம்-வலிமை ஆக்குவற்கு தினமும் யோகப்பயிற்சி செய்து வரல் வேண்டும். அவ்வாறு உருத்திராக்கம் (உரு+திர+ஆக்கம்) செய்வதற்கு நல்ல உணவு வேண்டும். தாவர உணவு உடற் தூய்மையை தருவது. மாமிசபோசனம் உண்பது தவறு. ஊன் உண்டு உடலை உருப் படுத்துபவர்களுக்கு அருள் கிடையாது,

''தன்னூன்பெருக்கற்கு தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

என்பது பொய்யாமொழி தாவர போசனமே சிறந்த தென்பது தாவரம் என்ற சொல்லிலிருந்து அறியக் கூடியதாயிருக்கிறது. (தாவரம்-தா+வரம்) தாவர உணவுண்டு வரங்களைத் தா என்று வேண்டுதல் செய்தல் வேண்டும். உணவு மாத்திரம் உருத்திராக்கம் செய்யாது. யோகப்பயிற்சிகளும் அத்தியா வசியம். யோகப்பயிற்சியை ஒழுங்குடன் செய்து, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிவதற்கு, நெறி பட்ட சற்குரு நேர்வழிகாட்ட வேண்டும்.

''நெறிபட்டசற்குரு நேர்வழிகாட்டில்
பிரிவற்றிருக்கும் சிவம்.''

என்கிருர் ஒளவைப் பிராட்டியார். நாம் ஒரு மனத்தராய் ஆலயத்திற்குச் சென்று, உண்மை உணர்ந்து, வழிபடுவோமானுல், உண்மைப் பொருளை விளக்க ஒரு சற்குரு வருவான். ''மூர்த்தி, தலம், தீர்த்தம் முறை யாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.'' என்ற தாயுமானவர் கூற்று இதனை விளக்குகின்றது.

ஆலயத்தில் சென்று மூலஸ்தானத்தில் இருக்கும் விக்கிரகத்தை அன்புடன் உற்று நோக்கி வணங்குவோமாகில், எம்முள்ளத்தில் ஒருசாந்தி ஏற்படுவதை நாம் உணரமுடியும். அந்த உணர்வை பெறமுடியாதவர்களும், பெறமுயலாதவர்களும்,

''நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பஞ் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்— சுட்டசட்டி
சட்டுவங்கம் கறிச்சுவை யறியுமோ!''

என்ற சித்தரின் பாடலைப்பாடி தூற்றமுற் படுகின்றனரே யொழிய, நாதனை உள்ளுக்குள் காண முயலுகிருரில்லை,, ''சொல்லுதல் யார்க் கும் எளிய அரியவாம் சொல்லியவண்ணஞ் செயல்'' என்ற பொய்யா மொழிக்கிணங்க மக்கள் வாய்ப்பேச்சளவில் நிற்கின்ருர்களே யொழிய செயல்படுவதாகத் தெரியவில்லை. மனிதராகப்பிறந்து, நல்வாழ்வு வாழ்ந்த மக்களே சிவனடியார்கள். ஆகவே மனிதர் களாகப் பிறந்திருக்கின்ற நாம் ஏன் அடியார் கள் பெற்ற பயனைப் பெற முடியாது? ''முயற்சி திருவினையாக்கும்' ஆதலால் நாம் நம்முள் இறைவனை காண முயற்சி செய்வோமாக!

# அருளின் பெருமை அறியார் செறியார்

இ. வே. சுப்பிரமணியம்

அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே! என மனங்கசிந்து பாடுகின்றார் மணிவாசகர். உள்ளத்துள் ஒளியுமாகும் ஒற்றியூர் உடைய கோவே! என்று நாவார வாழ்த்துகின்றார் நாவுக்கரசர். சுடர் விட்டுளன் எங்கள் சோதி! என்கிறார் ஞானசம்பந்தர். ஊனேரிவ் வுடலம் புகுந்தாய் என்னொண் சுடரே! என வழுத்துகின்றார் வன்றொண்டர். எம் சைவத்தின் செம்மை சாற்றி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு படிகளையும் தாண்டி, அப்பாலும் சென்று அச் சற்குருநாதன் திருவடிகளைத் தஞ்சமெனக் கொண்டு இறவா இன்பம் பெற்று உய்திகண்டனர் இந்நால்வரும். அந்த அருட் பெருஞ் சோதியாகிய எம்பெருமானை சோதிமயமாக—ஒளி வடிவமாகக் கண்டு அவருடன் தாமே நேரில் கதைத்து அவரின் பேரின்பத்தைப் பெற்று மகிழ்ந்தனர்.

### சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்

ஆன்ம கோடிகளையெல்லாம் மாயையின் தோற்றமாகிய இப்பிரபஞ்சத்துள் உற்பவிக்கச்செய்து அவைகளைப் பீடித்துள்ள மல இருளை நீக்கி ஆட்கொள்ளும் அந்த ஆன்ம இரட்சகராகிய குருமூர்த்தியின் பேரருள் தான் என்னே! இறைவன் திருவுளப்படி இப் பிரபஞ்ச காரியத்தை இயக்கும் தொழிலைப் புரிவது இறைவனுடைய திருவருளாகிய சத்தியே. இதை நிறைவேற்றுவதற்காக எம்பெருமான் தன் திருவருட் சத்தியுடன் நீக்கமற நின்று விளங்குகின்றான். இவ்வுண்மையினை உமாபதிசிவாச்சாரியார்

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''

என்று அழகாக விளக்குகின்றார். உயிர்களெல்லாம் ஈற்றில் எம்பெருமானை அடைவதற்காக அவைகளைப் பிறவி எடுக்கச் செய்து உழல்வித்து, மெய்யுணர்வைக் கொடுத்து ஆன்மாக்களை வழிநடத்திச் செல்கின்ற அந்த அருட் சத்தி இறைவனுடன் பின்னமற இணைந்து நிற்கின்றது என ஆசிரியர் விளக்கிக் காட்டுகின்றார். இறைவனுடைய இந்த நிலையினையே நாம் சிவலிங்க மூர்த்தியென்றும் சதாசிவ மூர்த்தியென்றும் கொள்ளுகின்றோம். சத்தியும் சிவமும் சேர்ந்த - உருவமும் அருவமுமற்ற - இவை இரண்டிற்கும் பொதுவான இவ்வடிவினைச் சிவலிங்க வடிவம் என்று சொல்லுகின்றோம். உலகத்திலுள்ள ஆன்மாக்களை இரட்சிப்பதற்காகவே எம்பெருமான் இந்த வடிவில் விளங்குகின்றார். சிவன் கோவில்கள் எல்லாவற்றிலும் அதன் மூலத்தானத்தில் சிவலிங்க மூர்த்தியை எழுந்தருளச் செய்திருப்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம். சத்தியும் சிவமும் சேர்ந்த இறைவனுடைய திருமேனியை நாம் சாதாசிவத் திருமேனியென்றும் சொல்லுகின்றோம். உலகத்து ஆன்மாக்களை ஈடேற்றுவதற்காக என்னென்ன செய்யவேண்டுமென எண்ணுவது சிவம். எண்ணுபவற்றைச் செயல் படுத்துவது சத்தி. எண்ணமும் செயலும் ஒன்றோடொன்று சேர்ந்தே தொழிற்படுகின்றன. எனவே சத்தியும் சிவமும் ஒன்றையொன்று பிரியாத தனிப்பெரும் வடிவமாகும்.

### இரு பேரொளிகளும் இருள் மடந்தையரும்

இறைவனுடைய திருவருளின்றி ஆன்மாக்கள் தாமாக எம்பெருமானை உணரமாட்டா. சிவம் இல்லாமல் சத்தி தானாக ஒன்றும் செய்யமாட்டாது. சத்தியின் பிறப்பிடமே சிவம். சிவத்தின் பிரதிபிம்பமே சத்தி.

''சுத்தமாம் சத்தி ஞானச்சுடராகும்; சிவமொழிந்தச்
சத்தி தானின்றாம்; முன்னைத் தகவிலா மலங்கள் [வாட்டி
அத்தனைஅருளும்; எங்கும் அடைந்திடும் இருளகற்றி
வைத்திடும்; இரவிகாட்டும் வளரொளிபோன் [மகிழ்ந்தே''

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளால் இவ்வுண்மை நன்கு புலனாகும். சுத்த சத்தியென்று சொல்லப்படுவது இறைவனின் சிவஞானச் சுடரினையே. பரம்பொருளாகிய சிவமின்றி அச்சத்தி தானாகத் தோன்றாது. சத்தியாகியசிவ ஞானச்சுடர் பழவினைகளின்பாற் பட்டதாகிய மும்மலங்களையும் வாட்டி, எமக்குச் சிவத்தைக் காட்டியருளுகின்றது. எம்மைப் பீடித்துள்ள அஞ்ஞானத் திரையைக் கிழித்தெறியும் திரமும் இத்திருவருளுக்குண்டு. இச் சத்தியின் பிறப்பிடமும் தொழிற்பாடும் எத்தகையது என்று விளக்க வந்த ஆசிரியர் ''இரவி காட்டும் வளரொளி'' என்று எம்மவருக்குத் தெரிந்த உதாரணங்காட்டி விளக்கியுள்ளார். இப் பிரபஞ்சத்திலேயுள்ள சீவராசிகளையெல்லாம் தன் அரவணைப்பிலே துயிலவைத்து தாலாட்டிக் கொண்டிருக்கின்றாள் காரிருள் என்னும் காரிகை. ஒளியின்றி எதையும் காணவொட்டாமல் எம் ஊனக்கண்களுக்கு மறைப்புஎன்னும் திரை போட்டு தன் கரிய உருவத்தையே எமக்குக் காட்டி தனியரசு செய்கின்றாள். கிழக்கு வெளுக்கின்றமையை உணர்ந்து அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் இக் காரிகையின் இருண்ட மேனியில் சூரியன் தன் ஒளித்திரணைகளாகிய கதிர்க் கரங்களால் சிறிது சிறிதாகத் தீண்டுகின்றான். இதனைப் பொறுக்கமாட்டாத இருள் மங்கை தன் சிறையுள் வைத்திருந்த உலகத்துப் பொருள்களை எல்லாம் அந்தந்த இடங்களிலேயே உதறித்தள்ளிவிட்டு ஒளிந்தோடி மறைகின்றாள். உலகை மூடி மறைத்துக் கொண்டிருந்த இருள் நீங்குகின்றது.எங்கும் பேரொளிப் பிரபை தோன்றிச் சுடர் எறிக்கின்றது. காரிருளில் எம் ஊனக் கண்களினால் காணமுடியாது தேடித்திரிந்த பொருள்களையெல்லாம் இந்தப் பகலொளியில் நாம் காண்கின்றோம். இவைகள் எம் அனுபவத்தால் இரவிலும் பகலிலும் நாம் கண்டறிந்த உண்மைகளே. இஃதேபோன்றுதான் ஆன்மாக்களையெல்லாம் பந்தித்துள்ள மலவிருளின் நிலையும். மல இருள் என்னும் மங்கை எம்மைத் தன் இருகரங்களால் அரவணைத்து எமக்கு அஞ்ஞானம் என்னும் விடத்தையூட்டி நில்லாதனவற்றை நிலையினது என்று உணர்த்தி எம்மைத் தம்வசத்தராக்கி அரசு செய்கிறாள். இறைவனுடைய திருவருள் என்னும் கதிர் - சிவஞானம் என்னும் சுடர் - மலமாகி இருள்மங்கையின் கரிய மேனியைத் தீண்டுகிறது. இதன் வெம்மையைப் பொறுக்கமாட்டாத மலவிருள் மங்கை தன் சிறையுள் பிடித்து வைத்திருந்த ஆன்மாக்களை உதறித் தள்ளிவிட்டு ஓட்டம் பிடிக்கின்றாள். இவ்விருளின் பிடியினின்றும் விடுபட்ட ஆன்மாக்களாகிய நம் இறைவனை உணரும் மெய்யறிவினைப் பெறுகின்றோம். அருளாகிய தாய் இம் மெய்யறிவினை எமக்கு நல்கி எம்மை இட்டுச் சென்று எம் தாதையாகிய இறைவனை அடையச் செய்கின்றாள். இது ஆன்ம ஈடேற்றத்தின் தத்துவ உண்மையாகும். இவ்வுண்மையினை

''மாய நட்போரையும், மாயா மலமெனும் மாதரை [யும்
விய விட்டோட்டி, வெளியே புறப்பட்டு, மெய்யருளாம்
தாயுடன் சென்று பின் தாதையை கூடிப்பின் [தாயை மறந்து
ஏயுமதே நிட்டை, யென்றான்எழிற் கச்சிஏகம்பனே!''

என்ற பட்டினத்தடிகளின் பாடலில் இனிது விளங்கக் காணலாம்.

## சுடர் விட்டொளிரும் சோதிவடிவம்

சூரியன் உதயமாகின்றது. இவ்வுதய சூரியனிலிருந்து கிளம்பும் ஒளிக்கதிர்கள் உலகனைத் தும்பாய்ந்து பசுமையான பொருட்களை யெல்லாம் தம் வெம்மையால் வாட்டுகின்றன. எண்ணிறந்த மைல்களுக்கு அப்பால் சூரியன் சஞ்சரிக்கின்றான். இப்பால் நாம் சஞ்சரிக்கின்றோம். எமக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம் முழுவதிலும் சூரியனுடைய ஒளியே வியாபித்துக்கொள்கின்றது. எமது மேனியிலும் மற்றும் பொருள்களிலும் படும் அக் கதிர்களை வெயில் அல்லது வெளிச்சம் அல்லது ஒளி என்றுதான் நாம் சொல்கின்றோம். எனவே சூரியக் கதிர்கள் ஒளி என்னும் நாமத்தைப் பெறுகின்றன. இந்த ஒளிதான் எம் ஊனக் கண்களுக்குப் பார்வையை அளிக்கின்றது. சூரியன் இல்லையாயின் எமக்கு இந்த ஒளி எங்கிருந்து கிடைக்கப் பெறும். அஃதே போன்று சூரியனுக்கு இந்தஒளி இல்லாவிட்டால் சூரியனை நாம் எப்படிக்காண முடியும். எனவே சூரியனும் ஒளியும் ஒன்றையொன்று பிரியாதவை. இரண்டும் இணைந்தே இயங்கவேண்டியுள்ளன. இது போலத்தான் இறைவனும் அவனின் ஒளியாகிய சத்தியும். உடம்பில் வந்த உயிர்களுக்கு இவ்வுடலை ஓம்பும் வரைக்கும் சூரியனே வாழ்

வளித்து உய்ய வழிகாட்டுவதுபோல ஆன் மாக்களை உய்வித்து அவற்றை ஈடேற்றுபவர் சிவபெருமானே. எம்மைப் பந்தித்துள்ள மலவிருளை இறைவனின் சிவஞானஒளி வாட்டு கின்றது. அதனுல் எம்மைப் பீடித்துள்ள மலம் பரிபக்குவமடைவதுடன் நாமும் இறைவன் திருவடிகளைக் காணும் பாக்கியசாலிகளாகின் ரேும். சூரியன் என்றதும் அதன் ஒளிப்பிரவாக மான தோற்றம் எம்முன் தோன்றுகின்றது. அங்ஙனமே இறைவன் என்றதும் அப் பரம் பொருள் சோதிவடிவான - ஒளிவடிவான தோற் றத்துடன் தன் அடியார்கள் மனக் கண்களில் காட்சியளிக்கின்ருன். இக் காரணங்களால் தான் எம் சைவ அடியார்களும், நாயன்மார்க ளும் இறைவனைச் சோதிவடிவாக - ஒளிவடி வாகக்காண்கின்றனர்.

## பிறவாமற் போம்வழி நாடு மின்!

''சீராயிருக்க நின் அருள் வேண்டும்'' என்கின்ருர் தாயுமானவர். இவ்வுலகில் நாம் மனிதராய்ப் பிறந்துவிட்டோம். ஏன் பிறந் தோம்? பிறந்துவிட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? என்ற எண்ண அலைகளை எம் உள் ளத்துள் உலாவவிட்டு ஆய்தல் அறிவுடைமை யாகும். அப்பொழுது இக் கேள்விகளுக்கு ஏற்ற விடைகள் எம் சிந்தனையில் உதயமாகும். நாம் இயற்றிய பாவபுண்ணியங்களின் பயனுக - எமது ஆன்மா பரிசுத்தமடைய வேண்டும் என்னும் நோக்கத்துக்காக நாம் பிறவியெடுத் தோம். எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளை அடைவதற்கான வழிகளைத் தேட வேண்டும். மீண்டும் பிறந்து உழலாமல் இருக்க வேண்டும்.மேலும்எந்தப் பாவமூட்டைகளையுஞ் சுமவாதிருக்கவேண்டும். அதுவே நாம் இனிச் செய்யவேண்டியது, என்னும் பதில்களை நாம் பெறலாம். இவைகளில் நாம் எவற்றை இது வரை சாதித்து விட்டோம்? தொடர்ந்து தொடர்ந்தும் நாம் ஓயாப் பிறவிகளை எடுத்து வீணே உண்டும் உறங்கியும் இருந்தும் மடிந்தும் போவதனுல் பயன் எதுவும் ஆவதற்கில்லையே.

''இக்காய நீக்கி இனியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்காலம் உன்ன அருள்பெற லாகுமே'' என்னும்

திருமந்திரப் பாட்டு எமக்கு இடித்துரைக்கின் றது. இப்பொழுது நாம் அணிந்திருக்கும் இந்த மானிடச் சட்டை கிழியுமுன்னரே இன்னும் ஒரு பிறவியாகிய சட்டையை அணிந்து உழலாமல் நாம் செல்லவேண்டிய இடத்திற் குரிய பாதையை நாடவேண்டும். நாம் அடைய வேண்டிய இலக்கை நோக்கிப் பிரயாணம் செய்ய வேண்டும். அந்தப் பாதையை நாம் அடைய வேண்டுமானுல் - அது பற்றிய அறிவு எமக்கு ஏற்பட வேண்டுமானுல் - நாம் சற்று சிந்திக்க வேண்டும். இந்தப் பொய்யான உடம்பு எமக்குச் சொந்தமானதா? இவ்வுடம்பு எப்போது எம்முடன் வந்தது? எதற்காக வந் தது? இனி எக்காலம்வரை எம்முடன் தொடர்ந்து இது வரும்? என்ற சிந்தனை எமக்கு எழுமானுல் - இதன் உண்மையை நாம் உணர் வோமேயானுல் இறைவனுடைய திருவருளை நாம் பெறுவது திண்ணம். இறைவனுடைய அருள் எமக்குக் கிடைத்துவிட்டால் நாம் எமது பிறவியின் வேர் அறுக்கப்பட்டு இறைவனின் பேரானந்தப் பெருவாழ்வைப் பெற்றுய்யலாம். அப் பரம்பொருளின் பாதபங்கயங்களை நாம் கண்ணுரக்கண்டு களிபேருவகை கொள்ள லாம்.

''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தியால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே''

என்று அப்பர் சுவாமிகள் இறைவனுடைய கழலடிகளைக் காண்பதற்காய மார்க்கத்தினைக் கூறுகின்ருர். எமது உடம்பாகிய ஆலயத்துள் உள்ளமாகிய விளக்கிலே மெய்யுணர்வு என்கின்ற நெய்யினை ஊற்றி உயிராகிய திரியினை மயக்கி பக்தியாகிய ஞானத் தீயினுல் விளக்கை ஏற்றி நோக்குவேமானுல் - இறைவனை தியானிப்போமானுல் எம்பெருமானுடைய பாதார விந்தங்களை நாம் கட்டாயம் காண லாம். அவன் பாதார விந்தங்களினின்றும் பொங்கிப் பெருகும் பேரின்பத்தேறலை நாம் அள்ளி யள்ளி மாந்தலாம்.

# ශ්‍රී සත් චිත්‍රමුත්තු අඩිගල් ස්වාමිපාදයාණෝ

## උපත සහ ළමා විය

සෘෂිවරයන් සහ සාන්තුවරයන් පහළවූ ගුප්ත භූමියක්වූද, ගෞතම බුදුරජාණන් වහන්සේ, මහත්මා ගාන්ධි සහ වෙනත් උත්තරීතර හා අතිශුද්ධ පුත්‍රයන් බිහි කළාවූද භාරත දේශය තවත් ශ්‍රේෂ්ඨ සාන්තුවරයකුගේ නිජ භූමිය විය. මේ සාන්තුවරයානම් අති ශුද්ධ ශ්‍රී සත් චිත්‍රමුත්තු අඩිගල්ය. එතුමා උපත ලැබුවේ, 1914 අප්‍රියෙල් 1වැනි දින, සෞභාග්‍යමත් නගරයක් වන පඩිපුර වයිකයි ගංගාව අසල පිහිටි මානාංකුඩි නම් ග්‍රාමයෙහිය. උපත ලැබූ දිනයෙහි ලෝක විෂයට යටත්ව පවත්නා සියලු දෙයක්ම අනිත්‍ය යන්න කියා පෑමට දෝහෝයි උපත ලැබූ පැල ගිනිබත්විය. තවද, ඉන්පසුව මෙතුමා ගෙන යනලද වෙනත් ගමක තිබූ පැල්පතද ද අලු විය. මේ සිද්ධිය නිසාද වෙනත් අපූර්ව සිදුවීම් නිසාද ගමවැස්සෝ මෙතුමාට "සිතිරයි චූලියන්" යැයි විසුලු නාමය තැබූහ. එතුමාට සයමස් පිරෙන්නටත් පළමු එතුමාගේ මව කළුරිය කළාය. ඉන්පසුව එතුමා හදවඩා ගන්නා ලද්දේ සැත්තෑ වියෙහි සිටි තම මුත්තණිය විසිනි. මැ නිසා එතුමා ලන් උද්‍යෝගය එතුමා විමුක්තිය සඳහා සටන් කරන ප්‍රබල යෝධයකු කිරීමට සමත්විය.

ලාබාල වියෙහිද භාවනා යෝගීව සිටීමට එතුමා පුරුදු විය. කිප වතාවක්ම දෙවියන් වහන්සේ හා සමග සම්භාෂණය කරනවා දක්නට ලබින. මෙතුමා ජීවත්වීමේ අති මහත් පලය ලබා ගැනීමට දැඩි උනන්දුවක් දක්වීය. එක්විටම පෑ දින ගණනක් තිස්සේ නිසලව භාවනා යෝගීව සිටීමට එතුමා හුරු පුරුදු විය. එතුමා භාවනාවෙන් මිදී ප්‍රකෘති ස්වභාවයට පත්වූවිට සියල්ලෝම මවිතයට පත්වූහ.

## මෙතුමා කළ ආශ්චර්‍යමත් දෑ

ළමා වියෙහිදී ද, විශිෂ්ඨ අධ්‍යාත්මික බලයක් එතුමා සතුව තිබුනසේ පෙනේ. ආශ්චර්‍යමත් දෑ මගින් එතුමා ගමේ වැඩිමහල් අය මෙන්ම කුඩා අයද මවිතයට පත් කළහ. එබඳු බොහෝ අවස්ථා සඳහන් කිරීමට පිළිවන. එතුමා වරෙක සෙල්ලම් කරමින් සිටි කුඩා මුස්ලිම් දැරියක් වෙත පැමිණ විහිලුවට මෙන් සීනි ටිකක් ඉල්ලා සිටියේය. එවිට කුඩා දැරිය වැලි ටිකක් ගෙන එතුමා අත තැබීය. මේ වැලි ක්ෂණයකින් සීනි බවට පත්වූ අතර කුඩා දැරිය ඉන් මවිතයට පත්වූවාය. දිළිඳුව උපන් මෙතුමා දිළිඳුව ජීවත්විය. මුල් කාලයේදී මෙතුමා ජීවත්වූයේ පොල් අතු විවීමෙන්ය. එක් දිනක් පොල් අතු මිටියක් හිස තබාගෙන යාබද ගමට යනවිට මෙතුමාගේ සොහොයුරිය අපූර්ව සිද්ධියක් දුටුවාය. පුම්බාගත් පෙන ගොබයකින් යුක්ත නාගයකු මෙතුමා ගෙනගිය පොල්අතු මිටිය මත සිටිනවා ඕ දුටුවාය. ඈ ක්ෂණයකින් කෑගැසූ විට නාගයා ඇදී ගියේය. මේ නාගයා අද වුවද එතුමාගේ ආශ්‍රමයෙහි වාසය කරන අතර ඌ හැමදම රාත්‍රියෙහි මෙතුමාගේ කාමරයෙහි සිටිනැයි කියනු ලැබේ.

## විවාහ දිවිය

ගෘහපතියකුගේ ජීවිතය ආත්ම ක්ෂාත්ක්ෂාත්කරණය පිණිස එක් මගකි. මෙතුමා සිවකාමි අම්මාල් සමග විවා දිවියට පා තැබූ අතර, ඕ

ශූචිව කීකරු හිතවත් හවුල්කාරියක් වූවාය. මෙ දෙදෙනාට එක් දරුවෙකු ලැබුණ අතර ඒ කුඩා සිඟිත්තාට තම ගුරු දේවයානන්ගේ නම වූ 'තාප්පා ජෙගනාද ස්වාමිගල්' යන නාමය තබනු ලැබිය.

## සභය

